# ...த்தமிழ் வேந்தர்




மாடல் பப்ளிகேஷன்ஸ்

# [illegible] தமிழ் வேந்தர்

## (சேர - சோழ - பாண்டியர்)

Approved by the T.B.C. Gazette Supplement to Part I.B. d/19-11-46, page 23 for Form IV and V

ஆசிரியர் :

வித்வான் மா. இராசமாணிக்கம், B.O.L., L.T., M.O.L.

மாடல் பப்ளிகேஷன்ஸ்,

50, பத்ரையன் வீதி, ஜார்ஜ் டவுன்,

சென்னை.

பதிப்புரிமை]

[விலை அணா 14

First Edition—1946

## முகவுரை

இச்சிறுநூல், ஏறத்தாழக் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் கண்ணகியும் மணிமேகலையும் வாழ்ந்த காலங்களில்-தமிழகத்தை ஆண்ட **சேரன்-செங்குட்டுவன், சோழன் - நெடுமுடிக்கிள்ளி, பாண்டியன்-ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்** என்ற **முத்தமிழ் வேந்தர்** வரலாறுகளைச் **சிலப்பதிகாரம், மணிமேகலை** என்னும் காவியங்களைக் கொண்டு விளக்குவதாகும். இக்காவியங்களின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பது வரலாற்று ஆசிரியர்* துணிபாதலால், அக்காவியங்களைக் கொண்டு விளக்கப்படும் முத்தமிழ் வேந்தர் வரலாறுகளில், இரண்டாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் அரசியல் - சமயம் - சமுதாய வாழ்க்கை-கடல் வாணிகம் முதலிய விவரங்களை நன்கறிதல் கூடும். இதுகாறும் வெளிவந்துள்ள உரைநடை நூல்களில், மாணவர் எளிதிற் கற்கத் தக்கவாறு இம்மூவர் வரலாறுகளும் வெளிவந்தில என்பதைத் தமிழ் உலகம் அறிந்திருக்கலாம்; ஆதலின், தமிழ் அறிஞர் உலகம் இம்முயற்சியைப் பாராட்டும் என்பது எனது நம்பிக்கை.

சேக்கிழார் அகம்,
சென்னை.

**மா. இராசமாணிக்கம்**

---

* Vide Dr. S. K. Aiyangar's 'Manimekalai in his historical Setting.'

# பொருள் அடக்கம்

எண் பக்கம்

## 1. சேரன் - செங்குட்டுவன்


| | | |
|---|---|---|
| 1. | சேர நாடு ... | 1 |
| 2. | சேர வேந்தர் ... | 6 |
| 3. | செங்குட்டுவன் - இளமையும் கல்வியும் கல்விப் பயிற்சியும் ... | 9 |
| 4. | இளங்கோ 'அடிகள்' ஆதல் ... | 12 |
| 5. | சேர மன்னன் - செங்குட்டுவன் ... | 18 |
| 6. | செங்குட்டுவன் போர்ச் செயல்கள் ... | 20 |
| 7. | நண்பரும் மனைவி மக்களும் ... | 24 |
| 8. | மலைவளம் காணல் ... | 27 |
| 9. | கண்ணகி வரலாறு ... | 31 |
| 10. | கண்ணகிக்குக் கோவில் எடுப்பிக்க யோசனை ... | 41 |
| 11. | வடநாட்டு யாத்திரை ... | 44 |
| 12. | கோவில் அமைத்து விழாச் செய்தல்... | 56 |



## 2. பாண்டியன் - நெடுஞ்செழியன்


| | | |
|---|---|---|
| 1. | புலவன் - புரவலன் ... | 65 |
| 2. | 'ஆரியப் படை கடந்த' நெடுஞ் செழியன் ... | 67 |
| 3. | கோப்பெருந் தேவியின் சிலம்பு ... | 69 |
| 4. | கண்ணகியின் காற்சிலம்பு .... | 71 |
| 5. | அரண்மனையில் ஆடல் - பாடல் ... | 74 |
| 6. | கோவலன் கொல்லப்படல் ... | 76 |
| 7. | அரசி கண்ட தீக்கனா ... | 78 |
| 8. | கண்ணகி வழக்குரைத்தல் ... | 79 |
| 9. | நெடுஞ் செழியன் நல்லியல்புகள் ... | 85 |

எண் பக்கம்

## 3. சோழன் - நெடுமுடிக் கிள்ளி


| | | |
|---|---|---|
| 1. | நெடுமுடிக் கிள்ளி அரசன் ஆதல் | ... 87 |
| 2. | காவிரிப்பூம் பட்டினம் | ... 89 |
| 3. | மணிமேகலையும் உதயகுமரனும் | ... 94 |
| 4. | மணிமேகலையும் நெடுங்கிள்ளியும் | .... 98 |
| 5. | உதயகுமரன் கொல்லப்படல் | ... 104 |
| 6. | நெடுங்கிள்ளியின் மானவுணர்ச்சி | ... 107 |
| 7. | அரசியும் மணிமேகலையும் | ... 109 |
| 8. | பூம்புகார் அழிவு | ... 109 |


வட பெண்ணை
வேங்கடம்
தொண்டை நாடு
காஞ்சிபுரம்
பாலாறு
கடல்மல்லை
மரக்காணம்
தகடூர்
தென்பெண்ணை
நடு நாடு
கொல்லிமலை
வடவெள்ளாறு
காவிரிப்பூம்பட்டினம்
கருவூர்
காவிரி
சோழ நாடு
உறையூர்
நாகப்பட்டினம்
தென்வெள்ளாறு
சேர நாடு
தொண்டி
வஞ்சி
முசிறி
பெரியாறு
மதுரை
வைகை
தொண்டி
பாண்டி நாடு
தாமிரபரணி
கொற்கை
பொதியமலை
கன்னிமுனை
வங்கக் கடல்
அரபிக் கடல்

# சேரன் - செங்குட்டுவன்

## 1. சேர நாடு

### தமிழ்நூல்கள்

நாம் பேசுகின்ற மொழி **தமிழ்**. ஆதலால் நாம் **தமிழர்** எனப் பெயர் பெறுவோம். நாம் பெற்றுள்ள நூல்கள் **தமிழ்நூல்கள்** எனப்படும். அவை (1) சங்கத் தமிழ்நூல்கள், (2) இடைக் காலத் தமிழ்நூல்கள், (3) பிற்காலத் தமிழ்நூல் கள் என மூவகைப்படும். இவற்றுள் சங்கத் தமிழ் நூல்கள் என்பவை, பாண்டியர் வளர்த்து வந்த தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிப்பட்ட நூல் கள் ஆகும். அவை தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள் என்பன. அக்காலத் திற் செய்யப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரண்டு பெரிய காவியங்களும் சங்க நூல்கள் எனப்படும். இவை அனைத்தையும் பாடியபுலவர் நூற்றுக்கணக்கானவர். அப்புலவர் பலருடைய பாக்களைக்கொண்ட தொகுப்பு நூல் களே புறநானூறு முதலிய ஒன்பது நூல்கள். அவர்கள் காலம் இன்னது எனத் திட்டமாகக் கூறக் கூடவில்லை. ஆயின், சங்கத்தின் இறுதிக் காலம் ஏறத்தாழக் கி. பி. 400 எனக் கூறலாம். நாம் பெரும்பாலும் இச்சங்க நூல்களைக்

கொண்டே கி. பி. 400-க்கு முற்பட்ட தமிழக **வரலாறு** கூறவேண்டுபவராக இருக்கின்றோம். ஆதலின், அவற்றின் துணையைக் கொண்டு சங்க காலத் தமிழக வரலாற்றை இங்குக் காண்போம்.

**சங்க காலத் தமிழகம்**

சங்க காலத்தில் (கி. மு.—கி. பி. 400) தமிழகத்தின் வடஎல்லை, நீலவண்ணப் பெருமாள் நின்ற கோலத்துடன் விளங்கும் வேங்கடமலை ஆகும்; "நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம்செய் குமரி" யம்மன் கோவில் தென் எல்லையாகும்; வங்கக்கடல் கிழக்கு எல்லையாகும்; அரபிக்கடல் மேற்கு எல்லையாகும். இனி, இத் தமிழகம் நமது செங்குட்டுவன் காலமாகிய கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எவ்வாறு இருந்தது என்பதைக் காண்போம்.

**தமிழகப் பிரிவுகள்**

தமிழகத்தை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை தொண்டை நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, கொங்கு நாடு, சேர நாடு என்பன. இவற்றுள்,

**1. தொண்டை நாடு** என்பது வடக்கே வேங்கடம் முதல் தெற்கே சிதம்பரத்திற்கருகில் பாயும் வெள்ளாறு வரையுள்ள நிலப்பரப்பாகும். இதன் தலைநகரம் காஞ்சி மாநகரம். மல்லை (மஹாபலிபுரம்), சோபட்னம் (மரக்காணம்) என்பன துறைமுகப் பட்டினங்கள் ஆகும். இந்நாட்டில் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்

னும் ஐவகை நில அமைப்பும் காணலாம். இந்நாட்டில் கெடிலம், தென்பெண்ணை, பாலாறு என்னும் ஆறுகள் பாய்கின்றன. ஆறுகள் இல்லாத இடங்களில் ஏரிகளும் பெருங்கிணறுகளும் உண்டு. இந்நாட்டைக் கைப்பற்றிச் சோழ அரசர்கள் ஆண்டுவந்தனர். சோழப் பிரதிநிதி காஞ்சியில் இருந்து இந்நாட்டை ஆண்டு வந்தான்.

**2. சோழ நாடு** என்பது மேற்சொன்ன வெள்ளாற்றை வடஎல்லையாகவும் புதுக்கோட்டைச் சீமையிலிருந்து கிழக்கு நோக்கிப்பாயும் தென் வெள்ளாற்றைத் தென் எல்லையாகவும் பெற்றதாகும். இந்நாடு மேடுபள்ளமற்ற சமவெளியாகும். இது, "செவிலித் தாய் என்ன ஓம்பும் தீம்புனற் கன்னி"* என்று புலவரால் பாராட்டப்படும் **காவிரியாறு** தன் உபநதிகளுடனும் கிளைநதிகளுடனும் வற்றாது பாய்ந்து வளம் படுத்தும் நாடாகும். வளமிக்க இந்நாட்டைத் தொன்றுதொட்டு ஆண்டுவந்த காரணத்தால், சோழ மரபினர் 'வளவர்' எனப் பெயர்பெற்றனர். இந்நாட்டின் தலைநகரங்கள் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் என்பன. காவிரிப்பூம்பட்டினம் துறைமுக நகரமுமாகும். செங்குட்டுவன் பட்டம் பெற்ற காலத்தில் இதனை ஆண்டுவந்தவன் செங்குட்டுவன் அம்மான் ஆவான்.

**3. பாண்டிய நாடு** என்பது தென் வெள்ளாற்றை வட எல்லையாகவும், குமரிமுனையைத் தென் எல்லையாகவும் வங்கக்கடலைக் கிழக்கு

எல்லையாகவும், இன்றைய திருவாங்கூர்ச்சீமையை மேற்கு எல்லையாகவும் பெற்ற நிலப்பகுதியாகும். இதன்கண் இன்றைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள் அடங்கும். இந்நாட்டில் மலைகள் மிக்குள்ளன. இந்நாட்டின் தலைநகரம் **மதுரை**. துறைமுகப்பட்டினம் **கொற்கை** என்பது. கொற்கை முத்துக்குப் பெயர்பெற்ற இடமாகும். பாண்டியநாட்டு முத்து, ஆடை வகைகளும் பிறபொருள்களும் அயல்நாடுகட்கு ஏற்றுமதி யாயின. இந்நாட்டைச் செங்குட்டுவன் பட்டம் பெற்ற காலத்தில் **நன்மாறன்** என்பவன் ஆண்டுவந்தான். அவனுக்குப் பிறகு செங்குட்டுவன் காலத்திலேயே இந்நாட்டை ஆரியப்படை கடந்த **நெடுஞ்செழியன்** என்பவன் அரசாண்டான்.

**4. கொங்கு நாடு** என்பது சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஜில்லாக்களைக் கொண்ட நிலப்பரப்பாகும். இந்நாடு மலைநாடாகும். இந்நாட்டை எந்தப் பேரரசனும் ஆண்டதில்லை. இதனைச் சிற்றரசர் பலர் பல பகுதிகளில் இருந்து அரசாண்டனர். தகடூர் (தர்மபுரி) என்பதைத் தலைநகராகக் கொண்டு அதனைச் சுற்றியுள்ள பகுதியை **அதியமான்கள்** என்னும் சிற்றரச மரபினர் ஆண்டுவ[ந்]தனர். கொல்லிமலைப் பிரதேசத்தைக் **கொல்லி மழவர்** மரபினர் அரசாண்டனர். உடுமலைப் பேட்டைத் தாலூகாவில் உள்ள **முதிரமலை** (இன்றைய குதிரைமலை) நாட்டைக் குமணன் மரபினர் அரசாண்டுவந்தனர். இந்நாட்டில் கொங்கு (தேன்)

அதிகமாகக் கிடைப்பதால் இந்நாடு - 'கொங்கு நாடு' எனப் பெயர்பெற்றது என்னலாம். கொங்கு என்பது 'பொன்' என்றும் பொருள் படும். பொன்கிடைத்து வந்தகாரணத்தால் இது 'கொங்கு (பொன்) நாடு' எனப் பெயர் பெற்றது என்று கூறுதலும் பொருத்தமே ஆகும்.

5. **சேர நாடு** என்பது இன்றைய கொச்சி, திருவாங்கூர் நாடுகளும் மலையாள ஜில்லாவும் சேர்ந்த நிலப்பகுதி யாகும். இந்நாடு மலைநாடு; அதனால் இங்குள்ள மக்கள் 'மலையாளிகள்' எனப் படுவர். இங்கு வானளாவிய மலைகள் மிக்கிருப்ப தால் இதனை யாண்டவர் 'வானவர்' எனப்பட்ட னர். இந்நாடு யானைகட்குப் பெயர் பெற்றது. மலைகளை அடுத்துள்ள பெருங்காடுகளில் அகில், சந்தனம், தேக்கமரங்கள் ஓங்கி வளர்ந்து பயிரா கின்றன. இம்மரத்துண்டங்களும் மிளகும் யானைத் தந்தமும் அயல்நாடுகட்கு ஏற்றுமதியாயின. இம் மலை வளம் செறிந்த நாட்டைத் தன் வெள்ளப் பெருக்கினல் அழகு செய்வது **பேரியாறு** என்பது. இது பழங்காலத்தில் புலவர் புகழுக்கு உரிய ஆருக இருந்தது. வளமிக்க இந்நாட்டிற்குப் புகழ்மிக்க **வஞ்சி மாநகரம்** கோநகரமாக இருந்தது. **முசிறி, தொண்டி** என்பன இதன் துறைமுக நகரங் கள் ஆகும். சேர நாடு ஏறத்தாழக் கி. மு. ஆயி ரம் முதலே மேல் நாடுகளுடன் கடல்வாணிகம் செய்துவந்தது. சேர நாட்டு மிளகும், யானைத் தந்தமும் சந்தனம், அகில் முதலிய வாசனைப் பொருள்களும் மேனுட்டு மக்களால் விரும்பி ஏற்

றுக்கொள்ளப்பட்டன. இந்நாட்டைப் பன்னெடுங் காலமாகச் **சேரலர்** அல்லது **சேரர்** என்ற அரச மரபினர் ஆண்டுவந்தனர்.

## 2. சேர வேந்தர்

### சேரரது பழமை

சேர மரபின் பழமையை அறியத்தக்க சான்றில்லை. 'சேர - சோழ - பாண்டியர்' என்ற வழக்காறு கொண்டு பார்ப்பின், இவர் தம் பழமையைப் பாங்குற உணரலாம். தொல்காப்பியர் மூவேந்தர் மாலைகளைக் குறித்த பொழுது, 'போந்தை,' என்று சேரர்க்குரிய பனம்பூ மாலையையே முதலிற் கூறிச் சென்றார். மூவரசரையும் குறித்த சங்ககாலப் புலவரும் 'சேரன், செம்பியன், செழியன்' என்று, சேரனையே முதற்கண் கூறுதலும் நோக்கத்தக்கது. இங்ஙனம் வந்துள்ள பழைய வழக்காறுகளை நோக்க, மரபுகளில் சேரர் மரபு மிகவும் தொன்மை வாய்ந்தது என்று நினைக்க இடமுண்டாகின்றது.

வால்மீகி இராமாயணத்தில் சேர நாடு (சேரலர் நாடு) **கேரள நாடு** என்றும், முசிரி என்ற பழைய துறைமுகம் 'முரசீபத்தனம்' என்றும் குறிக்கப்பட்டுள்ளன. '**முசிரி**' என்ற துறைமுகப்பட்டினம் **சுள்ளி** என்னும் பேரியாறு கடலொடு கலக்கும் இடத்தில் அமைந்திருந்த பெரிய துறைமுக நகரம் ஆகும். இது சேரருடைய தலைநகரங்களில் ஒன்றாகவும் இருந்தது. மேனாட்டாருடைய மரக்கலங்கள் மிளகு முதலிய

பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு இந்நகரமே வசதியுடையதாக இருந்தது என்றும் தமிழ் நூல் களும் **தாலமி** முதலிய மேனாட்டு யாத்ரிகர்குறிப்பு களும் உரைக்கின்றன.

மஹாபாரதத்தில், சேரர் பாண்டவர் பக்கம் நின்று போர் புரிந்தவர் என்பது கூறப்படுகிறது. இதற்கேற்பப் புறநானூற்றில் ஒரு பாடல் இருக் கின்றது. அஃது, **உதியன் சேரலாதன்** என்பவன் பாரதப்போர் முடியுமளவும் போரிட்ட படை கட்குப் பெருஞ்சோறு வழங்கியதாகக் கூறு கின்றது. இச்செய்தியைச் செங்குட்டுவன் தம்பி யாரான இளங்கோ அடிகளும் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்திற் பாராட்டியுள்ளார்.

ஏறத்தாழக் கி. மு. மூன்றும் நூற்றுண்டில் வாழ்ந்த மௌரியப் பேரரசனான **அசோகன்** தன் கல்வெட்டுகள் இரண்டில் சேரரைக் **கேரள புத்திரர்** என்று குறித்துள்ளான். இந்தியாவின் பெரும் பகுதியைப் பிடித்தாண்ட அப்பேரரசனுக் குத் தமிழ் அரசர் நண்பராக இருந்தனர்; சுயேச்சை பெற்றிருந்தனர்.

**பதிற்றுப் பத்து**

இது சங்க நூல்களில் ஒன்றாகும். இந்நூல் சேர மன்னரையே பற்றியதாகும். இதன்கண் 'பத்து—பத்துகள்' (நூறு பாடல்கள்) இருந் தன; ஒவ்வொரு பத்தும் ஓரரசன்மீது பாடப் பெற்ற பத்துப் பாக்களைக் கொண்டதாகும். அவற்றுள் முதற்பத்தும் பத்தாம் பத்தும் அழிந்து

விட்டன. எஞ்சிய எட்டுப் பத்துகளும் நூல் வடிவில் வந்துள்ளன. அவற்றைப் 'பதிற்றுப் பத்து' என்னும் பெயரில் வெளியிட்ட பெரியார் - தமிழ்ப் பெரும்புலவராகிய **டாக்டர் - உ. வே. சாமிநாதையர்** ஆவர். இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சேரவேந்தர் இவராவர் —

1. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
2. பல்யானைச் செல்கெழு குட்டுவன்
3. களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல்
4. கடல் பிறக்கோட்டிய **செங்குட்டுவன்**
5. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
6. செல்வக் கடுங்கோ வாழியாதன்
7. பெருஞ்சேரல் இரும்பொறை
8. இளஞ்சேரல் இரும்பொறை

இந்நூலில் இவ்வெண்மருடைய அரசியற் சிறப்பு, போர்ச் சிறப்பு, குணதிசயங்கள், தமிழை வளர்த்தமை, புலவரை ஆதரித்தமை போன்ற பல செய்திகள் கூறப்பட்டுள்ளன.

### சேரர் மரபினர்

இப்பதிற்றுப் பத்தையும் பிறநூல் பாடல்களையும் நோக்க, 'இரும்பொறை' என்று முடியத்தக்க பெயர்களுடைய சேர மரபினரும் உண்டு என்பது தெரிகிறது. அம் மரபினர், வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு சேரப் பெருநாட்டை யாண்ட செங்குட்டுவன் மரபினர்க்கு நெருங்கிய உறவினரே யாவர். ஆதலின், அவர்கள் தொண்டி, மாந்தை முதலிய நகரங்களைச்

சூழவுள்ள பகுதிகளைப் பேரரசன் பிரதிநிதிகளாக இருந்து அரசாண்டு வந்தனர். இம்மரபினர் சிலருடைய பெயர்கள் பழந்தமிழ் நூல்களிற் காண்கின்றன. அவை யாவன :—

1. கருவூர் ஏறிய பெருஞ்சேரல் இரும்பொறை
2. அந்துவஞ்சேரல் இரும்பொறை
3. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
4. இளஞ்சேரல் இரும்பொறை
5. யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை
6. கணைக்கால் இரும்பொறை

## 3. செங்குட்டுவன் - இளமையும் கல்வியும்

### செங்குட்டுவன் உறவினர்

சேரநாட்டை ஆண்ட பெருவேந்தருள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தவன் **நெடுஞ் சேரலாதன்** என்பவன். இவன் பேராற்றல் படைத்த பெருவீரன். இவன் இமயம் வரை சென்று மீண்டதால் 'இமய வரம்பன்' - எனப் பெயர் பெற்றனன் போலும்! இவனுக்கு மனைவியர் இருவர் இருந்தனர். அவருள் மூத்தவள் பெயர் **நற்சோணை** என்பது. இளையவள் வேள்-ஆவிக்கோமான் என்பவன் மகள் ஆவள்.

மூத்தவள் சோழன் மணக்கிள்ளி என்பவன் மக ளாவள். அவளுக்குச் **செங்குட்டுவன், இளங்கோ** என்ற மைந்தர் இருவர் பிறந்தனர். இளையவளுக் குக் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், ஆடு கோட்டுபாட்டுச் சேரலாதன் என்ற மைந்தர் இருவர் இருந்தனர். வேள் - ஆவிக் கோமான் என்பவன் பழநிமலை நாட்டை ஆண்ட பேகன் மரபினன்.

## இளமையும் கல்வியும்

நெடுஞ்சேரலாதன் சிறந்த போர்வீரன் ஆத லின், தன் மக்களுக்கு யானையேற்றம், குதிரை யேற்றம், விற்போர், வாட்போர், மற்போர் முத லிய போர்ப் பயிற்சிகளைக் குறைவற அளிக்க ஏற்பாடு செய்தான். பண்பட்ட படைத் தலைவர் முன்னிலையில் இப்பயிற்சிகள் அளிக்கப்பட்டன. கடலில் மரக்கலம் செலுத்துதல், மரக்கலம் செலுத்திப் பகைவரை அடக்குதல் முதலிய பயிற்சிகளிலும் அரசிளங்குமரர் தயாராயினர். அவர்கட்குத் தமிழ்நாட்டு நில அமைப்பு, தமிழ் நாட்டுப் பிரிவுகள், ஒவ்வொரு நாட்டையும் ஆண்டுவந்த மரபுகளைப்பற்றிய செய்திகள், சுற் றப்புற நாட்டுப் பேரரசர் - சிற்றரசர் இவர்தம் படைபலம் முதலியனவும் அறிவிக்கப்பட்டன. இவற்றுடன் நாட்டை ஆளவேண்டிய முறை, குடிகளைப் பாதுகாக்க வேண்டிய வழிகள் முத லிய அரசியல் சம்பந்தமான செய்திகளும் கற்பிக் கப்பட்டன.

**தமிழ்க் கல்வி**

இவை அனைத்திற்கும் மேலாக அரசிளங்குமரர் தமிழ்க் கல்வி பயிலத் தொடங்கினர். நெடுஞ்சேரலாதன் சிறந்த தமிழ்ப் பற்றுடையவன் ஆதலால் அவனது பேரவையில் பெருந் தமிழ்ப் புலவர் பலர் இருந்தனர். அரசன், அவருட் சிறந்தவர் ஒருவரை அரசிளங்குமாரர்க்குத் தமிழ்க் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்தான். அப் பெரும்புலவர் தம் காலத்தில் இருந்த தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களையும் பெருநாரை, பெருங்குருகு, பரிபாடல், முதலிய நூல்களையும் அக்காலத்தில் இருந்து இன்று அழிந்துபட்ட காவியங்களையும் பிற புலவர் தனிப் பாடல்களையும் முறையாகக் கற்பித்தார்.

**இருவர் இயல்புகள்**

**செங்குட்டுவன்** போர்ப்பயிற்சியில் மிகுந்த கவனத்தைச் செலுத்தினன். அவனது கூரிய அறிவு அரசியல் அமைப்பிலும் பல நாட்டுப் பண்புகளை அறிவதிலும் சென்றது. உத்தம அரச லக்ஷணங்கள் வாய்க்கப்பெற்ற அப்பெருமகன் தன் புகழை நிலைநாட்டுவான் என்பதை நெடுஞ்சேரலாதன் உணர்ந்து மகிழ்ந்தான். **இளங்கோ** தமையனைவிட அரச லக்ஷணங்கள் மிகுதியாகப் பெற்றவர். எனினும், அவரது உள்ளம் சமய ஆராய்ச்சியிலும் தமிழ் ஆராய்ச்சியிலும் மிகுந்த கவனத்தைச் செலுத்தியது. அவர், தம் காலத்திருந்த தமிழ் நூல்களை நன்றாகப் படித்துப் பெரும் புலவராய்

விளங்கினர்; தம் காலத்தில் தமிழகத்தில் சிறப்புற்றிருந்த சைவம் - வைணவம் - பௌத்தம் - சமணம் முதலிய மதங்களைப் பற்றிக்கூறும் நூல்களை நன்ருக ஆராய்ந்தார். அவரது உள்ளம் சமய ஆராய்ச்சியில் ஈடுபட்டது. அதன் பயனுக அவர் துறவு நிலையைப்பற்றிச் சிந்திக்கலானர்.

## 4. இளங்கோ 'அடிகள்' ஆதல்

**அரசன் பேரவை**

நெடுஞ்சேரலாதன் வயதுவந்த தன் மக்கள் இருவரையும் நாள்தோறும் பேரவைக்கு அழைத்துச் சென்றான்; அங்குத் தன் அரியணைக்கு இரு புறங்களிலும் இரண்டு ஆசனங்கள் இட்டு அவர்களை அமரச்செய்தான். மக்கள் இருவரும் அப்பேரவையில் நாடோறும் நடைபெற்றுவந்தஅரசியற் செய்திகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துவந்தனர். அவ்விருவரும் இவ்வாறு கவனித்துவந்ததால் பண்பட்ட அரசியல் அறிவைப் பெற வழி உண்டாயிற்று. தந்தை, தன் மக்களுடைய அரசியல் அறிவினைச் சில சந்தர்ப்பங்களிற் சோதித்து மகிழ்வதுண்டு.

**வேற்றுநாட்டுச் சோதிடன்**

ஒருநாள் பேரவையில் யாவரும் கூடியிருந்து அரசியல் அலுவலைக் கவனித்துவந்தனர். அப்பொழுது வேற்று நாட்டுச் சோதிடன் ஒருவன் அங்கு வந்தான்; பெருமன்னனுக்கும் அரசிளங் குமரர்க்கும் மரியாதைசெய்தான்; தன் வரலாறு

கூறினான். அரசன் அவனை ஒருபுறம் அமரச் செய்து, தன் வேலைகளைக் கவனித்துக்கொண் டிருந்தான். புதிதாக வந்த அச்சோதிடன் அர சிளங்குமரர் இருவரையும் மாறிமாறிப் பார்த் துக்கொண்டிருந்தான்.

**சோதிடன் 'சோதிடம்' கூறல்**

அரசன் பேரவையில் அரசியல் அலுவல்கள் கவனிக்கப்பட்டுவந்தன. அவ்வமயம் அரசிளங்கும ரரை மாறிமாறிப்பார்த்துக்கொண்டிருந்த சோதி டன் திடீரென எழுந்தான்; அரசனைப் பணிந் தான்; பணிந்து, "அரசே, உமக்கு இருபக்கங்களி லும் வீற்றிருக்கின்ற அரசிளங்குமரர் அரச இலக்கணங்கள் அமையப்பெற்றுள்ளனர். ஆயின், இருவருள் இளையவரிடமே அவை சிறந்து காண் கின்றன. ஆதலின், உமக்குப்பின் சேரப் பேரரசர் ஆதற்கு இளையவரே ஏற்றவராவர்", என்றான்.

**இளங்கோவின் சீற்றவுரை**

சோதிடன் பேச்சைக் கேட்டதும் அவை யில் இருந்தவர் திகைப்படைந்தனர்; அரசனையும் அரசிளங்குமரரையும் மாறிமாறிப் பார்த்தனர். அதே சமயத்தில் அரசன் தன் இருமைந்தர் முகங் களையும் கவனித்தான்; திடீரென்று சோதிடன் பேசிவிட்டதால் அவன் மனநிலை குழப்பமடைந் தது. செங்குட்டுவன் முகம் சோர்வுற்றது. இளங் கோவின் முகம் சீற்றத்தால் சிவந்தது. அவர் உடனே எழுந்து சோதிடனைப் பார்த்து, "சோதி டனே, நீ என்ன சொன்னாய்? என்னிடம்

என்னென்ன அரச லக்ஷணங்கள் இருக்கின்றன? என் தமையனாரிடம் என்னென்ன குறைவாகக் காண்கின்றன? இளையவனிடம் உண்மையாகவே லக்ஷணங்கள் மிகுந்து காணப்படினும், மூத்தவன் இருக்க, இளையவன் பட்டமடைதல் ஏற்றதாகுமா? நீ சற்றும் யோசியாமல் வாயில் வந்ததைப் பிதற்றினை ......" என்று சீற்றத்துடன் பேசினார்.

உடனே சோதிடன் அச்சங்கொண்டான்; தன் சொல் இளங்கோவைப் புண்படுத்தும் என்று அவன் நினைந்திலன். அப்புதியவன் அச்சத்துடன் எழுந்து இளங்கோவைப் பணிந்து, "இளவரசே, நீர் என்மீது சிற்றம் கொள்ளுதல் ஆகாது. நான் சோதிடன்; உத்தம லக்ஷணங்களைக்கொண்டு சோதிட நூல் கூறும் செய்தியைக் கூறினேனேயன்றி, நானே கட்டிச் சொன்னது ஒன்றுமில்லை. நீர் அதனைத் தவருகக் கருதுவீராயின், என்னை மன்னித்தருள்க," என்று வேண்டினன்.

### இளங்கோவின் சூள் உரை

இளங்கோவிற்குச் சினம் பொங்கியது. அவர் மீண்டும் எழுந்து சோதிடனைப் பார்த்து, "சோதிடம் வல்லாய், நீ சொன்னது உண்மையாகவே இருக்கலாம். ஆயினும், உத்தம அரச லக்ஷணங்கள் ஒன்றையே கருதி இளையவனை அரசனாக்குதல் முறையாகுமா? அவ்விளையவனுக்கு அரசற்கு வேண்டும் பிற தகுதிகள் இருக்கின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டாவோ? ஓர்

அரசனுக்கு இருக்கவேண்டும் போர்த் திறம், அரசியல் அறிவு, அமைதியான மனநிலை, கொடிய துன்ப நிலையிலும் கலங்காத மனநிலை முதலிய பண்புகள் கவனிக்கப்பட வேண்டாவோ? 'அவை இல்லாவிடினும் கவலை இல்லை; அரச லக்ஷணங்களே தேவை" என்று உடல் இலக்கணத்தை மட்டுமே கவனித்து, இளையவற்குப் பட்டம் கட்டிய ஒரு நாட்டின் பெயரைக் கூற வல்லையோ? இன்று அத்தகைய நிலை இல்லை ஆயினும், இவ்வுலகில் என்றேனும் அங்ஙனம் நடந்ததாகவேனும் கூறக்கூடுமோ? நீ பண்பட்ட சோதிடன் அல்லன்; 'சாத்திரம் வேறு - அநுபவம் வேறு' என்பதை அறியாதவன்; ஆதலால், அரசப் பேரவையில் அஞ்சாது இதனைக் கூறினை. எமது சேரர் மரபில் இத்தகைய இழிந்த முறை இதுகாறும் கையாளப்படவில்லை; இனியும் கையாளப்படாது என்பதனை நம்புவாயாக.

"நான் சிறுவயதிலிருந்தே சமயத் துறையில் அறிவைச் செலுத்தி வருபவன். எனக்கு அரசியலில் அவா இல்லை; அரசனாகவேண்டும் என்னும் எண்ணம் இல்லை. நீ, பலர் அறிய, நானே அரசனாதற்குத் தக்கவன் என்று கூறிவிட்டது, என் தமையனார் உள்ளத்தைப் புண்படுத்தியிருக்கும். ஆதலால், நான் இப்பொழுது யாவரும் அறிய ஒன்று கூறுகிறேன். நான் இந்த நிமிடம் முதல் துறவி ஆனேன்; இது சத்தியம். நான் இல்லறத்தில் இருக்க விரும்பவில்லை," என்று வன்மையாகக் கூறினார்.

## இளங்கோவின் சமாதானவுரை

“ஆ! மைந்த, என்ன சொன்னாய்!” என்று பதறிக்கொண்டே நெடுஞ்சேரலாதன் இளங்கோவைப் பிடித்தான். செங்குட்டுவனும் அவையோரும் திடுக்கிட்டனர். அப்பொழுது இளங்கோ அமைதி பொருந்திய முகத்துடன் தந்தையைப் பணிந்து, “ஐயனே, உமது கொற்றம் வாழ்க! நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. சேரர் மரபு காலங்கடந்த பழைமையுடையது; நீதிமுறை வழுவாதது. அத்தகைய புகழ் பொருந்திய மரபுக்கு இழுக்கொன்றும் நேராதபடி பார்த்துக்கொள்ளுதல் நமது கடமையாகும். சோதிடன் இன்று உரைத்த சொல் நாளை இந்நாட்டிற் பரவுதல் கூடும். குடிமக்களுள் ஒரு சாரார், ‘சோதிடன் கூற்று மெய்யாக இருக்கலாம்; அவன் சொன்னபடி இளங்கோ அரசு கட்டில் ஏறின், நாடு மிக்க நன்மையைப் பெறக் கூடும்,” என்று தவறாகக் கருதி, அதற்குரிய பிரசாரத்தைத் தொடங்குதல் கூடும். அது கண்டு மற்றொரு சாரார், ‘மூத்தவருக்கே அரசு உரியது,’ என்று எதிர்ப்பிரசாரம் செய்யக்கூடும். இதனால், ஒன்றுபட்டு வாழ்ந்துவரும் சேரநாடு, கூச்சலுக்கும் குழப்பத்திற்கும் நிலைக்களனாதல் கூடுமன்றோ? எனது வாழ்நாளில் இக்குழப்பம் உண்டாகவில்லை எனினும், என் பிள்ளைகள் காலத்தில் உண்டாகலாம். இன்று சோதிடன் கூறிய ‘சோதிடம்’ நாட்டில் பரவி நிலைக்கும். அஃது என்றைக்காயினும் தீமையை உண்டாக்கும். அத்

தீமையை இன்றே ஒழிக்கவேண்டுமாயின், **நான் துறவியாதலே தக்க வழியாகும்.** நான் இதற்காகவே துறவியானேன் என்று கருதவேண்டா. எனக்கு இந்த எண்ணம் நெடுநாட்களாக வுண்டு. ஆயின், இன்று அது முடியவேண்டும் என்பது திருவருள் சம்மதம் போலும்! அதனாற்றான் இச் சோதிடன் இங்கு வந்தான்போலும்! நான் எனது முடிபைப் பற்றிக் கவலைப்படவில்லை; நன்றாக யோசித்துப் பார்த்தே இம்முடிபை ஏற்றுக்கொண்டேன். ஆதலின், நீவிர் கவலைப்படாது, என்னை ஆசீர்வதித்தருளும்," என்று கூறிப் பணிந்தார்.

**தந்தையும் தமையனும்**

இங்ஙனம் கூறிப்பணிந்த மைந்தரை நெடுஞ் சேரலாதன் எடுத்து மார்புறத் தழுவிக் கண்ணீர் விட்டு, "என் அருமைச் செல்வமே, நீ அறிவு முதிர்ந்தவன்; எதிர்கால நோக்கமுடையவன்; சொன்ன சொல் தவறாதவன். நான் இப்பொழுது என் செய்வது!......................சரி. நீ உன் விருப்பம் போலத் துறவியாகவே இருப்பாயாக! ஆயின், நீ என் சொற்படி நடக்கும் நன்மகன் ஆதலின், ஒன்று சொல்வேன். அஃதாவது, நீ வஞ்சி மாநகரத்தில் தங்கி, உன் தமையனுக்கு உறுதுணையாக இருந்துவர வேண்டும்; நீ அவனை விட்டுப் பிரியலாகாது," என்றான். செங்குட்டுவன் ஆறாகக் கண்ணீர் விட்டுத் தம்பியைத்தழுவி "நீ, நம் தந்தையார் இறுதியிற் கூறியவாறு செய்வதே எனக்கு உவப்பைத் தருவதாகும். நீ நினது

சூள் உரையால் பரதனினும் பன்மடங்கு உயர் வடைந்தனை. நின்னைப் போலத் தந்நலமற்ற தம்பியர் கிடைத்தல் அரிது! அரிது!!" என் ருன். இளங்கோ தந்தையையும் தமையனையும் பணிந்து, "யான் உங்கள் இருவர் விருப்பப் படியே செய்வேன்," என்ருர். அவையோர் அத னைக்கேட்டு மகிழ்ந்தனர்.

**இளங்கோ 'அடிகள்'**

இளங்கோ அன்றுமுதல் இளவரசர்க்குரிய உடைகளையும் அணிகளையும் அணிவதில்லை. அவர் துறவிக்கு உரிய உடைகளை உடுத்துக்கொண் டார்; அதனுல் '**இளங்கோ அடிகள்**' எனப்பட் டார். அவர் வஞ்சி மாநகரத்தின் கிழக்கு வாச லில் இருந்த கோவில் ஒன்றில் தங்கிச் சமய ஆராய்ச்சியும் தமிழாராய்ச்சியும் நிகழ்த்தி வந் தார்; அடிக்கடி அரண்மனை சென்று தம் தமையனையும் பெற்ருேரையும் கண்டு மீள்வர்.

## 5. சேர மன்னன் - செங்குட்டுவன்

**சேர - பாண்டியர் போர்**

செங்குட்டுவன் இளவரசுப்பட்டம் பெற்றுத் தந்தைக்கு உதவியாக இருந்து அரசியல் காரியங் களைக் கவனித்து வந்தான். இளங்கோவடிகள் குணவாயில் கோட்டத்து இருந்து சமய ஆராய்ச்சி செய்து வந்தார். அந்தக் காலத்தில் எக்காரணம் கொண்டோ நெடுஞ்சேரலாதனுக்கும், **வேல் பல் தடக்கைப் பெருநற்கிள்ளி** என்ற சோழ மரபின னுக்கும் போர் மூண்டது. போர் மிகவும் கடுமை

யாக நடந்தது. போரில் சேரனும் சோழனும் மாண்டனர். உடனே செங்குட்டுவன் தாயான நற்சோணை தீக்குளித்தாள். செங்குட்டுவன் சேர மன்னனாக முடி சூடிக்கொண்டான்.

### தாய்க்குக் கோவில் எடுப்பிக்கும் யோசனை

கணவன் இறந்தவுடன் தீப்பாய்ந்து உயிர் விட்ட மஹா பத்தினியாகிய தன் தாயின் நினைவுக்கு அறிகுறியாகக் கல் நட்டுக் **கோவில்** எடுப்பித்தல் வேண்டும் என்பது செங்குட்டுவன் அவாவாகும். அவனது கருத்தை இளங்கோ அடிகளும் ஆதரித்தனர். 'தாயின் உருவம் செதுக்குதற்கு உரிய சிலையைப் பொதிய மலையிலிருந்து கொண்டு வருதல் சிறந்ததா? இமய மலையிலிருந்து கொண்டு வருதல் சிறந்ததா?' என்பதைப்பற்றி யோசனை உண்டாயிற்று. முடிவில், இமய மலையிலிருந்து கொண்டு வருதலே சிறந்தது என்று முடிவு செய்யப்பட்டது.

### வடநாட்டு யாத்திரை

செங்குட்டுவன் அம்முடிவுப்படி பெரும் படையுடன் இயமம் நோக்கிப் புறப்பட்டான். வழியில் தன் பிரயாணத்தின் நோக்கத்தை அறியாது தன்னை வீணே எதிர்த்த வடநாட்டரசரை அங்கங்கே தோல்வியுறச் செய்து, கங்கையாற்றைப் பல நாவாய்களின் உதவியால் கடந்தான்; கடந்து, இமயமலை அடிவாரம் சென்று சிற்ப வல்லுநரைக்கொண்டு தக்க கல்லைத் தேர்ந்தெடுத்தான்; அதனைக் கங்கையில் நீராட்

டித் தூய்மை செய்வித்தான்; பிறகு அச்சிலை யுடன் தனது சேர நகரத்துக்கு மீண்டான்.

**கோவில் எடுத்து விழாச்செய்தல்**

சிற்ப வல்லுநர், நற்சோணையின் உருவத்தைச் சிலையில் பொறித்தனர்; அவ்வுருவத்தின்கீழ் அவ்வம்மையின் பெயரும் பீடும் எழுதினர். பிறகு நல்ல நாளில் **கல் நாட்டு விழாக்** கவினுற நடை பெற்றது. அதன் பின்னர்க் கோவில் கட்டட வேலை தொடங்கப்பெற்றுச் சில நாட்களில் கோவில் கட்டி முடிக்கப்பட்டது. கோவில் கும்பாபிஷேகம் சிறப்புற நடந்தேறியது. தன் தாய்க்குச் செய்யக் கடமைப்பட்டிருந்த பெருங் காரியத்தைச் செய்து முடித்ததற்காகச் செங் குட்டுவன் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தான்.

## 6. செங்குட்டுவன் போர்ச்செயல்கள்

**கொங்கருடன் போர்**

செங்குட்டுவன் கொங்க நாட்டாருடன் போரிட்டான். அப்போரில் செங்குட்டுவனைச் சோழனும் பாண்டியனும் சேர்ந்து எதிர்த்தனர். செங்குட்டுவன் இளைஞன்; அஞ்சா நெஞ்சினன்; ஆண்மை மிக்கவன்; ஆதலின், தன்னை எதிர்த்த இரு பெரு வேந்தரையும் கொங்கு நாட்டுச் சிற் றரசரையும் 'செங்களம்' என்னும் இடத்தில் எதிர்த்தான். அப்போர், பேரரசர் மூவரும் சிற் றரசர் பலரும் சேர்ந்து நடத்திய போர் ஆதலின், கடும்போராகக் காட்சி அளித்தது. போர் பல நாட்கள் நடந்தன. இருதிறத்துப் படைகளுக்கும்

அழிவு உண்டானது. யானைகள் வெட்டுண்டன; குதிரைகள் கொல்லப்பட்டன; வீரர் குத்துண்டனர்; கையிழந்தார் பலர்; கால் இழந்தார் பலர்; குற்றுயிராகக் கிடந்தார் பலர். போரின் இறுதி என்னவாயிற்று? இளைஞனை செங்குட்டுவன் இரு பெரு வேந்தரையும், கொங்கு நாட்டுச் சிற்றரசரையும் முற்றிலும் முறியடித்தான்; 'கொடுகூர்' என்ற நகரத்தை அழித்தான். கொடுகூர் என்பது கொடுகூர் நாட்டின் தலைநகரம் ஆகும். அது மைசூர் நாட்டுத் தென்பகுதியான புனல் நாட்டைச் சேர்ந்த பகுதியாகும்.

## கடற் போர்

சேர நாட்டிலிருந்து பொருள்களைக் கொண்டு செல்லும் மரக்கலங்களை மறித்துச் சூறையாடும் கொள்ளைக்கூட்டத்தார் சேர நாட்டிற்கு வடக்கே கடற்கரை ஓரமாக இருந்து வந்தனர். அவர்கள் கடலையே அரணாகக்கொண்டு இடர் விளைவித்து வந்தவராவர். இப்பகைவரை நெடுஞ்சேரலாதன் முன் ஒருமுறை படையெடுத்துச் சென்று வென்றான். அவன் இறந்த பிறகு மீட்டும் கடற் கொள்ளைக் கூட்டத்தார் தொல்லை மிகுதிப் பட்டது. அதனால் செங்குட்டுவன் வன்மை மிக்க வீரர்களைக்கொண்ட கப்பற் படையுடன் புறப் பட்டான். கடல் ஓரத்தில் தங்கள் கப்பல்களிலேயே தங்கியிருந்து வியாபாரக் கப்பல்களைத் திடீரெனத் தாக்கும் பகைவரைத் திடீரென வளைத்துக்கொண்டான். பகைவர்கள் தப்ப முடியாது என்பது தெரிந்ததும் கடுமையாகப்

போரிட்டனர். செங்குட்வடுன் அக்கடற் கொள்ளைக் கூட்டத்தினரை அழித்து மீண்டான். அன்றுமுதல் கப்பல்கள், கொள்ளைக்கூட்டத்தார் அச்சமின்றி வசதியாகச் சென்று மீண்டன. அயல் நாட்டுக் கப்பற்காரரும், உள்நாட்டுக் கப்பற்காரரும் நமது சேரர் பெருமானை வாயார வாழ்த்தினர்.

**பழையனுடன் போர்**

**பழையன்** என்பவன் பாண்டிய அரசனுக்குப் படைத்தலைவன் ஆவன். இவன் மோகூர் நாட்டை ஆண்ட சிற்றரசன். இவன் மரபினர் 'பழையர்' என்றே கூறப்பட்டனர். ஏறத்தாழக் கி. மு. 3-ஆம் நூற்றாண்டில் மோரியர் தமிழகத்தின்மீது படை யெடுத்தபொழுது மோகூரை ஆண்ட பழையன் என்பவன் வன்மையோடு எதிர்த்து நின்றான். அவனை வெல்லப் பகைவரால் முடியவில்லை. அத்தகைய வீரர் பரம்பரையில் வந்தவன் செங்குட்டுவன் காலத்துப் பழையன் என்பவன். அவனுக்கும் **அறுகை** என்ற அரசன் ஒருவனுக்கும் பெரும் பகைமை எற்பட்டது. அந்த அறுகை என்பவன் செங்குட்டுவனுக்கு உயிர் நண்பன் ஆவன். ஆதலின், அறுகையின் வேண்டுகோள்மீது செங்குட்டுவன் பழையன் மீது படையெடுத்தான்; அவனது காவல் மரமாகிய வேப்ப மரத்தைத் துண்டந் துண்டமாக வெட்டி வீழ்த்தினான்; அப்பகைவனுடைய யானைகளையே கடாக்களாகவும், அவன் மகளிரது கூந்தலை அறுத்துத் திரித்துக் கயிறாகவும் கொண்டு

வண்டியிலிட்டு இழுப்பித்தான். இங்ஙனம் செய்வது, பகைவனைக் கடுமையாக அவமானப் படுத்தும் செயலாகும்.

**சோழருடன் போர்**

செங்குட்டுவன் இவ்வாறு பல போர்களில் ஈடுபட்டிருந்த காலத்தில் இவன் அம்மானாகிய சோழன் இறந்தான். உடனே அவன் மகனான **நெடுமுடிக்கிள்ளி** என்பவன் பட்டத்திற்கு வர முயன்றான். சோழ அரச மரபில் பிறந்த ஒன்பதின்மர் அதனைத் தடுத்து உள்நாட்டிற் கலகம் விளைத்தனர். சோழநாடு இக்கலகத்தால் தத்தளித்தது. நெடுமுடிக்கிள்ளி செங்குட்டுவன் துணையை நாடினான். உடனே சேரர் பெருமான் பெரும் படையுடன் சோழநாடு சென்றான். **நேரிவாயில்** என்னும் இடத்தில் பகைவரைச் சந்தித்தான். அவ்விடம் உறையூர்க்குத் தெற்கே உள்ள ஊராகும். அஃது உறையூரிலிருந்து நேரி மலைக்குச் செல்லும் பாதையில் உள்ளது; அதனால் 'நேரிவாயில்' எனப் பெயர் பெற்றது. அந்த இடத்தில் சோழர் ஒன்பதின்மர்க்கும் சேரர் பெருமானுக்கும் கடும்போர் நடைபெற்றது. சேர வேந்தன் அவர்களை ஒரு பகலில் ஒழித்துத் தன் மைத்துனச் சோழனை அரசு கட்டிலில் ஏற்றினான்; நாட்டில் அமைதி நிலவும்வரை சோழநாட்டில் இருந்தான். பின்னர்ச் சோழனிடம் விடைபெற்றுச் சேர நாட்டை அடைந்தான். செங்குட்டுவனது இவ்வரிய செயலால் சேர நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் மிக

நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இதனால் பாண்டிய அரசனும் சேரனுக்குப் பணிந்து நடக்க வேண்டியவன் ஆனான்.

## 7. நண்பரும் மனைவி மக்களும்

### புலவர் புரவலன்

செங்குட்டுவன் இளமையில் தமிழை நன்றாகக் கற்றவன். ஆதலால், தமிழ்ப் புலவர்களிடம் மிக்க அன்புடையவனாக இருந்தான். தன் நாடு நோக்கி வந்த சங்கப் புலவர்களை நன்கு உபசரித்து வேண்டிய உதவிகளைச் செய்து வந்தான். இளங்கோவடிகளுடன் கல்வி கற்றதனாலும், அவரது சேர்க்கையாலும் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் வளர்ச்சியிலும் நாட்டம் செலுத்தினான்; இயற்றமிழை வளர்த்த புலவர்களை ஆதரித்தான்; இசைத் தமிழை வளர்த்துவந்த பாணரையும் பாடினியரையும் மகிழ்ச்சியுடன் ஆதரித்தான்; நாடகத் தமிழை நன்கு வளர்த்துவந்த கூத்தரை ஆதரித்தான். இங்ஙனம் இவன் முத்தமிழ்வாணரை முக மலர்ச்சியுடன் ஆதரித்து வந்தது தமிழ் நாடெங்கணும் பரவியது.

### சாத்தனார்

செங்குட்டுவனது தமிழ்ப் பற்றையும், இளங்கோ அடிகளின் முத்தமிழ்ப் பற்றையும் மதுரையில் வாழ்ந்துகொண்டிருந்த **சாத்தனார்** என்ற சங்கப்புலவர் கேள்வியுற்றார். அவர் சோழ நாட்டைச் சேர்ந்தவர்; **சீத்தலை** என்னும் ஊரினர்; அதனால் **சீத்தலைச் சாத்தனார்** எனப்பட்டார். அவர்

சங்கப் புலவரோடு கலந்து பழக அவாக்கொண்டு மதுரையிற் குடியேறினார். வணிக மரபினரான அப்புலவர் நெல், வரகு, சாமை, சோளம் முதலிய பதினெட்டு வகைத் தானியங்களைக் கொண்ட கடையொன்றை வைத்து வாணிகம் நடத்தத் தொடங்கினார். மேற்சொன்ன தானியங்கள் 'கூலம்' எனப் பெயர் பெறும். அவற்றை விற்றவர் 'கூல வாணிகர்' எனப்பட்டனர். ஆதலின் சாத்தனார், **'மதுரைக் கூல வாணிகன் சாத்தனார்'** எனப் பெயர் பெற்றார். அவர் மதுரையிற் குடியேறினவர் ஆயினும், சீத்தலை என்ற ஊரினர் ஆதலின், **மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்** எனவும் அழைக்கப்பட்டார். இக்காரணங்களால் அவர் பாடிய பாக்களின் அடியில் இம் மூவகைப் பெயர்களையும் காணலாம்.

**சாத்தனாரும் சேர சகோதரரும்**

சாத்தனார் சேரனைக் காண விழைந்து ஒரு முறை மதுரையிலிருந்து புறப்பட்டுச் சென்றார்; வஞ்சிமா நகரத்தை அடைந்தார். சேரர் அரண்மனையை அடைந்து தம் வருகையை அரசனுக்கு அறிவிக்குமாறு வாயில் காவலரிடம் கூறினார். வந்தவர் சாத்தனார் என்ற சங்கப்புலவர் என்பதை அறிந்த செங்குட்டுவன் எதிர்சென்றோடி அவரை வரவேற்றான்; உடனே இளங்கோ அடிகட்குச் செய்தி சொல்லி அனுப்பினான். சாத்தனார் அரசனுக்கும் அடிகட்கும் வணக்கம் கூறி அமர்ந்தனர். பின்னர் மூவரும் உணவு உட்கொண்டு உளம் மகிழ்ந்து அளவளாவினர். சேர சகோதரர்க்குச்

சாத்தனார்மீது பற்று மிகுந்தது. சாத்தனார் சில நாட்கள் அவர்களுடன் தங்கியிருந்தார். பெரியவர் கேண்மை பிறைபோல நாளும் வரிசை வரிசையாக வளர்ந்து வந்தது. மூவரும் சிறந்த தமிழ்ப்புலவர்: தமிழ் நாட்டவர்; தமிழ் வளர்ச்சியில் நாட்டம் உடையவர்; ஒத்த கருத்தினர். ஆதலின், அவர்கள் அன்பு மீதூர, ஒன்றுபட்ட உள்ளத்தினர் ஆயினர். சாத்தனார் சில நாட்களுக்குப் பிறகு சேர சகோதரரிடம் விடைபெற்று மதுரை மீண்டனர். அந்நிகழ்ச்சிக்குப் பிறகு சாத்தனார் அடிக்கடி வஞ்சி சென்று மீள்வது உண்டு.

### பரணர்

செங்குட்டுவனது பேரன்பிற்கு உரியராக இருந்த மற்றொரு சங்கப் புலவர் **பரணர்** ஆவர். அவர் **கபிலர்** என்ற பார்ப்பனப் புலவர்க்கு உயிர் நண்பராவர். அதனாற்றான், 'கபிலபரணர்' என்ற தொடர் உண்டாயிற்று. பரணர் சிறந்த தமிழ்ப் புலவர்; ஒழுக்கம் மிக்கவர்; சான்றோருள் ஒருவராக வைத்து மதிக்கத்தக்க தகுதி வாய்ந்தவர். அவர் செங்குட்டுவனைப் பதிற்றுப்பத்தில் பாடி, அவனால் சிறப்புப் பெற்றவராவர்; அவனது செல்வ மைந்தனான **குட்டுவன்-சேரல்** என்பவனுக்குக் கல்வி கற்பித்தவர் ஆவர்.

### கோப்பெருந்தேவி

செங்குட்டுவனது பட்டத்தரசி இளங்கோ வேண்மாள் என்பவள். 'வேண்மாள்' என்பது 'வேளுக்கு மகள்' (வேளிர் மரபினள்) என்று

பொருள்படும். ‘இளங்கோவேள், இருங்கோ வேள்’ என்ற வேளிர் மரபில் வந்த இம்மங்கை நல்லாள், ‘ஒத்த நலனும், ஒத்த பண்பும், ஒத்த கல்வியும்’ உடையவள்; மாசிலாக் குலத்து வந்தவள்; வருவிருந்து உவப்ப ஊட்டும் நேசம் மிக்குடையவள்; கணவன் நினைப்பறிந்து நடக்கும் தன்மையுடையவள்; இலக்குமி அவதாரம் என்று சொல்லத் தக்க பேரழகு உடையவள்; அரசனது நற்பேறே உருவெடுத்தாற் போன்ற நலங்கள் பல வாய்க்கப் பெற்றவள். அரசன் அவளைக் கலந்தே எல்லாக் காரியங்களையும் கவனித்து வந்தான். அவள் சிறந்த புலமையுடையவள்; ஆதலால், பரணர், சாத்தனுர் போன்ற புலவர்களுடன் நெருங்கிப் பழகும் இயல்புடையவளாக இருந்தாள். அவளது கூர்த்த அறிவினையும், குடிகள் பால் கொண்டுள்ள அன்பினையும் கண்ட சேர நாட்டுக் குடிகள் அவளைத் தம் தாயாகக் கருதிப் போற்றி வந்தனர். அப்பெருந்தேவி ஈன்ற மகனே குட்டுவன்-சேரல் என்பவன். அவன் பெற்றோருடைய நல்லியல்புகள் அனைத்தையும் பெற்று, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான்.

## 8. மலைவளம் காணல்

### மலைவளம் காணப் போதல்

ஒருநாள் சேரன் - செங்குட்டுவன் இன்பமாகப் பொழுது போக்க விரும்பினுன். அதனல் வஞ்சி மாநகர்க்கு அண்மையில் உள்ள மலைவளம்

கண்டு மகிழச் சென்றான். அவன் தன்னுடன் இளங்கோ வேண்மாளையும், இளங்கோ அடிகளை யும், அமைச்சரையும், மெய்க்காப்பாளரையும் அழைத்துச் சென்றான். நான்கு பக்கங்களிலும் வானளாவிய மலைகளால் சூழப்பட்ட அழகிய பள்ளத்தாக்கு ஒன்றில் தங்கினான். அங்குத் தங்கி, இயற்கையின் எழிலை நுகரவேண்டும் என்பது அவனது அவாவாகும்.

**மலைவளம் கண்டு மகிழ்தல்**

பள்ளத்தாக்கைச் சுற்றியிருந்த மலைகள் மிக்க உயரமானவை. அவற்றின் பக்கங்களில் அடர்ந்த காடுகள் செழித்து வளர்ந்திருந்தன. காடுகளில் மிக உயரமான மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. அவ்வடர்ந்த காடுகளில் புலி, யானை, கரடி முதலிய கொடிய விலங்குகளும், மான் முதலிய வலியற்ற விலங்குகளும் வாழ்ந்து வந்தன. ஒரே காட்டில் கொடிய விலங்குகளும், வலியற்ற விலங்குகளும் வாழ்தல், வாழ்க்கையில் உள்ள வன்மை-மென்மை நிலைகளை உணர்த்துவபோல இருந்தன. மலையுச்சியில் மேகங்கள் படிந்திருந்த காட்சி அழகியது. செங்குட்டுவன் முதலி யோர்க்குமுன் யானைகள் கூட்டம் கூட்டமாகச் சென்றுகொண்டிருந்தன. அவை அக்காடுகளில் இயற்கையாகத் திரிந்து விளையாடிய காட்சி இன்பத்தை நல்கியது. சில மரக்கிளைகள்மீது மயில்கள் இருந்து நடனமாடின; குயில்கள் கூவின; இன்பமான காற்று வீசியது. இத் தகைய இயற்கையின் இன்ப நிலையினைக்

கவனித்து இன்பக் காற்றை நுகர்ந்து யாவரும் மகிழ்ந்திருந்தனர்.

**சாத்தனுர் வருகை**

இங்ஙனம் செங்குட்டுவன் முதலியோர் இன்பமாக இருந்த பொழுது, முன் சொன்ன மதுரைக் கூலவாணிகன் சாத்தனுர் என்ற செந்தமிழ்ப் புலவர் வஞ்சி மாநகர்க்குச் சென்ருர். அங்கு, அரசன் முதலியோர் மலைவளம் காணச் சென்றனர் என்பதை அறிந்து, அவர்கள் இருந்த பள்ளத்தாக்கினை நோக்கி வந்தார். எதிர்பாராத படி மதுரைப் புலவர் வந்ததைக் கண்ட அரசன் முதலியோர் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். புலவர், அரசன்—அரசி—அடிகள் ஆகிய மூவர்க்கும் வணக்கம் கூறி அமர்ந்தார். பின்னர் அனைவரும் பற்பல விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

**குன்றக் குறவர்**

இங்ஙனம் நால்வரும் அளவளாவிக்கொண்டிருக்கையில், சுற்றுப்பக்க மலைகளிலும் காடுகளிலும் வாழ்ந்துவந்த மக்கள், தங்கள் பேரரசன் இயற்கைக் காட்சியைக் கண்டு பொழுது போக்கத் தங்கள் மலைநாட்டை நோக்கி வந்திருப்பதை அறிந்தனர்; உடனே மலைபடு பொருள்களாகிய சந்தனக்கட்டை முதலிய மணமிகு பொருள்களையும், தேன், தினைமா, கிழங்குகள், கனிகள் முதலிய உண்ணும் பொருள்களையும் கொண்டு வந்தனர்; பள்ளத்தாக்கில் தங்கியிருந்த தமது அரசர் பெருமானைக் கண்டு அவன்முன்

வைத்துப் பணிந்தனர்; "அரசே! வாழ்க நின் கொற்றம்" என்று கூறிப் பணிந்து நின்றனர்.

**அற்புதச் செய்தி**

செங்குட்டுவன் குன்றக் குறவரை மகிழ்ச்சியோடு நோக்கி, "உங்கள் மலைநாட்டில் விசேஷம் ஏதேனும் உண்டோ?" என்று கேட்டான். உடனே அவர்கள் அரசனைப் பணிந்து, "பெருமானே! உண்டு; சில நாட்களுக்குமுன் (ஒரு மலையைச் சுட்டி) இந்த மலைமீதுள்ள வேங்கை மரத்தடியில் ஓர் இளமங்கை வந்து நின்றாள். அவள் தெய்வ மகளோ என்று ஐயுறத்தக்க பேரழகுடன் விளங்கினாள். ஆனால், அவளது முகம் அழகிழந்து காணப்பட்டது; கூந்தல் காற்றிற் பறந்தது; அவள் கண்கள் விழிநீரைப் பெருக்கின; அவள் கணவனைப் பறிகொடுத்துத் தவித்த காரிகையாகக் காணப்பட்டாள்; அம் மங்கை நல்லாள் தலையை நிமிர்த்தி வானை நோக்கினாள். அப்பொழுது விண்ணிலிருந்து விமானம் ஒன்று பறந்துவந்து அவள் எதிரில் இறங்கியது. அதனுள் இருந்த இளைஞன் அவளது கணவன் போலும்! அப்பெண்மணியின் முகம் அவனைக் கண்டதும் மலர்ச்சியுற்றது. உடனே அவளும் அவ்விமானத்தில் ஏறிக்கொண்டாள். உடனே விமானம் மேலே பறந்து மறைந்தது. நாங்கள் இவ்வற்புதக் காட்சியைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கின்றோம். அப்பெண்மணி எந்நாட்டவளோ, யார் மகளோ, தெரியவில்லை" என்று கூறிப் பணிந்து விடைபெற்றுச் சென்றனர்.

**"யான் அறிவேன்"**

இச்செய்தியைக் கேட்ட அரசன், அரசி, அடிகள் முதலியோர் வியப்பும் திகைப்பும் அடைந்தனர். சேரவேந்தன், "என்ன ஆச்சரியம்! நமது நாட்டில் இத்தகைய சம்பவம் ஒன்றும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லையே! அப்பெண்மணி எந்த நாட்டவளாக இருத்தல் கூடும்? அவள் எங்குக் கணவனை இழந்தாள்? எப்படி இழந்தாள்? இங்கு ஏன் வந்தாள்? நமக்கு ஒன்றும் விளங்கவில்லையே! என்ன செய்வது?" என்று கவலையோடு கூறினான். உடனே சாத்தனார் புன்முறுவலுடன் அரசன் முதலிய அனைவரையும் அன்புடன் நோக்கி, "யான் அவளது வரலாற்றை அறிவேன்" என்றார். உடனே அரசி, "ஐயன்மீர்! எங்களைக் காக்கவையாது உடனே அப்பத்தினியின் வரலாற்றை உரைத்தருள்க" என்று வேண்டினாள். உடனே மதுரைப் புலவர் ஏறுகிய சாத்தனார் **கண்ணகியின்** வரலாற்றைச் சுருக்கமாகக் கூறலானார்.

## 9. கண்ணகி வரலாறு

**புகார் நகரச் செய்தி**

சோழர் தலைநகரமான பூம்புகார் எனப்பட்ட காவிரிப்பூம்பட்டினத்தில் மாசாத்துவான், மாநாய்கன் என்ற வணிகர் பெருமக்கள் இருந்தனர். மாசாத்துவான் மகனான **கோவலன்,** மாநாய்கன் மகளான கண்ணகியை மணந்து கொண்டான். சிறிதுகாலம் அவளோடு தனி

வீட்டில் வசித்து இல்லற வாழ்க்கையை நடத்தி வந்தான். இங்ஙனம் சிறந்த ஒழுக்கமுடையவனாக இருந்த கோவலன், ஊழ்வினைப் பயனாய் **மாதவி** என்ற நாடகக் கணிகையைக் கண்டான்; அவ ளுடைய ஆடல் பாடல்களில் ஈடுபட்டான்; தன் காதலியான கண்ணகியை மறந்தான்; மாதவி மனையகத்தே வாழ்ந்து வந்தான். கணவனைப் பிரிந்த கண்ணகி மணமற்ற மலர்போல வாட்ட முற்றுத் தவித்தாள்.

இந்நிலையில் புகார் நகரில் இந்திரவிழா நடை பெற்றது. அதன் கடைசி நாளில் ஊரார் கட லாடுதற்குச் சென்றனர். கோவலனும் மாதவியும் சென்று நீராடினர்; பின்னர் ஓரிடத்தமர்ந்து உல்லாசமாக உரையாடிக்கொண் டிருந்தனர். அப்பொழுது கோவலன் மாதவியின் மணிக்கை யில் இருந்த யாழை வாங்கிப் பாடினான். அவனது பாட்டு, அவன் வேறொரு மகள்மீது காதல் கொண்டிருப்பதை உணர்த்தியது என்று, ஊழ் வினை வசத்தால் மாதவி கருதினாள். அதனால் ஆத்திரமடைந்த அவள், அவனிடமிருந்த யாழை வாங்கி, அவனது பாட்டிற்குப் போட்டியாகத் தான் ஒரு பாட்டுப் பாடினாள். அவள் வேறு ஒருவன்பால் நாட்டமுடையவள் என்பதை அப் பாடல் உணர்த்தினது என்று, ஊழ்வலியால் கோவலன் கருதினான்; அவள்மீது வெறுப்புக் கொண்டான்; ஊழானது பிடர் பிடித்து உந்த, உடனே கண்ணகி வீடுநோக்கிக் கடுகி நடந்தான்.

கோவலன் வருவதற்குள் கண்ணகி, தன் பார்ப்பனத் தோழியான தேவந்தி என்பாளிடம் தான் கண்ட கனவினைக் கூறினாள்; தானும் தன் கணவனும் வேறு நாடு சென்றதாகவும், அங்கு அவனுக்குத் தீங்கு நேர்ந்ததாகவும் கனவு கண்டதாகக் கூறினாள். அவ்வமயம் கோவலன் அங்குத் தோன்றினான். தன் கணவனைக் கண்ட கண்ணகி, மழையைக் கண்ட கோடைப் பயிரைப்போல மனம் தளிர்த்தாள்; அவன் அடிகளைப் பணிந்தாள். அவளது பேரன்பினைக் கண்ட கோவலன் உளமுருகி, "பரத்தைக்காகப் பெருஞ் செல்வத்தை இழந்த எனது மடமையை எண்ணி வருந்துகிறேன்" என்றான். அவன் மாதவிக்குத் தரப் பொருள் இல்லாததால், இங்ஙனம் வருந்திக் கூறினான் என்று எண்ணிய கண்ணகி, "என் காற்சிலம்புகள் உள்ளன; அவற்றைப் பெற்றுக் கொள்க" என்று மலர் முகத்துடன் கூறினாள். உடனே கோவலன், "அவற்றுள் ஒன்றை விற்றுவரும் பணத்தைக் கொண்டு மதுரை மாநகரத்தில் வாணிகம் செய்து பிழைப்போம். நீயும் என்னுடன் வருக," என்றான். கணவன் சொற்கடவாத அக்காரிகை இசைந்தாள். மறுநாள் வைகறையில் இருவரும் புறப்பட்டனர். அவர்கள் புறப்பட்டது ஒருவர்க்கும் தெரியாது. சிறிது தூரமேனும் வழி நடந்தறியாத பெருஞ் செல்வன் தவமகளான கண்ணகி மதுரையை நோக்கி வழி நடக்கலானாள்.

**மதுரைக்குப் பிரயாணம்**

கோவலனும் கண்ணகியும் வழிநடந்து ஒரு சோலையில் தங்கினர்; அங்குச் சமணசமயப் பெண் துறவியாரான **கவுந்தி அடிகள்** என்ற அம்மையாரைக் கண்டனர்; தாங்கள் மதுரை செல்வதை அறிவித்தனர். உடனே அவ்வம்மையார் தாமும் மதுரை செல்வதாகக் கூறினர். பின்னர் மூவரும் வழி நடக்கலாயினர். வழிநெடுக இருந்த காட்சிகளைக் கண்டுகொண்டே உறையூரை அடைந்து தங்கினர்; மறுநாள் புறப்பட்டு மதுரைநோக்கி நடந்தனர். அன்று மாலை கோவலன் மற்றவர் இருவரையும் ஓர் இடத்தில் அமரச்செய்து அவர்கட்குத் தண்ணீர் கொண்டுவரச் சென்றான். அப்பொழுது மாதவியால் அனுப்பப்பட்ட கௌசிகன் என்ற மறையவன் அங்குத் தோன்றி, மாதவி தந்த கடிதத்தைக் காட்டினான். கோவலன் அதனைப் படித்துப் பார்த்தான். அக்கடிதம் அழகாகவும் உருக்கமாகவும் பொதுவாகவும் வரையப்பட்டிருந்தது. அதனால் கோவலன், அதனைத் தான் அனுப்பியதாகத் தன் தந்தையிடம் தருமாறு கூறி அனுப்பினான். பின்னர் மூவரும் வழி நடந்து மதுரையின் எல்லையை அடைந்தனர்; அடைந்து, ஊர்ப்புறத்தே இருந்த முனிவர் இருக்கையில் தங்கினர்.

**மதுரைச் செய்தி**

கோவலன், கண்ணகியைக் கவுந்தியடிகளிட ஒப்படைத்துவிட்டு அன்றே பீடுமிக்க மாட மதுரையுள் நுழைந்தான்; கடைத்தெரு, அரண்

மனை, தமிழ்ச் சங்கம், வெள்ளியம்பலம் முதலிய பார்க்கத்தக்க இடங்களைக் கண்களிப்பக் கண்டு மீண்டான். அதற்குள் கவுந்தியடிகள், முனிவர் விடுதிக்கு வந்த **மாதரி** என்ற ஆயர்மகளிடம் கண்ணகியின் வரலாற்றைக்கூறி, அவளைப் பாதுகாக்குமாறு ஒப்படைத்தார். கோவலன் தன் மனைவியுடன் மாதரி வீட்டில் இரவைக் கழித்தான். மறுநாள் கண்ணகி, தன் கணவன் விரும்புமாறு அறுசுவையுண்டி தயாரித்து ஊட்டி மகிழ்வித்தாள். உண்டு மகிழ்ந்த கோவலன் அவளது பேரன்பிற்கு உருகி, அவளைப் பலவாறு பாராட்டி, அவளது காற்சிலம்பு ஒன்றை விற்று வருவதாகக் கூறி விடைபெற்ருன்.

இங்ஙனம் விடைபெற்ற கோவலன் கடைத்தெருவழியே சென்ருன். அப்பொழுது அவனுக்கு எதிரில் உதவித் தொழிலாளர் பலர் சூழ்ந்துவரப் பெரிய **பொற்கொல்லன்** ஒருவன் பெருமிதத்துடன் வந்துகொண்டிருந்தான். கோவலன், ஊழ்வினை வசத்தால், அவனைக் குறுகி, “ஐய, அரசியர் அணியத்தக்க இச்சிலம்பினை விலைமதிக்க வல்லையோ?'' என்று கேட்டான். உடனே பொற்கொல்லன் அச்சிலம்பினைக் கையில் வாங்கிப் பார்த்தான். அதன் அரிய வேலைப்பாட்டைக் கண்டு வியந்தான்; “ஐயனே, இதனை அரச மாதேவியரே அணியத்தக்கவர். ஆதலின், நான் இதனை எடுத்துச்சென்று அரசியார்க்குக் காட்டிவருவேன். நான் வரும்வரை நீவிர் இந்த இடத்திலேயே இரும்.” என்று ஓரிடத்தில் அமரச்செய்து, அரண்மனையை நோக்கி விரைந்தான். அவன்

அங்ஙனம் செல்லும் பொழுது தனக்குள், "நான் சில நாட்களுக்குமுன் அரச மாதேவியின் காற் சிலம்பொன்றைக் கவர்ந்துகொண்டேன். 'அது காணமற்போய்விட்டது. அதனைத் தேடியலை கின்றேன்' என்று அரசனிடம், சொல்லியிருக் கிறேன். உண்மை வெளிப்படு முன், இச்சிலம் பைக் காட்டி, இதனைக் கொணர்ந்தவனைக் 'கள் வன்' என்று கூறிக் கொலைசெய்துவிட ஏற்பாடு செய்யின், நான் கவலையின்றி வாழக்கூடும்," என்று சொல்லிக்கொண்டே அரண்மனை வாயி லைக் குறுகினன்.

அப்பொழுது ஆரியப்படை கடந்த **நெடுஞ் செழியன்** தன் மனைவியின் ஊடலைத் தீர்க்க விரைந்து அந்தப்புரம் சென்றுகொண்டிருந்தான். அதுதான் தக்க சமயம் என்று கருதிய பொற் கொல்லன் அரசனைப் பணிந்து, "பாண்டியர் பெருமானே, நமது அரச மாதேவியின் காற் சிலம்பு இன்று கிடைத்துவிட்டது. அதனைக் கவர்ந்த கள்வன் அகப்பட்டுக்கொண்டான்," என்றான். காணமற்போன சிலம்பு கிடைத்துவிட் டது என்றவுடன் அரசன் ஆனந்தமுற்றான். அது தன் மனைவியின் ஊடலைத் தீர்க்க உதவும் என்று கருதி மகிழ்ந்தான்; அதனால் விஷயத்தை நன்கு விசாரித்தறியாமல் ஏவலரைக் கூவி, "இப்பொற் கொல்லன் கூறும் கள்வனைக் கொன்றுவருக," என்று கட்டளையிட்டான்.

உடனே பொற்கொல்லன் உள்ளத்தில் உவகைகொண்டான்; ஏவலரை உற்சாகப்படுத்தி

அழைத்துச் சென்ருன்; கோவலனைச்சுட்டிக்காட்டினுன். அறிவற்ற ஏவலர் கோவலனைக் கண்ணுற்றனர். அவனது மாசற்ற முகம் 'இவன் கள்வன் அல்லன்' என்று கூறுவது போல இருந்தது. அதனுல் அவர்கள் அவனைக் கொலைபுரிய விரும்பவில்லை. உடனே பொற்கொல்லன், களவுநூலை விளக்கமாகக் கூறி, "பண்பட்ட கள்வர் இவ்வாறு தான் குற்றமற்றவராகக் காணப்படுவர். அவர்களைத் தோற்றம் கொண்டு நிச்சயிக்கலாகாது," என்று மன்ருடினுன். அப்பொழுது கொலையஞ்சாத இளைஞன் ஒருவன் விரைந்து சென்று, பொற்கொல்லனை ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்த கோவலனை வாளால் வெட்டி வீழ்த்தினுன்.

கோவலன் கொலையுண்ட செய்தியை ஆயர் மகளிரால் கேள்வியுற்ற கண்ணகி சொல்லொணுத் துயரமுற்ருள்; ஆவேசம் கொண்டாள்; கூந்தல் புரளக் கூக்குரல் இட்டுப் புலம்பிக் கொண்டே மதுரைத் தெருக்களில் ஓடினுள்; "மாடமதுரை மங்கையரே, என்கணவன் அநியாயமாகக் கொல்லப்பட்டனனே! பாண்டிய நாட்டில் நீதிமுறை அழிந்துவிட்டதா?" என்று அலறினுள்; இங்ஙனம் பலவாறு புலம்பிக் கொண்டே கோவலன் வெட்டுண்ட இடத்திற்குச் சென்ருள்; ஆவேச முற்றவளைப்போல அலறி அடித்துக்கொண்டு அவன் உடலை அணைத்தாள். அவன் உயிர்பெற்றெழுந்தான்; அவள் கண்ணீரைக் கையால் துடைத்தான்; "நங்காய், நீ இங்கிரு," என்று சொல்லிப் பிணமானுன்.

கண்ணகிக்கு என்ன செய்வதென்பது விளங்கவில்லை. அவள் வெறி கொண்டவள் போலப் பாண்டியன் அரண்மனை நோக்கி ஓடினாள். வாயிற் காவலனைக் கண்டு, "அற நெறி தவறிய பாண்டியன் அரண்மனைக் காவலனே, கணவனைப் பறிகொடுத்த ஒருத்தி வாயிலில் நிற்கிறாள், என்று அரசனிடம் அறைக," என்று அறைந்தாள். அவளது அச்சந்தரும் தோற்றத்தைக் கண்ட வாயிற்காவலன் அஞ்சியவனாய் உட்சென்று அரசனைப் பணிந்து, "அரசே, வாழ்க நின் கொற்றம். கணவனை இழந்த ஒருத்தி ஒற்றைச் சிலம்புடன் நமது வாயிலில் வந்து நிற்கின்றாள். நின்னைக் காண விரும்புகிறாள். அவள் காளியினும் மேம்பட்ட கொடுந் தோற்றம் உடையவளாகக் காண்கிறாள்" என்றான். அரசன், "உடனே அவளை வரவிடுக" என்றான்.

சிறிது நேரத்திற்குள் கணவனை இழந்த பத்தினி காவலன்முன் சோகக் காட்சியுடன் நின்றாள். அரசன், 'நீயார் ?' என்று கேட்டான். கண்ணகி, "ஆராயாது தீவினை செய்த மன்னவனே, நான் பூம்புகார் வணிகர் மரபினள். நேற்று என் கணவன் என் காற்சிலம்பு ஒன்றை விற்க இந்நகரத்திற்கு வந்தான். அவனைக் கள்வன் என்று எண்ணிக் கொன்றுவிட்டனை. இது நியாயமா? எனது வாழ்வு உன்னாற் பாழாயிற்றே!" என்று அலறினாள். அரசன், "நின் கணவன் என் கோப்பெருந்தேவியின் காற்சிலம்பைத் திருடியவன். நேற்று அவன் கொணர்ந்தது இவளது சிலம்பாகும்"

என்று தன் மனைவியைச் சுட்டிக் கோவலன் வைத்திருந்த சிலம்பைக் காட்டினான். உடனே கண்ணகி, "அரசே, அதற்குச் சமமான சிலம்பு இதோ இருக்கின்றது. இவ்விரண்டும் என்னுடையன. இவற்றிற்குள் இருப்பது **மாணிக்கப் பரல்**" என்றாள். காவலன், "எங்கள் சிலம்பில் இருப்பது **முத்துப்பரல்**. நீ உனது சிலம்பை உடைத்துக் காட்டுக ; உண்மை விளங்கிவிடும்," என்றான். கண்ணகி தன் காற்சிலம்பை உடைத்தாள். உடனே அதனுள் இருந்த மாணிக்கப் பரல் ஒன்று மன்னன் வாயில் தெறித்தது. அஃது, 'இனி உனக்குப் பேச வாயில்லை. தவறு நின்னதேயாகும்,' என்று தெரிவிப்பதுபோலத் தோன்றியது. உண்மை கண்ட அரசன் அலறினான் ; நடுக்குற்றான் ; "ஐயோ ! பொற்கொல்லன் சொல்லை நம்பிய யானே கள்வன் ! யானே கொலையாளி ! எனது வளையாத செங்கோல் வளைந்ததே !" என்று சொல்லிக் கொண்டே மூர்ச்சித்தான் ; அரியாசனத்திலிருந்து கீழே விழுந்தான் ; அவ்வளவே ; பிணமானான். அவனது நிலையைக் கண்ட கோப்பெருந்தேவி குலைகுலைந்து அவன் பாதங்களைப் பற்றி வீழ்ந்தாள். அவ்வளவில் அவளது உயிரும் பிரிந்தது. அரண்மனையில் ஒரே குழப்பம் உண்டானது.

கண்ணகிக்குக் கோபம் தணியவில்லை. 'செங்கோலில் வழுவிய வழுதியின் மாநகரை எரியுண்ணக்கடவது," என்று சபித்து, தனது இடப்பக்க மார்பை வலக்கையால் திருகி மதுரை

மீது எறிந்தாள். பத்தினிகள் சொல் பலிக்கும் அல்லவா? அதனால் உடனே திடீரென நெருப்புத் தோன்றித்தீத்திறத்தார் இல்லங்களை எரிக்கத் தொடங்கியது. மதுரை எரிவாய்ப்பட்டு வேதலைக் கண்டுகொண்டே கண்ணகி வெள்ளியம்பலத்தண்டை வந்து நின்றாள்.

இவ்வாறு கண்ணகி வரலாற்றைக் கூறிவந்த சாத்தனார், மேலும் செங்குட்டுவன் முதலியோரை நோக்கி, "அவள் அவ்வாறு நின்ற பொழுது நான் வெள்ளியம்பலத்தில் இருந்தேன். அவ்வமயம் மதுரையைக் காக்கும் அதிதேவதை ஒரு பெண்ணுருக் கொண்டுவந்து பத்தினியைப் பார்த்து, "அம்மையே, நின் சீற்றம் தணிவதாகுக! உனக்கு இன்று உண்டான துன்பம் முன்வினைப்பயனால் உண்டானதாகும். சென்ற பிறப்பில் உன் கணவன் தன் பகைவன் ஒருவனைப் 'பகையரசன் ஒற்றன்' என்று பொய் கூறி அரசனைக்கொண்டு கொல்வித்தான். அவனால் கொல்லப்பட்ட அப்பகைவனே இன்று உன் கணவனைக் கொல்வித்த பொற் கொல்லன். அவன் மனைவி பல இடங்களில் அழுது புலம்பிப் பதினான்காம் நாள் ஒரு மலைமீது ஏறி உயிர்விட்டனள். அவள் அவ்வமயம், "எமக்கு இப் பிறப்பில் இத் துன்பத்தைச் செய்தவர் மறு பிறப்பில் இதனையே அடைவாராக," என்று சபித்தாள். அச் சாபத்தின் பயனால் நினக்கு இத்துன்பம் விளைந்தது. நீ இன்றைக்குப் பதினான்காம் நாள் நின் கணவனைக் காண்பாய்," என்று கூறி மறைந்தது.

"பின்னர்க் கண்ணகி மதுரையின் மேற்கு வாயிலை அடைந்தாள்; 'நான் கிழக்கு வாசல் வழியாகக் கணவனுடன் வந்தேன்; இன்று மேற்கு வாசல் வழியாகத் தனியே செல்கின்றேன்,' என்று கூறிப் புலம்பி, அங்கிருந்த துர்க்கையின் கோவில்முன் தன் பொற்சூடியைத் தகர்த்துச் சென்றாள். அங்ஙனம் மதுரையை விட்டுச் சென்றவள் வையையின் வடக்கரை வழியே மேற்கு நோக்கி நடந்தாள். அவள் உங்கள் நாட்டிற்குத்தான் வந்தாள் என்பது குன்றக்குரவர் கூற்றால் விளங்குகிறது," என்று கூறி முடித்தார்.

## 10. கண்ணகிக்குக் கோவில் எடுப்பிக்க யோசனை

### அரசன் கேள்வி

கண்ணகி வரலாற்றை அரசன் முதலியோர் ஆவலோடு கேட்டனர். அரசன் பெருமூச்சு விட்டு, "ஒரு சிறிது ஆராயமற் போனதால் பாண்டியன் பெருந்தவறு செய்தவன் ஆனான்; பெரும்பழிக்கும் ஆளாகிவிட்டான். இப்பழி வழிவழி நிற்கும் அல்லவா? அரசனாக இருந்து செயலாற்றல் மிகவும் பொறுப்புள்ள வேலையாகும்," என்று கூறித் தன் மனைவியை நோக்கி, "நன்னுதால், பாண்டியன் இறந்ததைக் கண்டு உடனே உயிர்விட்ட கோப்பெருந்தேவி உயர்ந்தவளா? பாண்டியன் செய்த தவற்றை எடுத்துக் காட்டி மதுரையை அழித்து, நம் அகன்ற நாட்

டினை அடைந்து துறக்கம் புகுந்த வீர பத்தினி தொழத் தக்கவளா?" என்று கேட்டான்.

### அரசி விடை

அரச மாதேவி சிறிதும் தாமதம் இன்றி, "கணவனுடன் உயிர்விட்ட கோப்பெருந்தேவி தலையாய கற்புடையவள். ஆயினும், நம் நாடு நோக்கி வந்து துறக்கம் புக்க வீரபத்தினியையே நாம் வழிபடக் கடமைப்பட் டிருக்கின்றோம்," என்றாள். யாவரும் தலை அசைத்து "முறை" என்றனர்.

### சிலைக்குரிய கல்

செங்குட்டுவன் தன் அமைச்சரை நோக்கினான். அரசனது குறிப்பை உணர்ந்த அமைச்சர், "வீர பத்தினிக்குப் படிவம் அமைத்தற்குரிய சிலையைப் பொதிய மலையிலிருந்தாயினும் இமய மலையிலிருந்தாயினும் எடுத்து வருதலே தக்கது. ஆயின், பொதியத்திலிருந்த கொண்டு வருவதைக் காவிரியிலும், இமயத்திலிருந்து கொணர்வதைக் கங்கையிலும் நீராட்டித் தூய்மை செய்வித்தல் மிகவும் பொருத்தமுடையதாகும்," என்றனர். அது கேட்ட அரசர் பெருமான், "பொதியத்திலிருந்து சிலையைக் கொணர்தல் சேரர் மரபினர்க்குச் சிறப்பைத் தராது. இமயத்திலிருந்து கல்லைக் கொணர்தலே நமது பெருமைக்கு ஏற்றதாகும். முன்னர் இமயம் சென்றபோது, நமது நோக்கம் அறியாது எதிர்த்த ஆரிய அரசரைப் போல இப்பொழுது எவரேனும் எதிர்ப்பினும்

சரி; அஞ்சப் போவதில்லை. நாம் இமயமே சென்று கல்லைக் கொணர்வோம்," என்றான்.

**வில்லவன் கோதை**

சேரன் சேனைத் தலைவனான **வில்லவன் கோதை** காவலனைப் பணிந்து, "அரசே, நும்மை ஒத்த சோழ - பாண்டியர் முன்னர்க் கொங்கர் செங்களத்தே தம் புலிக் கொடியையும் மீன் கொடியையும் போட்டு ஓடினர் என்பது எங்கணும் பரவியிருக்கின்றது. கொங்கணர், கருநாடர், வடவாரியர் என்பவருடன் உடற்றிய போர்களில் அப்பகைவர் பட்ட பாட்டை நாங்கள் மறக்கக் கூடவில்லை. மேலும், நம் தாயாகிய நற்சோணை அம்மைக்குரிய சிலையைக் கொண்டுவர வடநாடு சென்ற காலத்தில் நிகழ்ந்த போர்களையும் நாங்கள் மறத்தல் இயலவில்லை. உமது போராற்றலைக் கூற்றம் கண்விழித்துக் கண்டதன்றோ? நீர் படையெடுத்துச் செல்லின், உம்மை எதிர்க்கத் தக்க அரசர் உளரோ? இப்பொழுது நீவிர் இமயம் செல்வது பத்தினிக்குரிய சிலையைக் கொணர்வதற்காதலின், வடநாட்டரசர்க்கெல்லாம் வில் - கயல் - புலி இவற்றை இலச்சினையாகக் கொண்ட நுமது திருமுகத்தை முன்னே விடுத்தல் நலம்," என்று கூறினான்.

**அழும்பில் வேள்**


அதனைக் கேட்ட **அழும்பில் வேள்** என்ற அமைச்சன் அரசனைப் பணிந்து வாழ்த்தி, "நம் பகையரசருடைய ஒற்றர் நமது வஞ்சி மாநகரில் இருக்கின்றனர். அவரே தத்தம் அரசரிடம்

சென்று நமது வடநாட்டு யாத்திரை பற்றிய செய்தியை அறிவித்து விடுவர். ஆதலின், நமது பிரயாணத்தை நமது கோ நகரத்திற் பறை யறைந்து தெரிவித்தலே போதும்,'' என்று சொன்னான். செங்குட்டுவனும் அதற்கு உடன் பட்டான். பிறகு அரசன் தன் பரிவாரங் களுடன் கோ நகரத்தை அடைந்தான். அந் நாளே மாநகரெங்கும் பறையறையப்பட்டது.

## 11. வடநாட்டு யாத்திரை

### அரசன் வஞ்சினம் கூறல்

சேரப் பெருவேந்தனான செங்குட்டுவன் அரி யணைமீதிருந்து, ஆசான், பெருங்கணி (அரண் மனைச் சோதிடன்), அமைச்சர், தானைத் தலைவர் களை நோக்கி, "இன்று ஒரு செய்தியைக் கேள்வி யுற்றேன். ஆரிய நாட்டில் நடந்த சுயம்வரம் ஒன் றற்குக் கூடியிருந்த அரசர், 'தென் தமிழ் அரசர் வடநாடு வந்த காலத்தில் எம்மையொத்த அரசர் இங்கு இல்லை. அதனால் அவர்கள் ஆரிய மன் னரை எளிதில் வென்றுவிட்டனர்,' என்று இகழ்ந்து கூறி நகையாடினராம். அங்ஙனம், முடியுடை மூவேந்தரது ஆற்றலை அறியா நகைத்த அரிய மன்னர்க்குச் சரியான பாட கற்பித்தலே தக்கது. நான், அவ்விகழ்ந்து கூறிய ஆரிய அரசரை வென்று, அவர் முடிமீது பத் தினிக் கடவுளைச் சமைத்தற்கு உரிய சிலையை ஏ றிக்கொண்டு வருவேன்; அங்ஙனம் செய்யத் தவறுவேனாயின், எனது நாட்டுக் குடிகளை வருத்


இமயமலைத் தொடர்
சிந்து
யமுனை
கங்கை
உத்தரகோசலம்
கங்கை
சோணையாறு
நருமதை
தபதி
சாதவாஹனப் பேரரசு
கோதாவரி
கலிங்கம்
கிருஷ்ணா
துங்கபத்திரை
வடபெண்ணை
காஞ்சிபுரம்
தென்பெண்ணை
காவேரி
காவிரிப்பூம்பட்டிணம
நீலகிரி
வஞ்சி
உறையூர்
மதுரை
கொற்கை
சேரநாடு

தும் கொடுங்கோலனாகக் கடவேன்,'' என்று சினத்துடன் சபதம் செய்தான்.

**ஆசானும் பெருங்கணியும்**

அப்பொழுது ஆசானாகிய புரோகிதன் எழுந்து, "சேரர் பெருமானே, வட அரசர் உன்னை இகழ்ந்தவர் ஆகார். நீ இவ்வாறு வஞ் சினம் கூறற்கு நின்னை எதிர்க்கும் மன்னரும் உளரோ? ஆதலின், சினம் தணிக,'' என்றனன். சோதிடன் (பெருங்கணி) எழுந்து, "பெருமானே நின் பகையரசர் அனைவரும் நின் அடிகளைப்பணிய வைக்கும் நன் முகூர்த்தம் இதுவேயாகும். ஆத லின் வடநாட்டு யாத்திரைக்கு இப்பொழுதே செல்வாயாக,'' என்றான்.

**வடதிசைப் பெயர்தல்**

உடனே செங்குட்டுவன் தன் வாளையும் குடையையும் அந்த நல்ல வேளையில் வடதிசைப் பெயர்த்து 'நாள்' கொள்ளும்படி ஆணையிட்டான். ஆணை பிறந்ததும், போர்வீரர் ஆரவாரித்தனர்; முரசங்கள் முழங்கின. படைகள் கொடிகளுட னும் மணி விளக்குகளுடனும் முன்சென்றன. ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் பிற அரசி யல் உத்யோகஸ்தர்களும் 'அரசனான செங்குட்டு வன் வாழ்க' என்று வாழ்த்தினர். சேரர் பெருந் தகையினது பட்டத்துயானைமீது வாளும் வெண் கொற்றக் குடையும் சென்றன. அவை வஞ்சி மாநகர்க்கு வடபுறமுள்ள கோட்டைக்குள் வைக்கப்பட்டன. அரசன் அன்றிரவு தன் படை வீரர் அனைவர்க்கும் பெருஞ்சோறு அளித்தான்;

அவரவருடன் தனித்தனியே பேசி உற்சாக மூட்டினான்; பகை மன்னரை வெற்றிகொள்ளற்குரிய **வஞ்சி மாலையை** அணிந்து கொண்டான்.

**அரசன் புறப்பாடு**

சேரர் பிரான் மறுநாட்காலையில் எழுந்து நீராடித் தன் வழிபடுகடவுளான முக்கட்செல்வனை முழுமனத்துடன் வணங்கித் தன் பட்டத்து யானைமீது அமர்ந்தான். அப்பொழுது 'செங்குட்டுவத் தோன்றல் நீடு 'வாழ்க' என்று வாழ்த்தியவராய் ஆடகமாடம் என்னும் பெருமாள் கோவிலிலிருந்து அர்ச்சகர் பிரசாதத்துடன்வந்து நின்றனர். அரசன் அப்பிரசாதத்தை ஏற்றுத் தன் தோளில் தாங்கினான். அரசன் புறப்பட்டு நகரத் தெருக்கள்வழியே சென்றான். அங்கங்கிருந்த ஆடவரும் மகளிரும் அவனைக் கண்களிட் பக்கண்டு வாழ்த்தி, அவன் சுகமாகத் திரும்பிவர வேண்டும் என்று தாம்தாம் வழிபடு கடவுளை வேண்டினர். பலவகை வாத்தியக்காரர்கள் அரசனை வாழ்த்திக்கொண்டு பின்சென்றனர். கரிவீரரும் பரிவீரரும் வாட்படை மறவருந் தங்கள் பேரரசன் பெருமையை ஏத்திச்சென்றனர். இங்ஙனம் எல்லாவகைச் சிறப்புகளுடன் சேரன் செங்குட்டுவன் வஞ்சி மாநகரத்தைவிட்டுப் புறப்பட்டான்.

**நீலகிரியில் தங்குதல்**

நகரத்தைவிட்டுப் புறப்பட்ட சேரர்பெருமான் நீலகிரிமலை அடிவாரத்தில்தங்கி இளைப்பாறினன். அவ்வமயம் விண்வழிப்படரும் முனிவர்

சிலர் அரசனைக்காண இறங்கினர். அரசன் அவர்களைப் பணிந்து வரவேற்றான். அவர்கள் அரசனை நோக்கி, "சிவபெருமான் திருவருளாற் பிறந்த செம்மலே, நாங்கள் பொதியமலைக்குப் போகின்றோம். நீ இமயம்வரை செல்லப்போவதால், அங்குள்ள அருமறை அந்தணரைக் காப்பது நின்கடமையாக இருக்கட்டும்," என்று கூறிச் சேரர் பெருமானை ஆசீர்வதித்துச் சென்றனர்.

பின்னர்க் கொங்கணநாட்டுக் கூத்தர், கொடுங் கருநாடர் என்பவர் தத்தம் தொழிக்கு ஏற்ற கோலம் உடையவராய்க் குடுமியில் மாலை ணிந்து தத்தம் மகளிருடன் வசந்த காலத்திற் கேற்ற வரிப்பாடல்களைப் பாடிக்கொண்டுவந்தனர். குடகு நாட்டவர், தம்மகளிருடன் கார்காலத்திற்குரிய குரவைப் பாக்களைப் பாடிக்கொண்டு வந்தனர். அரசரை வாழ்த்து தலையே தொழிலாகக்கொண்ட 'ஓவர்' (ஏத்தாளர் - புகழ்பாடுவோர்) என்பவர் தம் இனத்தவருடன் அரசனை வாழ்த்திக்கொண்டு வந்தனர். சேரன் இவர் அனைவருடைய ஆடல்-பாடல் களைக் கவனித்து அவரவர் தகுதிக்கேற்பப் பரிசுகள் வழங்கி விடை கொடுத்தனுப்பினன்.

அப்பொழுது வாயிற்காவலன் செங்குட்டுவன் முன்வந்து வணங்கி, "அரசே, **நூற்றுவர் கன்னர்** * என்னும் அரசரால் அனுப்பப்பட்ட **சஞ்சயன்** என்ற உத்தியோகஸ்தன் பலருடன் இங்கு

---

* **நூற்றுவர் கன்னர் - சதகர்ணி; ஆந்திர அரசன். இவன் யக்ஞ ஸ்ரீ சதகர்ணியாக இருக்கலாம்.**

வந்திருக்கிறான்," என்றனர். உடனே அரசன், "அவனை வரவிடுக" என்றனன். சஞ்சயன் வந்தான். அவனுடன் நாடக மகளிர் நூற்றிருவர்., வாத்தியக்காரரர் இருநூற்று எண்மர், தொண்ணூற்றாறு வகைப்பட்ட மாசண்டத் துறைகளில் வல்ல வேழம்பர் நூற்றுவர், சட்டையிட்ட பிரதானிகள் ஆயிரம்பேர் ஆகப் பலர் வந்திருந்தனர். இவர்களுடன் நூறு பெரிய தேர்களும், ஐந்நூறு யானைகளும் பதினாயிரம் குதிரைகளும், இன்ன சரக்கென்று எழுதப்பட்ட யாத்திரைக்கு வேண்டிய பண்டங்களைக் கொண்ட வண்டிகள் இரு பதினாயிரமும் வந்திருந்தன.

சஞ்சயன் அரசனைப் பணிந்து, "பெருமானே, நீர் வடநாடு செல்வது பத்தினிக் கடவுளுக்குரிய சிலை ஒன்றுக்கே என்பது உண்மையாயின், 'இமயமலையில் கல் எடுப்பித்துக் கங்கையாற்றில் நீராட்டித் தூய்மை செய்வித்துத் தரவல்லோம்' என்று எமது அரசரும் உமது உயிர் நண்பருமாகிய நூற்றுவர் கன்னர் நுவன்றனுப்பினர்," என்று கூறி வாழ்த்தி நின்றான். செங்குட்டுவன், "சஞ்சய, மிக்க மகிழ்ச்சி. வடநாட்டில் பாலகுமரன் என்பவன் மக்களாகிய கனகனும் விஜயனும் தமிழ் அரசர் ஆற்றலை இகழ்ந்து கூறியதாக கேள்விப்பட்டேன். அதனால், கல் எடுத்தலோடு அக்காவலர் நாவடக்கவும் வேண்டும் என்பது எனது அவா. அதற்காகத்தான் இப்பெரும் படை, யமனை உடனழைத்து வருகின்றது. ஆதனில், இப்படைகள் யாவும் கங்கையைக் கடக்க

வழிசெய்யவேண்டும். மரக்கலங்கள் மிகப் பல வாகத் தேவை. இதனை உமது அரசர்பால் கூறுக. நீ முன்சென்று ஆவன செய்க," என்று கூறி அனுப்பினன்.

பின்னர்ப் பாண்டிய மன்னன் அனுப்பிய சந்த னம், முத்து முதலிய பொருள்களைக் கொண்டு பாண்டிய நாட்டு உத்யோகஸ்தர் வந்து பணிந்து நின்றனர். அரசன் அவர்களை வரவேற்று உப சரித்து, தன் முத்திரை இட்ட திருமுகங்களை எழுத்தாளரைக் கொண்டு எழுதுவித்துப் பாண் டியனிடம் சேர்ப்பிக்குமாறு கூறினன்; இவ் வாறே தன்னிடம் ஆட்களையும் பொருள்களையும் அனுப்பிய பிற அரசர்க்குத் திருமுகங்களை அனுப் பினான்; இக்காரியங்கள் அனைத்தும் முடிந்த பிறகு மறுநாள் புறப்பட்டு வடக்குநோக்கிப் பிர யாணமானான்.

**உத்தரகோசலம் - போர்**

இவ்வாறு வடக்கு நோக்கிச் சென்ற சேர வேந்தன் முடிவில் கங்கைப் பேரியாற்றை நெருங் கினன்; அங்கு முன்னரே ஏற்பாடு செய்யப்பட்ட படி பல நூறு படகுகள் காத்திருந்தன. அவற் றின் உதவியால் சேரநாட்டுப் படைகள் அக் கரையை அடைந்தன. சேரன் தன் நட்பரச ரைக் கண்டு அளவளாவி மகிழ்ந்தான்; பின்னர்ப் புறப்பட்டு உத்தரகோசல நாட்டை அடைந்து, பாசறையில் தங்கினான்.

செங்குட்டுவன் வருவதை முன்னரே அறிந்து அவன் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்த

**கனகன் விஜயன்** என்ற அரச சகோதரர் பிற சிற்றரசர் பலருடன் சேர்ந்துவந்து சேரனைத் தாக்கினர். இருவர் படைகளும் கைகலந்தன. போர் கடுமையாக நடந்தது. புலிக்கூட்டத்துள் சிங்கம் பாய்வதைப்போலச் செங்குட்டுவன் பகைவர் நடுவிற் பாய்ந்து பேரமர் உடற்றினான்; சேர நாட்டுப் படைவீரர் பல போர்களைச் செய்து பண்பட்டவர் ஆதலின், வடநாட்டு வீரரை எளிதில் ஓடச்செய்தனர். செங்குட்டுவன் கனக விசயரைச் சிறையாகக் கொண்டான். இப்போர் பதினெட்டு நாழிகையில் முடிவுற்றதாம்.

**கல் காணலும் நீராட்டலும்**

பின்னர்ச் செங்குட்டுவன் வில்லவன் கோதையை விளித்து, "இமயமலையில் தவம் கிடக்கும் முனிவர்க்குத் தீங்கு செய்யாது, பத்தினிக் கடவுளுக்குரிய நல்ல சிலையைத் தேர்ந்து கொணர்க," என்றான். உடனே தானைத் தலைவனை வில்லவன் கோதையும் வேற்படை மறவரும் இமயம் நோக்கிச் சென்றனர்; பல இடங்களிற் கல் தேடினர்; இறுதியில் சிற்ப வல்லுநர் துணைக்கொண்டு நல்ல சிலை ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொணர்ந்தனர்; அதனைக் கங்கையி[ல்] நீராட்டி விதிப்படி தூய்மை செய்தனர். இங்ஙனம் இரு வேலைகளும் வெற்றிகரமாக முடிவுற்றதால் சேரவேந்தன் மிக்க மகிழ்ச்சியுடன் தன் வீரர்க்கு வேண்டிய பரிசளித்து மகிழ்ந்திருந்தான்.

**மாடலன் என்ற மறையவன்**

அப்பொழுது **மாடலன்** என்ற மறையவன் ஒருவன் அங்குத் தோன்றி அரசனை வாழ்த்தி, "பெருமானே, மாதவி என்ற நாடகக் கணிகை ...ன் கடற்கரைப் பாடல், கனகவிசயர் முடித் ...லைகளை இவ்வாறு நெரித்துவிட்டது. இது ...யப்பிற்குரியதே," என்றான். அது கேட்ட ...செங்குட்டுவன், "ஐய, நீ என்ன கூறினாய் என் ...து எனக்கு விளங்கவில்லை; விளங்கக் கூறுக," ...ன்றான். மறையவன், "சேரர் பெரும, காவி ...ப்பூம்பட்டினத்துக் கடற்கரையில் மாதவி ...ாடிய பாடலைக் கேட்டு, ஊழ்வினை வசத்தால் கோவலன் அவளைப் பிரிந்து வந்ததால் அன்றோ மதுரையிற் கொலையுண்டான். அவனது வீர ...த்தினி நினது நாட்டை அடைந்து வானுலகம் ...க்கதாலன்றோ நீ அவளுக்குக் கல் தேட இங்கு வந்தனை? கனக விசயரை வென்றனை; கல்லை அவர் முடித்தலைகள்மீது ஏற்றி வந்தனை. இந் நிகழ்ச்சிகட்கெல்லாம் **முதற் காரணம்** மாதவியின் வரிப்பாடல் அல்லவா? நான் அதனைத் தான் சொன்னேன்," என்றான்.

அவன், மேலும் சேரனைப் பார்த்து, "அரசே, ...ன் இங்கு வருவதற்கு உரிய காரணத்தையும் கேட்பாயாக: நான் அகத்தியன் இருந்த பொதிய மலையை வலம் செய்துகொண்டு, குமரித் துறையில் நீராடினேன்; பிறகு, என் ஊழ்வினை வசம் போலும், மதுரைக்குச் சென்றேன். அன்று தான் கோவலன் கொல்லப்பட்ட நாளாகும்.

கண்ணகி வழக்குரைத்து அரசனை மடியச் செய்த நாளாகும். கோவலன் கொல்லப்பட்டதைக் கேட்டு மாதரி என்பவள், "அந்தோ! என்னிடம் அடைக்கலமாக விடப்பட்ட கண்ணகியின் கண வன் அநியாயமாகக் கொல்லப்பட்டானே! அ சன் தீர யோசியாமல் தவறு செய்துவிட்டா இளம்பெண்ணாகிய கண்ணகியை எங்ஙனம் கா பேன்!'' என்று வருந்தித் தீப்பாய்ந்து இற தாள். கோவலன் கொலையுண்டது கேட் கவுந்தியடிகள் வருத்தத்தால் உண்ணா நோன் பூண்டு உயிர்விட்டனர். கண்ணகி சாபத்தா மதுரை மாநகரம் எரிக்கு இரையாயது. இ மூன்று நிகழ்ச்சிகளும் நான் மதுரையில் இருந் பொழுது நடந்தவை.

"பின்னர் யான் எனது பிறப்பிடமாகிய பூம்புகாருக்குச் சென்று அங்கு இச் செய்திகளை என் நண்பர்க்கு நவின்றேன். அவர் மூலம் கோவ லன் முடிபு ஊரெங்கும் பரவியது. கோவலன் தந்தையாகிய மாசாத்துவான் வாழ்க்கையில் வெறுப்புற்றான்; தன் பொருளை அறவழியிற் செலவிட்டுப் பௌத்த சங்கத்தார் இருந்த **இந்திர விஹாரத்திற்** சார்ந்தான்; அங்கிருந்த முனிவர் முந் நூற்றுவரை அடைக்கலமாக அடைந்து துற யாயினன். அவன் மனைவியான கோவலன் தா சொல்லொணாத் துயருற்று நோய் வாய்ப்பட்டு இறந்தாள். கண்ணகியின் தந்தையான மாநாய் கன் ஆசீவகரைச் சார்ந்து துறவு பூண்டனன். அவன் மனைவியான கண்ணகியின் தாய் சில நாட் களில் உயிர் விட்டனள். இவை அனைத்தையும்

கேட்ட மாதவி தன் கூந்தலைக் களைந்து பௌத்த பிக்ஷுணி ஆயினள்; அவள் மகளான மணிமேகலையும் துறவற நெறி நின்றாள். கோவலன் தாயும் கண்ணகியின் தாயும் இறத்தற்கு யான் கொணர்ந்த செய்தியே காரணம் அல்லவா? ஆகவே, அப் பாபத்தைப் போக்கிக் கொள்ள எண்ணங்தே கங்கையில் நீராட வந்தேன். இதுவே நான் இங்கு வருதற்குற்ற காரணமாகும். அரசர் பெரும, நின் கொற்றம் வாழ்க," என்று கூறி முடித்தான்.

செங்குட்டுவன் அவனை நோக்கி, "மறைவனே, நெடுஞ்செழியன் இறந்த பிறகு பாண்டி நாட்டில் ஏதேனும் விசேடம் உண்டோ?" என்று கேட்டான். மாடலன் மன்னனைப் பார்த்து, "சேர வேந்தே, கொற்கை நகரத்தில் இளவரசனாக இருந்த **வெற்றிவேற் செழியன்** என்பவன் அரியணை ஏறினான்; கண்ணகித் தெய்வத்தின் சீற்றம் தணியச் சாந்தி செய்தான்," என்றான்.

**முப்பத்திரண்டு மாதங்கள்**

இங்ஙனம் மாடலன் சொன்னதைக் கேட்ட செங்குட்டுவன் யோசனை செய்துகொண்டிருந்தபொழுது அந்தி வெண் பிறை தோன்றியது. உடனே அருகில் இருந்த பெருங்கணி எழுந்து, "வேந்தர் வேந்தே, நாம் வஞ்சியிலிருந்து புறப்பட்டு இன்றோடு **முப்பத்திரண்டு மாதங்கள்** ஆகின்றன," என்று கூறினன்.

**வஞ்சிக்கு மீளுதல்**

செங்குட்டுவன் மாடலனை நோக்கி, "எனது மைத்துனச் சோழனது நாட்டில் அவனுடைய கொற்றமும் செங்கோலும் கேடின்றி உளவோ?" என உசாவினன். உடனே மாடலமறையோன் "பெரும, சோழர் நீதி பிழையாதவர். இவ்வர னது ஆட்சியும் அன்னதே," என்றான். பிற செங்குட்டுவன் அம் மறையவற்கு வேண்டும் உ சாரங்கள் செய்து, மிக்க பொன்னை அளித் அனுப்பினான்; பின்னர்த் தாபத வேடத்தி தப்பி ஓட முயன்ற வடநாட்டரசர் சிலரை பற்றி, "இவர்களை நம்போன்ற சோழ - பாண் யர்க்குக் காட்டித் 'தமிழ் அரசர் ஆற்றலை இகழ் துரைத்த வேந்தர் இவர்' என்பதைக் கூறி வஞ் சிக்கு வருக," என்று தக்காருடன் அனுப்பினன் இறுதியில் தன் உயிர் நண்பரும் தனக்குப் ப உதவிகள் செய்தவருமான நூற்றுவர் கன்னரிட விடைபெற்று வஞ்சி நோக்கி மீளலானான்.

**சேரநாட்டு நிலை**

'வஞ்சி சூடி வடநாடு சென்ற சேரர் பெரு மான் வாகை சூடித் திரும்பி வருகின்றான்' என் செய்தி வஞ்சி மாநகரத்தார்க்கு எட்டியது. க வன் பிரிவால் கடுந்துயர் அநுபவித்த இளங்கே வேண்மாள் மழை கண்ட பயிர் போலத் தழைத் தாள். தினைப்புனம் காவல்காத்த மகளிர், "வா சூடி வருகின்ற எம் மன்னர் மன்னன் விரைந்து வருவானாக," என்று பலவகைக் குறிஞ்சிப் பாக்

களைப் பாடினர். உழவர்கள், "எருதுகளே, நம் வேந்தர் பெருமான் வெற்றிபெற்று வருகின்றான். அவனது பிறந்த நாள் விழாவும் வருகின்றது," என்று பாடினர். அரசனுடைய பசுக் கூட்டங் களை மேய்க்கும் கோவலர் பேரியாற்றங்கரையில் வளர்ந்துள்ள தாழைக் கோடுகள்மீது தங்கி, 'பசுக்களே, வில்லவனாகிய நம் பேரரசன் வந்த னன். அவன் இமயத்திலிருந்து கொணர்ந்த பசுக்களோடு நீவிரும் கூடி மகிழ்வீராக," என் னும் கருத்துப்படக் குழல் ஊதினர். கடல் நீராடிய மகளிர், "நெடுநாள் பிரிந்திருந்த நமது மன்னன் வருகின்றான்; அரசி மகிழ்வாளாக; நாம் வெற்றி வேந்தனுடைய மனம் பூமாலையை யும் வஞ்சி மாநகரையும் பாடுவோமாக," என்று கூறிப் பாடிக்கொண்டிருந்தனர். இவ்வாறு குறிஞ்சி - முல்லை - மருதம் - நெய்தல் ஆகிய நானில மக்களும் மகிழ்ந்து பாடச் சேரர் பெரு மான் வஞ்சி மூதூரை வந்தடைந்தனன்.

**வஞ்சியை அடைதல்**

அப்பெருமகனைச் சிற்றரசரும் அரசியல் உத் யோகஸ்தர்களும் இளங்கோ அடிகளும் மகிழ்ச்சி மீதூர வரவேற்றனர். சேரர் பெருமான் மட் டற்ற மகிழ்ச்சியுடன் அரண்மனை வாயிலில் இறங்கினன். யாவரும் "சேர வேந்தன் வாழ்க!" என்று வாழ்த்தினர். பின்னர் அரசன் அரண் மனைக்குட் சென்றான்.

# 12. கோவில் அமைத்து விழாச் செய்தல்

## நிலா முற்றம்

முழுமதி தண்கதிர்களைப் பரப்பி அழகு செய்தது. அப்பொழுது செங்குட்டுவன் தன் கோப் பெருந்தேவியுடன் அரண்மனையில் இருந்த நிலா முற்றத்தில் இந்திராணியுடன் இனிது வீற்றிருக்கும் இந்திரனைப்போலக் கொலுவிருந்தான். மகளிர் ஒருபால் பல்லாண்டு பாடிக்கொண் டிருந்தனர்; மற்றொருபால் மத்தளம், யாழ் முதலிய இசைக் கருவிகளுடன் இசையாளர் இசை பாடிக்கொண் டிருந்தனர். அப்பொழுது கூத்தில் வல்ல **சாக்கையன்** ஒருவன் அரசன் முன் நின்று, சிவபெருமான் திரிபுரங்களை எரித்தபொழுது உமை யம்மையை ஒரு பாகத்துக்கொண்டு ஆடிய **கொட்டிச் சேதம்** என்னும் கூத்தினை அப்பெருமான் ஆடியவாறே ஆடிக் காட்டினன். கோமானும் கோப்பெருந்தேவியும் அதனைக் கண்டு மகிழ்ந்தனர்.

## பேரோலக்க மண்டபம்

பின்னர் அரசன் சபா மண்டபத்தை அடைந்தான். அப்பொழுது மாடலனும் உத்யோகஸ்தரும் அங்கு வந்தனர். சேரனுல் சோழ - பாண்டியர்க்கு ஆரிய மன்னரைக் காட்டி வரும்படி அனுப்பப்பட்ட உத்யோகஸ்தர்கள் உள்ளே வந்தனர்; வந்து அரசனைப் பணிந்தனர். அவர்கள் தலைவனுன நீலன், "வெற்றி வேந்தே, உமது ஆணைப்

படி சோழநாடு சென்று சோழர் பெருமானைப் பணிந்து ஆரிய அரசரைக் காட்டி நீவிர் சொன்னதைச் சொன்னோம். அப் பெருமான், 'போர்க் களத்தே ஆண்மையுடன் பொருது, பிறகு உயிர் தப்ப ஓடிய இவர்களைப் பற்றிக்கொண்டு வருதல் வெற்றியாகாது,' என்று தன் தேர்ப் படைத் தலைவனை நோக்கிக் கூறினான். பின்னர் யாங்கள் மதுரைக்குச் சென்று பாண்டியனைக் கண்டோம். அத் தமிழரசன், 'போர்க்களத்தில் குடைக் காம்பை நட்டுவர்போலக் கையிற் பிடித்துக் கொண்டு சிவவேடம் பூண்டு, சிவனடியார்போல நடித்து ஓடிய ஆரிய மன்னர்மீது சேரர் பெருமான் சீற்றம் கொண்டது புதுமையாகும்,' என்ருன்.

**மாடலன் சீற்றம் தணித்தல்**

நீலன் உரைத்தவை கேட்ட அரசன் சினங் கொண்டான். அவன் கண்கள் சிவந்தன; சோழ - பாண்டியர்மீது அவனுக்குக் கோபம் மூண்டது. அது கண்ட மாடலன், "பெருமானே நினது வெற்றி வாழ்வதாக! நீ செய்த சென்ற காலப் போர்களை எண்ணினுல் எனக்கு அச்ச முண்டாகின்றது. நீ இதுவரை செய்த போர் கள் பல. அவை போதும். இனிப் புதிய போர் ஒன்றும் வேண்டா. நின் வாழ்நாட்கள் ஆன் பொருநை ஆற்று மணலினும் பலவாக விளங்குக. உனக்கு ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. நீ இது வரை மறக்கள வேள்வி செய்ததையே தவிர அறக்கள வேள்வி செய்யவில்லை. நீ இனிச் செல்

லும் உலகத்திற்குரிய அறக்கள வேள்வி செய் தலையே பெருநோக்கமாகக் கொள்ளவேண்டும். அதுவே மறுமைக்குத் துணைசெய்ய வல்லது. அரச போகம் நில்லாதென்பதனை இவ்வாரிய வேந்தரைக்கொண்டே அறிந்துகொள்ளலாம் நீ உனது நரை தோன்றிய யாக்கையைக் காண் கின்றாய் ஆதலின், இனி அறத் துறையில் நி பெறுவாயாக," என்றான். உடனே அரசன் சீ றம் தணிந்தான்; உடனே அறக்கள வேள்வி யைத் தொடங்குமாறு ஆணையிட்டான்.

### அரசன் ஆணை

பின்னர்ச் செங்குட்டுவன் கனக விசயரை விடுவித்து வேளாவிக்கோ மாளிகையில் இருக்கச் செய்தான்; பத்தினிக்குக் கோவில் எடுத்து விழா முடியும்வரை இருக்குமாறு கூறினான்; அவர்க் கும் பிற ஆரிய அரசர்க்கும் வேண்டிய வசதி களைச் செய்து தருமாறு தன் தானைத் தலைவனான வில்லவன் கோதையை நியமித்தான்; பிறகு அழும்பில்வேள் என்ற அமைச்சனுடன் பலரை ஏவித் தன்னாட்டிற் சிறைப்பட்டிருந்தாரை விடு விக்கச் செய்தான்; அரசற்கு வரி செலுத்தாத நாடுகளில் அவ்வரியைத் தவிர்க்கும்படி ஆணை யிட்டான்.

### பத்தினிக் கோவில்

அரசன் இக்காரியங்களில் ஈடுபட்டிருந்த பொழுது அந்தணர், புரோகிதர், பெருங்கணி, சிற்பிகள் என்போர் இருந்து, பத்தினிக்கு அழகு

பொருந்திய கோவில் ஒன்றைக் கட்டி முடித்தனர். சிற்ப வல்லுநர் பத்தினியின் திருவுருவத்தைக் கனகவிசயர் தலைமீது சுமந்து வந்த கல்லிற் செதுக்கிப் பெயரும் பீடும் பொறித்தனர். பின்னர் அச்சிலை ஆடையணிகளால் அலங்கரிக்கப்பட்டது; பிறகு பூப்பலியாகிய அர்ச்சனைகள் நடைபெற்றன; திக்குத் தேவதைகள் கடைவாயிலில் ஸ்தாபிக்கப்பட்டன. பத்தினிக் கடவுள் சிலை கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**பத்தினி விழா**

இங்ஙனம் சேரர் பெருமான் வீரபத்தினிக்குக் கோவில் எடுப்பித்த செய்தியைக் கேள்வியுற்ற கண்ணகியின் செவிலித்தாயும் தலைமைத் தோழியும் தேவந்தி என்ற பார்ப்பனத் தோழியும் மாதரி என்ற ஆயர் பெண்மணிக்கு மகளான ஐயை என்பவளும் சேர நாட்டை அடைந்தனர்; பத்தினிக் கோவிலைக் குறுகினர்; அங்கிருந்த சேரர் பெருந்தகைக்குத் தங்கள் வரலாற்றைக் கூறிப் பத்தினிக் கடவுள் முன் வணங்கினர். பூம்புகாரில் இருந்துவந்த தேவந்தி முதலிய மூவரும் பத்தினிக் கடவுள் திருமுன் ஐயையை நிறுத்தி, "இவள், நின்னை அடைக்கலமாகப் பெற்ற மாதரி மகள் ஆவள். நின் கணவன் இறந்ததும் நீ வழக்கில் வென்றதும் - பாண்டியன் இறந்ததும் கேட்டு, இவள் தாயான மாதரி தீப் பாய்ந்து இறந்தாள். இவளும் நாங்களும் நின்னைக் காண வந்தோம்," என்றனர்.

அப்பொழுது பொற்சிலம்பும் மேகலாபரணமும் கைவளைகளும் வயிரத் தோடுகளும் பிற அணிகளும் அணிந்து மின்னற் கொடி போன்ற உருவம் ஒன்று விண்ணில் தோன்றியது. அது கண்ட சேரர் பெருமான், "இஃது என்ன!" என வியந்து நின்றான். அப்பொழுது கண்ணகி அவனுக்குத் தன் தெய்வ வடிவினைக் காட்டி, "தோழிமீர், என் கணவனைக் கொல்வித்த பாண்டியன் பழி செய்தவன் அல்லன். அவன் தேவருலகில் விருந்தினனாக இருக்கின்றான். நான் அவன் மகள் என்பதை அறிக. நான் இம்மலைமீது விளையாடிக்கொண் டிருப்பேன்; இதைவிட்டு அகலேன். நீங்களும் விளையாட வாருங்கள்,'' என்று தோழியரை நோக்கிக் கூறினள்.

**மகளிர் வாழ்த்தல்**

பின்னர் அங்குக் கூடியிந்த வஞ்சி மகளிரும் செங்குட்டுவன் ஆயமகளிரும் கூடிப் பத்தினிக் கடவுளையும் அத் தெய்வம் நடமாடிய தமிழ்நாடுகளை ஆண்ட அரசர் மூவரையும் **அம்மானை - கந்துகம் - ஊசல்** வரிகளாலும் **வள்ளை** *ப்பாட்டாலும் பலவாறு வாழ்த்திப் பாடினர். அவற்றுள் வகைக்கொரு பாடலை இங்குக் காண்க:

**அம்மானை**

**வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்**
**ஓங்கரணம் காத்த உரவோன்யார் அம்மானை?**
**ஓங்கரணம் காத்த உரவோன் உயர்விசும்பில்**
**தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை;**
**சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை.**

---

* **வள்ளை - உலக்கை.**

### கந்துகம்

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய்கோதை வில்விட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்பஆர்ப்ப எங்கணும்
'தென்னன்வாழ்க வாழ்க'என்று சென்றுபந் தடித்துமே
'தேவரார மார்பன்வாழ்க' என்றுபந் தடித்துமே.

### ஊசல்

ஓரைவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல்.

### வள்ளைப் பாட்டு

தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழல் அவைப்பார் புகார்மகளிர்
ஆழிக் கொடித்திண்டேர்ச் செம்பியன் வம்பலர்தார்ப்
பாழித் தடவரைத்தோள் பாடலே பாடல்
பாவைமார் ஆரிக்கும் பாடலே பாடல்.

முடிவில் கண்ணகித் தெய்வம், "செங்குட்டுவன் நீடூழி வாழ்க" என்று அரசனை வாழ்த்தி மறைந்தது.

## தேவந்தியின் ஆவேசப் பேச்சு

செங்குட்டுவன் தேவந்தியுடன் மணிமேகலையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த பொழுது அவள்மீது பாசண்டச் சாத்தன் ஆவேசித்து, அங்கிருந்த மாடலனைப் பார்த்து, "மாடல, இவ் விழாவிற்கு வந்துள்ள இளமகளிருள் அரட்டன் செட்டியின் இரட்டைப் பெண்கள் மீதும் ஆடக

மாடம் என்ற பெருமான் கோவில் அர்ச்சகன் மகள்மீதும் நின் கமண்டல நீரைத் தெளி. அவர் முற்பிறப்பினை அறிவர்," என்றது.

**முற்பிறப்பு உணர்ச்சி**

மாடலன், தெய்வம் தெரிவித்தபடியே செய்தனன். உடனே அச் சிறுமியர் மூவரும் பழம் பிறப்பு உணர்ந்தவராய்த் தனித்தனியே புலம்பலாயினர்.

**முதற் சிறுமி :** (கண்ணகியின் தாய்) "யான் பெற்ற மகளே, உன் கணவன் யாவராலும் புகழத்தக்கவன் ; விதிவசத்தால் கூடா ஒழுக்கம் கொண்டான். நான் அவன் செயலை வெறுத்தேன். நீ எனக்கு அறிவியாது அவனுடன் சென்று, உற்றார் ஒருவரும் இல்லாத இடத்தில் கடுந்துயர் அடைந்தனையே," என்று புலம்பினாள்.

**இரண்டாம் சிறுமி :** "யான் பெற்ற மகளாகப் பேரன்புடன் வளர்ந்துவந்த பெண்ணே, (கண்ணகியை), என்பால் வாராயோ ? ' என் அருமை மகனே, என்னுடன் இருந்து கண்ணகியை எனக்குத் தெரிவியாமல் அழைத்துக்கொண்டு பெருந் துயரத்துடன் சென்றனையே ! அந்தோ ! என் நெஞ்சம் நடுக்குறுகின்றது. இத்துயரம் என்னைப் பொறுக்கக்கூடவில்லை. நீ என்னிடம் ஒருமுறை வாராயோ ! " என்று கதறினாள்.

**மூன்றும் சிறுமி :** இளையோனே, வையையில் நீராடி வந்த நான் (மாதரி) உனக்கு நேர்ந்த விபத்தைக் கேள்வியுற்றேன் ; வீடு வந்து

உன்னைக் காண்கிலேன். நீ என்னை அறியாது எங்குச் சென்றனையோ !" என்று அரற்றினாள்.

**மாடலன் விளக்கம்**

செங்குட்டுவன் இங்நிகழ்ச்சியைக் கண்டு மாடலனை வியப்புடன் நோக்கினான். மாடலன் மன்னனை வாழ்த்தி, "அரசர் பெருமானே, காவலன் பல அரிய நற்செயல்களைச் செய்தவன். ஆதலின் விண்ணாடு புகுந்தான்; கண்ணகி கற்புக் கடவுள் ஆதலின் அவளும் வானவர்நாடு சென்றாள். கோவலன் தாயும் கண்ணகி தாயும் மாதரியும் கண்ணகிமேல் வைத்த காதல் அளவிறந்ததாதலின், மீண்டும் இவ்வாறு பிறக்கலாயினர். தாய்மார் இருவரும் அரட்டன் செட்டி வீட்டில் பிறந்தனர். மாதரி அர்ச்சகன் வீட்டில் பிறந்தாள். சேரர் பெருந்தகையே, நீ சிவபெருமான் திருவருளாற் பிறந்தனை. ஆதலின், தெய்வ யாக்கையுடைய பத்தினிக் கடவுளைக் கண்டனை; இவ்வற்புதங்களை எல்லாம் நேரிற் கண்டனை; விண்வழிச் செல்லும் முனிவரைக் கண்டனை. அரசே, நீ, இந்நிலவுலகினைக் காத்துப் பல்லாண்டுவாழ்க!" என்று வாயார வாழ்த்தினன்.

**வரம் தருதல்**

இவ் விழாவிற் கலந்துகொண்ட கொங்கிளங் கோசரும் மாளுவ வேந்தரும் கயவாகு மன்னனும் பத்தினிக் கடவுளைப் பரவி, "தாயே, நீ இங்கு எழுந்தருளியிருத்தல் போலவே, எங்கள் நாடுகளிலும் கோவில்கொண்டருளி எங்களை ஆசீர்வதிக்க வேண்டும்" என்று வேண்டினர். அப்பொழுது,

"தந்தேன் வரம்" என்றொரு தெய்வ வாக்கு எழுந்தது. அதனை அனைவரும் கேட்டு இன்புற்றனர்.

**கோவில் மானியம்**

பின்னர்ச் செங்குட்டுவன் பத்தினிக்கோவில் படித்தரங்கட்கு வேண்டிய நிலங்களை அளித்தான்; நாடோறும் பூசை குறைவற நடைபெறு தற்கு வேண்டிய வசதிகள் செய்தான்; தேவந் தியைப் பூசை முதலியவற்றைக் கவனிக்க நிய மித்தான்.

**வாழ்த்து**

விழாவும் மாடலன் கூறிய அறக்கள வேள்வி யும் குறைவற நிறைவேறின. தமிழர் ஆற்றலை அறிந்த ஆரிய மன்னரும் செங்குட்டுவன் நண்ப ரான கோசர், மாளுவ வேந்தர், கயவாகு முதலி யோரும், "சேரர் பெருமானான செங்குட்டுவன் வாழ்க," என்று வாழ்த்தி, அவனிடம் விடை பெற்றுத் தத்தம் நாடு சென்றனர். இளங்கோ வடிகள் பத்தினி வரலாற்றைச் **சிலப்பதிகாரம்** என் னும் பெருங் காவியமாகப் பாடியருளினார்.

---

# பாண்டியன் - நெடுஞ்செழியன்

## பாண்டியன் புலமை

பாண்டியன் - நெடுஞ்செழியன் என்பவன் சேரன் - செங்குட்டுவன் காலத்து அரசன் ஆவன். இவன், தமிழ்ச்சங்கத்தை வழிவழியாக வைத்து நடத்தித் தமிழை வளர்த்துவந்த பாண்டியர் மரபினன் ஆதலின், இளமையில் சங்கப் புலவர்பால் பைந்தமிழைப் பாங்குறக் கற்றனன்; தன் காலத்துத் தமிழ்ப்புலவர் கற்றிருந்த தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும் பல இலக்கியநூல்களையும் ஐயந்திரிபறக் கற்றனன். இவன் தமிழ்நூல்களைக் கற்றதுடன் கவிபாடும் ஆற்றலையும் பெற்றிருந்தான். இவ்வரசன் கல்விக்கு மிக்க மதிப்பீந்து வந்தான் என்பது இவனது பாடல்ஒன்றால் விளக்கமாகிறது. அப்பாடல் **புறநானூறு**[1] என்னும் தொகைநூலில் உள்ளது. அதன் பொருளை ஈண்டுக் காண்க:—

"மக்கள் பலரை ஈன்ற ஒரேதாய், அவருள் கல்வி விசேஷத்தால் சிறப்புற்ற மகனையே விரும்புவாள்; ஒரு குடும்பத்தில் உள்ள பலருள் 'மூத்தவன்வருக' என்று அழையாமல், அரசன் அறிவுடையவன் ஒருவனையே மதித்து அவன்வழிச் செல்வான்; வேறுபாடு தெரியப்பட்ட நாற்குலத்துள்ளும் கீழ்க்குலத்தான் ஒருவன் கற்றவன்

---

[1] செய்யுள் 183.

ஆயின், 'இவன் கீழ்க்குலத்தான்' என்று மேற் குலத்தான் எண்ணுன்; அவனிடம் சென்று வழி படுவான். இம் மூன்று காரணங்களால் கல்வியின் சிறப்பை நன்கறியலாம். ஆதலின், அத்தகைய கல்வியை எவ்வகையானும் கற்றல் இன்றியமை யாததாகும். தன் ஆசிரியற்கு ஓர் ஊறுபாடு உற்றவிடத்து அதனைத் தீர்த்தற்கு வந்து உதவி யும் மிகுந்த பொருளைக் கொடுத்தும் ஆசிரியனை வழிபட்டுக் கற்றல் சால அழகியதாகும்."

## புலவர்-புரவலன்

இக்கூற்றிலிருந்து இப்பேரரசன் பேரறிவை கண்டு உணரலாம். இவன் கல்வி கற்ற புலவரி டம் மிக்க மதிப்புக்கொண்டிருந்தான்; அவர்களை நாடோறும் கண்டு அளவளாவும் இயல்புடைய வன்; அவர் பைந்தமிழ்ப்பாக்களைப் பாடக்கேட்டு அநுபவித்தவன்; தன்னை நாடிவரும் புலவர்களை யும் பாணரையும் கூத்தரையும் உள்ளன்புடன் வரவேற்று உபசரித்து, வேண்டிய நல்கும் இயல் புடையவன் ;

" ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு."

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்காக இலங்கினன்; இவனது செல்வம் ஊருணியைப் போல முத்தமிழ் வளர்த்த மூதறிஞர் அனைவர்க் கும் உரியதாக இருந்தது. இவனது கோப் பெருந்தேவி 'ஒத்த நலனும் ஒத்த குணமும் ஒத்த பண்பும்' அமையப் பெற்றவள் ஆதலின், கண வன் கருத்துப்படி நடக்கும் காரிகையாக இருந்

தாள். அவள் புலவரிடம் மிக்க மரியாதை காட்டி வந்தாள்; அவர்களை இன்முகம் காட்டி வரவேற்று உபசரித்தாள். சுருங்கக் கூறின், பாண்டியன் அரண்மனை பசுந்தமிழ்ப் பாவலவர்க் ..நத் தாயகம் என்று கூறலாம்.

## 2. 'ஆரியப்படை கடந்த' நெடுஞ்செழியன்

### தமிழக எல்லைப் போர்

தமிழகத்தின் வட எல்லை வேங்கடம் என் ..து முன்பே கூறப்பட்டது அன்றோ? அதற்கு வடபால் கங்கையாறுவரை ஆந்திரப் பேரரசு பரவி இருந்தது. அதற்குச் 'சாதவாஹனப் பேரரசு' என்பது பெயர். வேங்கடப்பகுதி ஆந்திரப் பெருநாட்டின் தென் எல்லை யாதலால், ஆந்திர நாட்டுப் படைகள் அங்கு நிலையாகத் தங்கி இருந்தன. சங்க காலத்தில் வேங்கடத்திற்கு வடக்கே இருந்தவர் 'ஆரியர்' என்றும், விந்த மலைக்கு அப்பால் இருந்தவர் 'வட ஆரியர்' என்றும் கருதப்பட்டு வந்தனர் போலும்! வேங்கடத்து எல்லைப்புறப் பகுதியில் இருந்த ஆந்திர நாட்டுப் படைகள் அவ்வப்போது தமிழகத்தை தாக்க முயன்றன. அதனால், அடிக்கடி இரு திறத்தார்க்கும் எல்லைப்புறப் போர்கள் நடைபெற்று வந்தன. இத்தகைய எல்லைப் புறத்தைச் சங்க காலத்தில் மூவேந்தரும் ஒன்றுபட்டுக் காத்து வந்தனர் போலும்! அதனாற்றான் தமிழகத்தின் தெற்கே இருந்த பாண்டியன் எல்லைப்

புறப் போர்களில் ஈடுபட்டான்; வடநாட்டு வீர ரைப் போரில் வென்றான்; வென்று '**ஆரியப் படை கடந்த** நெடுஞ்செழியன்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான். இதுவரை கூறப்பெற்ற செய்தி, 'ஆரியப்படை கடந்த' என்ற அடைக்கு ஆராய்ச்சியாளர் சிலர் கூறும் விளக்கமாகும்.

**வடநாட்டு வென்றி**

"இவன் 'வட ஆரியரை வென்றவன்' என்று சிலப்பதிகாரம் செய்த இளங்கோ அடிகள் கூறியுள்ளதனால், இப்பேரரசன் செங்குட் டுவனைப் போல இமயம்வரை சென்று அங்குத் தன் **கயல் முத்திரையைப்** பொறித்து மீண்டிருக்கலாம்; அங்ஙனம் சென்ற பொழுதோ - மீண்டு வந்த பொழுதோ, இவன் ஆரியரால் தாக்கப்பட்டிருக் கலாம். அப்பொழுது நடைபெற்ற போரில் இவன் ஆரியப்படைகளை வென்றிருக்கலாம்; அதனால் 'ஆரியப்படை கடந்தவன்' என்ற சிறப் புப் பெயரைப் பெற்றிருக்கலாம்," என்று வேறொரு சார் ஆராய்ச்சியாளர் அறைகின்றனர்.

உண்மை எதுவாக இருப்பினும், இவன் ஆரி யப்படையை வென்றவன் என்பது, இவனது சிறப்புப் பெயரே நன்கு விளக்கி நிற்கின்றது. இவனுக்கு முன்பு அல்லது பின் இருந்த நெடுஞ் செழியன் ஒருவன் 'தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்' எனப்பட்டான். அத னால் இவர்கள் இத்தகைய சிறப்படைகளைப் பெறுதல் வழக்கமாகும் என்பதறியலாம்.

## 3. கோப்பெருந்தேவியின் சிலம்பு

### முத்துப் பரல்

அரசியின் காற்சிலம்பு முத்துப் பரலை உடையது; மிக்க விலை உயர்ந்தது. பாண்டிய நாட்டின் துறைமுகம் **கொற்கை** என்பது முன்பு கூறப்பட்டதன்றோ? கொற்கை முத்தெடுப்பதற்கும் பெயர்பெற்ற துறைமுகம் ஆகும். அங்கிருந்து ஏராளமான முத்துகள் இந்திய உள் நாடுகட்கும் வெளிநாடுகட்கும் ஏற்றுமதியாயின. ஆதலின், பாண்டியன் கோப்பெருந்தேவியின் சிலம்பில் முத்துகள் இருந்ததில் வியப்பில்லை அன்றோ? இங்ஙனமே கடல்கடந்து வாணிகம் செய்யும் பெரு வணிகர் வீட்டு மகளிர் மாணிக்கப் பரலையுடைய சிலம்பினை அணிதல் பண்டை மரபாகும்.

### அரண்மனைப் பொற்கொல்லன்

அரண்மனையில் பலவகை வேலைகளையும் செய்யத் தொழிலாளர் பலர் இருப்பது வழக்கம். அவர்கட்கு 'அரண்மனை வண்ணார், அரண்மனை வேட்கோவர்,[1] அரண்மனைப் பொற்கொல்லர்' எனப் பெயர்கள் உண்டு. கோப்பெருந்தேவியாகிய அரசிக்கு அணி செய்த பொற்கொல்லர் **'மாதேவி - பெருந்தட்டார்'** என்று பல்லவர் பட்டயத்தில் குறிக்கப்பட்டுளர். இப்பொற்கொல்லர் வழி வழியாக அரண்மனைத் தட்டாராக வேலைப் பார்ப்பது வழக்கம். அரசனுக்குத் தனியே அணிகள் செய்து தந்தவன் அரசனது விருதுப் பெய

1. மட்கலத் தொழிலாளர்கள்.

ருடன் '**பெருந்தட்டான்**' என்பது சேர்த்து வழங்கப்பட்டான். இது நீண்ட காலமாக எல்லா அரசர் மரபுகளிலும் இருந்துவந்த பழக்கமாகும். எனவே, நெடுஞ்செழியன் காலத்திலும் இவ்வழக்கம் இருந்தது என்பது தெரிகிறது. கோப் பெருந்தேவிக்கு அணிகள் செய்துவந்த பொ கொல்லன் ஒருவன் இருந்தான். அவன் உண்மை யாகவே சிறந்த தொழிலாளி. அவனிடம் நூ பொற்கொல்லர் வேலை செய்துகொண்டிரு தனர்.

## அரசியின் சிலம்பு

அரசியின் முத்துப் பரலையுடைய சிலம்பு ஒன்று பழுதாகிவிட்டது. அதனால் அதனைப் புதுப்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அரசமாதேவி அதனைத் தன் பெருந்தட்டானிடம் தந்து பழுதுபார்க்குமாறு ஆணையிட்டாள். அவன் அதன் விலைமதிப்பற்ற தன்மையை உணர்ந்து அதனைத் தன்னிடமே வைத்துக் கொண்டான். குறித்த நாளில் அரசி அவனை வரவழைத்து, "வேலை முடிந்ததா?" என்று கேட்டாள். அவன் மிக்க வருத்தமடைந்த முகத்தைக்காட்டி, "அஃது, எங்கோ காணப்படவில்லை. என்ன மாயமோ அறியேன்; அதனைத் தேடிக் கொண்டுவர ஒற்றர் பலரைப் பல பக்கங்களிலும் அனுப்பியிருக்கிறேன். விரைவில் அகப்பட்டு விடும்" என்றான். இவ்வாறு நாட்கள் பல சென்றன. அரசி சிலம்பைப் பற்றி விசாரித்துக் கொண்டே இருந்தாள். பொற்கொல்லன் அத

னைத் தேடி அலைவதாகக் கூறிக் காலம் கழித்து வந்தான்.

## 4. கண்ணகியின் காற்சிலம்பு

### மாணிக்கப் பரல்

கண்ணகி, துறைமுக நலனும் தலைநகர நலனும் ஒருங்கேபெற்ற காவிரிப்பூம்பட்டினம் என்னும் சோழர் பெருநகரில் மாநாய்கன் என்ற பெருங்குடி வணிகனுக்கு அருமை மிக்க திருமகள் ஆவள். 'மாநாய்கன்' என்னும் பெயரானே அவன் 'வணிகருள் மன்னவன்' என்பது தெளிவாகும். அவன் முத்து, மாணிக்கம், வைரம், வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம் முதலியவை நிரம்பப்பெற்ற பெருவணிகன்; ஆதலின், தன் செல்வ மகளுக்கு மாணிக்கப் பரலையுடைய காற்சிலம்புகளைச் செய்ய விழைந்தான்; சோழர் அரண்மனைத் தட்டானைக் கொண்டு அரச மாதேவியர் அணியத்தக்க அற்புத வேலைப்பாடமைந்த சிலம்பினைச் செய்வித்தான். அதைக் கண்டோர், "இஃது அரச மாதேவியரே அணியத்தக்க விலை மதிப்புடையது" என்று கூறினர். இத்தகைய சிலம்பைக் கண்ணகி அணிந்திருந்தாள்.

### 'சிலம்புள ; கொள்க'

கோவலன் மாதவியிடம் நட்புக்கொண்டு, குன்றமனைய தனது பெருஞ் செல்வத்தைத் தோற்று நாணமுற்றுக் கண்ணகியிடம் வந்து நின்றபொழுது, அக்கற்புடை மங்கை, "மாதவிக்குத் தரத் தன்னிடம் பொருள் இல்லை என்று

நாணுகிறான்' என்று எண்ணி, மலர் முகத்துடன் அவனை நோக்கி, "என் சிலம்புள; கொள்க" என்றாள். 'சிலம்பு' என்றவுடன் கோவலன் யோசித்தான்; மதுரைக்குச் சென்று அதனை விற்று, வரும் பணத்தை வாணிக முதலாகக் கொண்டு வியாபாரம் செய்யலாம் என்று முடிவு செய்தான்; அதனைத் தன் ஆருயிர்க் காதலியிடம் தெரிவித்தான். கணவன் சொற்படி நடக்கும் பெருமனைக் கிழத்தியாகிய கண்ணகி, உடனே மதுரை செல்ல உடன்பட்டாள்; அவ்வாறே கணவனுடன் வைகறையில் - புறப்பட்டு. உற்றார் உறவினர்க்குத் தெரிவியாமல் மதுரை சென்றாள். அவன் மதுரை சென்ற விவரம் முன் பகுதியில் விளக்கமாகக் கூறப்பட்டதன்றோ?

**போற்றருஞ் சிலம்பு**

மதுரையில், மாதரி என்ற ஆயர் மகள் மனையில் தன் இன்னுயிர் மனைவி சமையல் செய்து ஊட்ட உண்டு மகிழ்ந்த கோவலன், அவளது சிறந்த கற்புடைமையையும் தனது தவறான ஒழுக்கத்தையும் எண்ணி எண்ணி மனம் புண்ணாகி உளம் குழைந்தான்; அவளைப் பலவாறு புகழ்ந்து பாராட்டினான். அவள் கணவனைக் கடைக்கண்ணால் நோக்கி, "என் சிலம்பைக் கொண்டு விற்று வருக; அது தரும் பணத்தைப் பெற்று வாணிகம் செய்யலாம்" என்று கூறித் தன் காற்சிலம்பினைக் கழற்றிக் கொடுத்தாள். ஒழுக்கமற்ற தன்னை உயிர் நாயகனாகக் கருதியுள்ள கண்ணகியின் மேன்மைக் குணத்தை

எண்ணி எண்ணிக் கோவலன் நைந்தான்; அவளது போற்றருஞ் சிலம்பு ஒன்றைக் கையில்எடுத்துக்கொண்டான்; அவளை அன்புடன் நோக்கி விடைபெற்றுச் சென்றான்.

## கூற்றத் தூதன்

கோவலன் பீடுமிக்க மாடமதுரைக் கடைத் தெருவிற் சென்றான். அப்பொழுது கூற்றுவன் விட்ட தூதனைப்போல மாதேவி பெருந்தட்டான் எதிரில் வந்துகொண்டிருந்தான். அவனைச் சூழ பொற்கொல்லர் நூற்றுவர் வந்தனர். அங்ஙிலை கண்ட கோவலன்," இவன் அரண்மனைப் பொற்கொல்லன் போலும்! அதனுற்றான் இவ்வளவு சிறப்புடன் நடந்து வருகின்றான். இவனே இச் சிலம்பினை விலைமதிக்கத் தக்கவன்" என்றெண்ணினான். அவ்வளவில் பெருந்தட்டான் கோவலன் பக்கமாக வந்தான். வந்த அவனைக் கோவலன் குறுகி, "ஐய, அரசமாதேவியர் அணியத் தக்க காற்சிலம்பொன்று என்னிடம் இருக்கின்றது. நீ அதனை விலை மதிக்கவில்லையோ?" என்று கேட்டான். அதுகேட்ட பொற்கொல்லன்," அடியேன் விலை மதிக்க அறியேன் ஆயினும், அரண்மனையில் நகைகள், முடிகள் முதலியன செய்துவரும் அரண்மனைப் பொற்கொல்லன் யானே" என்று கூறிக் கைதொழுதான். கோவலன் தன் மூட்டையை அவிழ்த்துச் சிலம்பினை எடுத்தான். கண்ணகியின் சிலம்பு கிளிச்சிறை என்னும் பசும்பொனாற் செய்யப்பட்டது. அதன் மேற்புறம் மாணிக்

கமும் வயிரமும் பதிக்கப்பட்டிருந்தன. சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இவ் வியத்தகு விலைமதிப்பற்ற சிலம்பினைக் கண்ட பொற்கொல்லன் பெருவியப்படைந்தான்; எனினும், அதனை மறைத்து, "ஐயனே, அரசமாதேவியரே இதனை வாங்க வல்லவர்; ஆதலின் யான் அவரிடம் இதனைக் காட்டிவரும்வரை நீ இவ்விடத்திலேயே இருப்பீராக," என்றான். கோவலனும் அதற்கு இசைந்து, பொற்கொல்லன் சுட்டிக் காட்டிய இடத்தில் தங்கியிருந்தான்.

**பொற்கொல்லன் யோசனை**

கோவலனை விட்டுச்சென்ற பொற்கொல்லன் தனக்குள், "நான் அரசமாதேவியின் காற்சிலம்பைக் களவாடிக்கொண்டேன் என்பது பலரும் அறிய மன்னனுக்கு வெளிப்படுமுன்பே, வேற்று நாட்டிலிருந்து வந்த இப்புதியவன் கொணர்ந்த சிலம்பை அரசனிடம் காட்டித் தப்பித்துக் கொள்வேன்," என்று முடிவுசெய்து கொண்டான்; தன்பின் வந்த பொற்கொல்லரைத் தத்தம் வேலைகளைக் கவனிக்குமாறு ஏவி, அரண்மனையை நோக்கி விரைந்தான்.

## 5. அரண்மனையில் ஆடல் - பாடல்

**அரண்மனையில் ஆடரங்கம்**

சாதாரணமாக எல்லா அரசர் அரண்மனைகளிலும் நாடக அரங்கமும் நடன அரங்கமும் இசை அரங்கமும் இருத்தல் மரபு. நாடக அரங்

இல் 'வேத்தியல்' எனப்படும் அரசர்க்கர்டும் கூத்து நடிக்கப்படும். நடன அரங்கில் பலவகை உயர் தர நடனவகைகள் நடித்துக் காட்டப்படும். இசை அரங்கில் பலவகை இசைக் கருவிகளை இசைந்துப் பலவகைப் பண்களுடன் பாடல்கள் பாடப்படும்.

## ஆடல் - பாடல்

கோவலன் சிலம்பு விற்கச் சென்ற அன்று மாலை அரண்மனை அரங்கத்தில் நடன மாதர் நடித் தனர்; இசை மாதர் பல்லியங்களை ஒலித்துப் பண் வகைகளைக் காட்டிப் பாடினர். அந்த ஆடல் - பாடல் செய்த மகளிருடைய முகத்தோற்றம், நடிப்பு, வகை, இசை இனிமை இவற்றில் எல் லோர் உள்ளமும் ஈடுபட்டன. தமிழகம் பண்டு தொட்டே இவற்றிற் சிறந்தது; இவற்றை நாக ரிகக் கலைகளாக மதித்து வளர்த்து வந்தது. ஆத லின், தமிழ்வளர்த்த பாண்டிநாட்டு இசையிலும் கூத்திலும் அனைவர்க்கும் இன்பம் உண்டானது என்பதில் வியப்பில்லை.

## அரசி ஊடல்

சிறந்த புலவனும் பலகலை விற்பன்னனுமான நெடுஞ்செழியன் உயர்தரமான ஆடல் - பாடல் களில் ஈடுபட்டதில் வியப்பில்லை அல்லவா? அவன் தலையசைத்து நாடக மகளிரைப் பாராட்டினன். பாண்டியர் பெருமான் தம்மைப் பாராட்டுதலைக் கண்ட நாடக மகளிர் முகங்கள் அன்று மலர்ந்த தாமரை மலர்களைப் போன்றவை ஆயின. அவர்

கள் தங்கள் மன்னர் பெருமானைப் பார்த்துக் கொண்டே ஆடினர்; பாடினர். அரசனும் முக மலர்ச்சியுடன் தலையசைத்துத் தன்னை மறந்தவ னாய் அவர்களைப் பாராட்டினன். அரசி இந் நிலை மையை விதிவசத்தால் தவறாகக் கருதினாள்; அர சன் நாடக மகளிர் நடிப்பில் ஈடுபட்டதைத் தவ றாகக் கருதினாள்; கருதி தனக்குத் தலைநோய் என்று சாக்குக்கூறி, எழுந்து அந்தப்புரத்திற் சென்று விட்டாள்.

### மன்னன் மனநிலை

ஆடலும் பாடலும் முடிந்தன. அனைவரும் அரண்மனையை விட்டு நீங்கினர். அரசன், அரசி தன்னைவிட்டுத் தனியே சென்றுவிட்ட கார ணத்தை அப்பொழுதுதான் உணர்ந்தான்; அவ ளது தவறான எண்ணத்தை அகற்றி அவளது ஊடலைத் தீர்க்க விரும்பினான்; விரும்பி, அந்தப் புரம்நோக்கிக் கவலையோடு சென்று கொண்டிருந் தான்.

## 6. கோவலன் கொல்லப்படல்

### பொற்கொல்லன் இடையீடு

அரசனைக் காணவேண்டும் என்று கோவலன், தந்த சிலம்புடன் விரைந்துவந்த பொற்கொல்லன் அரசியின் ஊடலைத் தீர்க்கக் குழம்பிய மன நிலையிற் சென்று கொண்டிருந்த மன்னனைக் கண்டான்; மன்னனது மனநிலையைத் தன் மதி நுட்பத்தால் உணர்ந்தான்; அதுவே தன் காரி

யத்தை முடித்துக்கொள்ள ஏற்ற சமயம் என்பதை எண்ணி, அரசன் அடிகளில் வீழ்ந்து வணங்குகின்றான். மன்னவன் அவனை ஏறிட்டுப் பார்த்து, "என்ன செய்தி?" என்று வேகமாகக் கேட்டான். பொற்கொல்லன், "அரசே, நுமது கொற்றம் வாழ்க. நமது அரசமாதேவியினது காற்சிலம்பு ஒன்று என்னிடம் வந்திருந்தது. அஃது எவ்வாறோ காணமற் போய்விட்டது. யான் தேவரீரிடம் சொல்ல அஞ்சிப் பல இடங்கட்கும் ஆட்களை ஏவித் தேடினேன். கள்வன் இன்றுதான் அகப்பட்டான். அவன் அதனை நமது நகரத்திலேயே விற்க வந்துவிட்டான். அவனுக்கு என்ன தைரியம், பாருங்கள்! நான் அவனை ஓர் இடத்தில் இருக்கவிட்டுத் தங்களைக் காண ஓடிவந்தேன்," என்று கூறி நின்றான்.

### அரசன் அவசரம்

அரசன் பொற்கொல்லன் கூற்றைக் கேட்டான். அரசியினது ஊடலைத் தீர்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்த அவன், பொற்கொல்லன் சொன்ன அச்சிலம்பைக் கொடுத்தேனும் அரசமாதேவியின் ஊடலைத் தீர்க்கலாம் என்று எண்ணினன். மேலும், விதியினை வெல்ல வல்லார் யாவர்? பாண்டியன், விதிவசத்தால் அறிவு கெட்டுக் கொலையாளிகளை அழைத்தான்; 'இவன் கூறும் கள்வனிடம் அரசமாதேவியின் சிலம்பு இருக்குமாயின், அவனைக் கொன்று, அச்சிலம்பைக் கொண்டு வருக," என்று ஆணையிட்டான்.

**கொலைக் களம்**

உடனே பொற்கொல்லன் கொலையாளிகளை அழைத்துக்கொண்டு கோவலன் இருந்த இடத்தை அடைந்தான்; கோவலனைச் சுட்டிக் காட்டினன். கொலையாளிகள் கோவலனை உற்று நோக்கினர்; அவனது மாசற்ற முகத்தைக் கண்டனர்; அவன் கள்வன் அல்லன் என்று தீர்மானித்தனர். உடனே பொற்கொல்லன், "களவு நூலில் வல்ல கள்வர் குற்றமற்ற முகத்துடன் காணப்படுவர். அதனால் ஏமாறலாகாது," என்று சில உதாரணங்களைக் கூறித் தேற்றினன். வந்திருந்த கொலையாளிகளுள் ஓர் இளைஞன் உடனே சென்று தன் வாளால் கோவலனை வெட்டி வீழ்த்தினன்.

## 7. அரசி கண்ட தீக்கனா

**அரசனும் அரசியும்**

கோவலனைக் கொல்லுமாறு பணித்து அந்தப்புரம் சென்ற அரசன் அரச மாதேவியின் ஊடலைத் தீர்க்க முயன்றான்; அவளது காற்சிலம்பு அகப்பட்டுவிட்டது என்பதை அறிவித்தான். உடனே, அரசி அஃது எப்படி அகப்பட்டது?" என்றாள். அரசன் பொற்கொல்லன் புகன்ற விவரத்தைக் கூறினன். அரசி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாள். சிறிது நேரத்திற்குள் புதிதாக அகப்பட்ட சிலம்பும் வந்து சேர்ந்தது. கோப்பெருந்தேவி அதனைக் கவனிக்காமலே மகிழ்ச்சி மீதூர எடுத்து வைத்துக்கொண்டாள்.

**அரசி கண்ட தீக்கனு**

இங்ஙனம் ஊடல் தீர்ந்த கோப்பெருந்தேவி கணவனைக்கண்டு "பெருமானே, ஆடரங்கில் உம்மைவிட்டுப் பிரிந்த யான் வந்து படுத்தேன்; நல்ல உறக்கம் வந்தது; அந்த உறக்கத்தில் **பயங்கரமான கனவு** ஒன்று கண்டேன். அதை நினைத்தால் என் உடல் நடுங்குகின்றது," என்ருள். உடனே அரசன் நகைத்துக்கொண்டே, "பேதாய் அஞ்சாது கூறுக" என்ருன். அரசி, "தலைவரே, நான் கனவில், உமது வெண்கொற்றக் குடை வீழக்கண்டேன்; செங்கோல் வளையக் கண்டேன்; அரண்மனை வாயிலில் உள்ள ஆராய்ச்சி மணி நடுங்கக் கண்டேன்; எட்டுத் திசைகளும் அதிர்ந்திடக் கண்டேன்; சூரியனை இருள் விழுங்கக் கண்டேன்; இரவில் வில்லிடக் கண்டேன்; பகலில் மீன் விழக் கண்டேன். 'இக்கொடிய காட்சியினுல் மன்னற்கு வரவிருக்கும் தீங்கொன்று உண்டு' என்று என் சேடியர் கூறினர்; கூறி, என்னை வாழ்த்திக்கொண்டு பலவகை வரிசைகளை ஏந்தியவராய் என்னைச்சூழ உமது மாளிகைவரை வந்து சென்றனர். அக்கனவினைக் கண்டது முதல் என் மனம் அமைதியான நிலையில் இல்லை," என்ருள்.

## 8. கண்ணகி வழக்குரைத்தல்

**கண்ணகி வீராவேசம்**

இங்ஙனம் கோப்பெருந்தேவி சொல்லிக்கொண்டிருக்கையில், கணவனை இழந்த கண்ணகி,

தன் ஒற்றைக் காற்சிலம்பைக் கையில் ஏந்திய வளாய் வீராவேசத்துடன் அரண்மனை வாயிலில் வந்து நின்றாள். அப்பெண்மணி தன் கணவன், பாண்டியன் ஏவலால் தவறாகக் கொல்லப்பட்டான் என்பதை அறிந்தாள்; உடனே சொல்லொணாத் துயரத்துடன் புறப்பட்டாள்; கூந்தல் பறக்கக் 'கோ'வென்று அலறி மதுரை மாநகரத் தெருக்களிற் பலவாறு புலம்பினாள்; இறுதியில் கணவன் கொல்லப்பட்ட இடத்தைக் குறுகினாள்; ஆவி சோர்ந்தழுதாள்; ஆவியற்ற அவனது உடலைத் தழுவினாள்; அவன் உயிர் பெற்று எழுந்து மீண்டும் பிணமானதைக் கண்டாள்; பலவாறு யோசித்தாள்; முறை தவறிய மன்னனுக்கு அவனது தவற்றை விளக்கிப் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்பதைத் தீர்மானித்தாள்; உடனே அரண்மனை நோக்கிக் கடுகி நடந்து, முன் சொன்னபடி அரண்மனை வாயிலில் நின்றாள்.

**காவலனிடம் கழறுதல்**

கண்ணகியின் ஆவேசத்துடன் கூடிய பயங்கரமான தோற்றத்தை வாயிற் காவலன் கண்டு நடுங்கினான். கண்ணகி அவனைப் பார்த்து, "வாயிற் காவலனே! வாயிற் காவலனே! அறநெறி தவறி மறநெறி சென்ற பாண்டியன் அரண்மனை வாயிற் காவலனே! 'கணவனை இழந்த ஒருத்தி, கையில் தனிச்சிலம்பு ஒன்றை ஏந்தி உன்னைக் காண வந்திருக்கிறாள்,' என்று அரசனிடம் சென்று அறிவிப்பாய்," என்றாள்.

## காவலன் அறிவிப்பு

உடனே வாயிற்காவலன் ஓடினுன் ; அரசனை வாழ்த்திப் பணிந்தான் ; "எருமைத்தலை அசுரனைக் கொன்றவள் அல்லள் ; சிவபெருமானுடன் ஆடல் செய்த பத்திரகாளியும் அல்லள் ; வேல் ஏந்திய துர்க்கையும் அல்லள் ; அறுவர்க்கு இளைய நங்கையாகிய பிடாரியும் அல்லள்; தாருகாசுரனது மார்பைக் கிழித்த தேவதையும் அல்லள் ; முக வாட்டம் கொண்டும் மனக்கோபம் கொண்டும் கணவனை இழந்த ஒரு நங்கை சிலம்பு ஒன்றைக் கையில் ஏந்தி நமது வாயிலில் வந்து நிற்கின்ருள். அவள் தம்மைப் பார்த்துப் பேசவேண்டுமாம்," என்று பணிவுடன் பகர்ந்தான். உடனே அரசன், "அவளை வர விடுக" என்றனன். உடனே காவலன் கடிதோடிச் சென்று வீரபத்தினியை அழைத்துவந்து அரசன்முன் விட்டுச் சென்ருன். அரசனும் அரசியும் அவளை உற்று நோக்கினர்.

## காவலன் - கண்ணகி உரையாடல்

காவலன் கண்ணகியைப் பார்த்து, "விழிநீர் வார இங்கு வந்து நிற்கும் இளமங்கையே ! நீ யார் ?" என்று கேட்டான். உடனே கண்ணகி சீற்றம் மிக்கவளாய், "ஆராயாது அநியாயம் செய்த அரசனே ! தேவரும் கண்டு பாராட்டத் தக்கவாறு ஒரு பறவையின் துன்பத்தைப் போக்கத் தன் உடலை அர்ப்பணம் செய்த சிபிச் சக்ரவர்த்தியும், தன் ஆராய்ச்சி மணியினை அசைத்த ஆவின் துயரத்தைத் தன் துயராகக்

கருதித் தான் பெற்ற அரும்புதல்வனை ஆழியிற் கிடத்தித் தேரூர்ந்து கொன்ற **மநு** வேந்தனும் பெருமையோடு ஆண்ட அருமை மிக்க காவிரிப் பூம்பட்டினம் எனது பழம்பதியாகும். யான், அப்பதியில் பழியற்ற வணிகர்மரபில் தோன்றின மாசாத்துவான் மகள்; நின்னால் கொல்லப்பட்டு உயிரிழந்த கோவலனுக்கு மனைவி. நாங்கள் ஊழ்வினை விரட்டியதால் வாழவேண்டி இந் நகரம் வந்தோம். என் கணவன் இன்று நின்னால் கொல்லப்பட்டான். என் பெயர் கண்ணகி என்பது," என்று மடமட என மொழிந்தாள்.

உடனே அரசன், "அம்மையே! கள்வனைக் கொல்வது கடுங்கோல் அல்லவே; செங்கோல் என்பதை அறிக," என்றான். அது கேட்டுச் சினங்கொண்ட கண்ணகி, "நல்ல துறையில் நாட்டம் செல்லாத அரசனே! எனது கணவன் கள்வன் அல்லன்; அவன் எனது காற்சிலம்பை விற்க வந்தவன்; விற்று வரும் பணத்தை வாணிக முதலாக வைத்து இந்நகரில் பிழைக்க வந்தான். எனது பொற்சிலம்பு **மாணிக்கப் பரலை** உடையதாகும்" என்றாள். உடனே அரசன், "அப்படியா! (தன் மனைவியைப் பார்த்து) நமது சிலம்பு முத்துப்பரலை உடையது அன்றோ? சரி, உனது சிலம்பைத் தருக" என்றான். கண்ணகி அதனை அவன்முன் வைத்தாள். மன்னவன் அச்சிலம்பினை உடைத்தான். உடனே அதற்குள் இருந்த மாணிக்கப்பரல் தெறித்து மன்னவன் வாயிற்பட்டது. அஃது அரசனது வாயைப் பேசவொட்டாது அடைத்து விட்டதுபோலும்!

**மன்னவன் மயக்கம்**

மாணிக்கப் பரலைக் கண்ட மன்னவன் திடுக்கிட்டான். அவன் உடல் ஆட்டம் கொண்டது; அவனது குடை தாழ்ந்தது; செங்கோல் தளர்ந்தது; "பொற்கொல்லன் பேச்சை நம்பிய நானோ அரசன்! நானே கள்வன்! நான் உயிர்களைப் பாதுகாக்கும் பாண்டியர் மரபுக்கு இழுக்கைத் தேடி விட்டேனே! இப்பழி இம்மரபைத் தொடர்ந்து செல்லுமே! அந்தோ! என் ஆயுள் கெடுவதாகுக!" என்று புலம்பிக்கொண்டே அரியாசனத்திலிருந்து மயங்கிக் கீழே விழுந்தான். அவன் விழுந்ததைக் கண்ட கோப்பெருந்தேவி குலைந்து நடுங்கி, "அந்தோ! தாயோ-தந்தையோ-உடன்பிறந்தாரோ இறந்தால் பிறரைக் காட்டி, 'இவரை உன் தாயாக-தந்தையாக-உடன்பிறந்தவராகக் காண்பாய்' என்று கூறிவிடலாம். கணவனை இழந்த பெண்ணுக்கு அங்ஙனம் பிறரைக் காட்ட முடியாதே! அம்மே! யான் நின் நிலைக்குப் பெரிதும் இரங்குகின்றேன்" என்று வருந்திக் கூறி அரசனுடைய இணையடிகளைத் தொழுது வீழ்ந்தாள்.

**கண்ணகி கூற்று**

இங்ஙனம் வீழ்ந்த அரச மாதேவியைக் கண்ணகி பார்த்து, "பழுதிலாப் பாண்டியர் மரபினுக்குப் பழியைத் தேடிய பார்த்திபன் தேவியே! 'அல்லவை செய்தார்க்கு **அறம் கூற்றம்**' என்று பெரியோர் கூறுதல் பொய்யாகாது.

யான் இனிச் செய்யப்போவதைக் காண்பாய். எனது கண்ணீரையும், கையில் இருந்த தனிச் சிலம்பையும், ஆவி குடிபோன வடிவத்தையும், மண்ணிற் புரளும் மருங்குழலையும் கண்டு அஞ்சிக் கூடலான்[1] கூடாயினான்.[2] கோவேந்தன் தேவியே! கொடிய வினைசெய்த யான் ஒன்றும் தெரியாதவள்; ஆயினும், முற்பகல் செய்த பிறன்கேடு பிற்பகலில் தன்கேடாகும் என்பதை நன்கறிவேன். நான் பத்தினிப் பெண்கள் பிறந்த நாட்டிற் பிறந்தவள். நான் பத்தினி என்பது உண்மையாயின், அரசனை ஒழித்தவாறே மதுரையையும் அழிப்பேன்," என்று கூறி ஆவேசமுற்றவளாய்,

"நான்மாடக் கூடல் மகளிரே, மைந்தரே, தெய்வங்காள், மாதவர்களே, கேளுங்கள்: என் காதலனுக்குத் தவறிழைத்த கோநகரத்தைச் சீறினேன். நான் குற்றமற்றவள் ஆயின், இந் நகரத்தை எரி உண்க; தீயோர் ஒழிக,"

என்று கூறித் தன் இடப்பக்க மார்பை வலக் கையினால் திருகி, மதுரையை மும்முறை வலம் வந்து, அதனை வட்டித்து எறிந்தாள். உடனே நகரின் நாலாப்பக்கங்களிலும் தீப்பற்றித் தீயோர் இல்லங்களை மட்டும் எரிக்கத் தொடங்கியது. முன்பு மயங்கி வீழ்ந்த அரசன் அப்பொழுதே இறந்தான். அவன் பாதங்களைப் பற்றி வீழ்ந்த அரசமாதேவியும் அப்பொழுதே ஆவி துறந்தாள்.

---

1. மதுரையான். 2. பிணமானான்.

## 9. நெடுஞ்செழியன் நல்லியல்புகள்

பாண்டியர் பழியஞ்சி வாழ்ந்தவர்; பைந் தமிழைப் பாங்குற வளர்த்தவர்; கடவுள் பக்தி மிக்குடையவர்; கண்ணை இமைகள் காப்பது போலக் குடிகளைக் காத்து வந்தவர். இத்தகைய புகழ்மிக்க மரபில் தோன்றியவன் கோவலனைக் கொல்வித்த நெடுஞ்செழியன். அவன் பெரும் புலவன்; சிறந்த ஒழுக்கம் உடையவன்; முத் தமிழை முழுமனத்துடன் வளர்த்தவன். அப் பெருமகன் ஆட்சியில் குடிமக்கள் அமைதியான வாழ்க்கையை நடத்தி வந்தனர். அயல் நாட்டு வாணிகம் வளம்பெற நடந்தது. உள்நாட்டு வாணிகம் வணிகர் உள்ளம் குளிர நடைபெற்று வந்தது. நாட்டிற் பஞ்சம் இல்லை. பருவ காலங் களில் மழை தவறாது பெய்துவந்தது. குடிகள் வளமுற வாழ்ந்து வந்தனர். இத்தகைய சிறப்பு கட்கெல்லாம் நெடுஞ்செழியனது செங்கோற் சிறப்பே சிறந்த காரணமாகும்.

'இத்தகைய செங்கோல் மன்னன் ஆரா யாது கோவலனைக் கொல்வித்ததேன்'? என்பது கேட்கத் தக்க கேள்வியாகும். இதற்குக் காரணம் '**ஊழ்வினை** உறுத்து வந்து ஊட்டும்' என்றதாகும். அவ்வினை பலிக்கும் காலம் வந்து விட்டதாற்றான், எதனையும் தீர யோசித்துச் செய்யும் வேந்தன், பொற்கொல்லன் பேச்சைக் கேட்டதும் அறிவு மயங்கி, "அவனைக் **கொன்று** அச்சிலம்பைக் கொணர்க" என்று ஏவலர்க்கு ஆணையிட்டான்.

இதனாற்றான் அவன் 'வேண்டும்' என்றே கொலை செய்தவன் ஆகான். இதனை உளங்கொண்டு தான், செங்குட்டுவன் பத்தினிக்கு விழாச் செய்த பொழுது அப்பத்தினிக் கடவுள் தோன்றி,

"தென்னவனான பாண்டியன் குற்றமற்றவன். அவன் தேவர் உலகத்தில் விருந்தினனாக இருக்கின்றான். நான் அவன் மகள் ஆவேன்,"

என்று தெளிவாகத் தெரிவித்தாள். எனவே ஊழ்வினைப்பயன், நெடுஞ்செழியனைக் கொண்டு தன் செயலை முடித்துக்கொண்டது என்னல் பொருத்தமாகும்.

# சோழன் - நெடுமுடிக்கிள்ளி

## 1. அரசன் ஆதல்

### உள்நாட்டுக் கலகம்

கோவலன் மகளான மணிமேகலை உற்ற வயதடைந்த பொழுது, பூம்புகாரைத் தலைநகராகக் கொண்ட சோழ நாட்டைச் சோழன் மணக்கிள்ளியின் பெயரனான **நெடுமுடிக்கிள்ளி** என்பவன் ஆண்டுவந்தான். அவன் சேரன் - செங்குட்டுவனுக்கு மாமன் மகன் ஆவன். அவன் தந்தை இறந்த காலத்தில் நெடுமுடிக்கிள்ளி சோழ அரசனாக முடி சூடிக்கொண்டான். அவனை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சோழ மரபினர் ஒன்பதின்மர் உள்நாட்டில் கலகம் விளைத்தனர். நெடுமுடிக்கிள்ளியால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் தன் அத்தை மகனான செங்குட்டுவன் உதவியை நாடினான்.

### செங்குட்டுவன் இடையீடு

உடனே, செங்குட்டுவன் கடல்போன்ற தானையுடன் சேர நாட்டிலிருந்து புறப்பட்டான்; சோழ நாட்டிற் புகுந்தான். அவன் வருகையை அறிந்த கலகக்காரர் படை திரட்டினர். இரு திறத்தார்க்கும் உறையூரை அடுத்த 'நேரிவாயில்' என்ற இடத்தில் பெரும்போர் நடந்தது. முடிவில் செங்குட்டுவன் வெற்றி பெற்றான்; அதனால் நெடுமுடிக்கிள்ளியின் அரசு நிலைத்தது. செங்

குட்டுவன் சிறிதுகாலம் சோழ நாட்டில் தங்கி அமைதியை உண்டாக்கித் தன் நாடு மீண்டான்.

**சோழன் அரசாட்சி**

நெடுமுடிக்கிள்ளி சிறந்த தமிழ்ப்பற்று உடையவன்; புலவர் பலரை ஆதரிக்கும் இயல்புடையவன்; தமிழ் இசையை அநுபவிப்பதில் சமர்த்தன்; அதனால் பண்ணில் வல்ல பாணரைச் சிறப்பித்தான்; நாடகத்தில் நாட்டமுடையவன்; அதனால் மாதவி போன்ற நாடக மகளிரை நன்கு ஆதரித்தான். சுருங்கக் கூறின், அவனது அரசாட்சியில் **இயல்-இசை-நாடகம்** என்னும் முத்தமிழும் நன்கு வளர்ந்தன என்னல் தவறாகாது.

**குடும்பம்**

நெடுமுடிக்கிள்ளி அரசனாக இருந்த காலத்தில் திருப்பாதிரிப்புலியூரை அடுத்த பண்ணுருட்டி முதலிய இடங்கள் பாண ராஷ்டிரம்* எனப் பெயர் பெற்றிருந்தன. அப்பகுதியைப் **பாணர்** என்ற அரச மரபினர் ஆண்டுவந்தனர். அவர்கள் தங்களை மஹாபலி பாணன் மரபினராகக் கூறிக்கொண்டனர். அவர்கள் மரபில் வந்த அரசமகள் ஒருத்தியே நெடுமுடிக்கிள்ளியின் கோப்பெருந் தேவி ஆவாள். அவளுக்கு **உதயகுமரன்** என்ற ஒரே மைந்தன் பிறந்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து ஏறத்தாழ இருபது வயதுடைய வாலிபனாக இருந்தான்.

---

* 'பாண ராஷ்டிரம்' என்னும் பெயர் நாளடைவில் 'பண்ணுருட்டி' என மருவியது.

# 2. காவிரிப்பூம்பட்டினம்

## நகரப் பிரிவுகள்

காவிரிப்பூம்பட்டினம் காவிரியாறு கடலொடு கலக்கும் இடத்தில் அமைந்திருந்தது. இதற்குச் சம்பாபதி, காகந்தி, புகார் என்ற வேறு பெயர்களும் இருந்தன. இந்நகரம் **அகநகர், புறநகர்** என்ற இரு பெரும் பிரிவுகளைப் பெற்றிருந்தது. அகநகர் **பட்டினப் பாக்கம்** என்றும், புறநகர் **மருவூர்ப் பாக்கம்** என்றும் பெயர் பெற்றிருந்தன.

## பட்டினப் பாக்கம்

பட்டினப் பாக்கத்தின் நடுவில் மன்னவன் மாளிகை மாண்புடன் விளங்கியது. அதனைச் சூழ்ந்து தேர்ப்பாகர், யானைப்பாகர், குதிரை செலுத்துவோர், படைத்தலைவர், வீரர் என்பவர் தங்கி வசிக்கும்இடங்கள் அமைந்திருந்தன. அங்கு அரசர் வாழும் அழகு மிக்க தெருக்களும், அந்தணர் உறையும் அகன்ற தெருக்களும், வணிகர் வசிக்கும் வளம் மிக்க வீதிகளும், உழவர் உறையும் உணவுமிக்க மறுகுகளும் இருந்தன. இவற்றுக்கப்பால் மருத்துவர், சோதிடர், சூதர், மாகதர், முத்துக்கோப்போர், முதலியவர் வசிக்கும் தெருக்களும் இருந்தன. தேரோடும் பரந்த தெருக்களும் கடைவீதிகளும் இருந்தன. அகநகரில் நுதல்விழி நாட்டத்து இறையோன்கோவில், அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோவில், நீலமேனி நெடியோன் கோவில், பலராமன் கோவில்

முதலிய பலவகைக் கோவில்களும் இருந்தன. அவற்றில் நாள்தோறும் பூசை முறைப்படி நடந்துவந்தது. மாநகரத்து மக்கள் அக்கோவில் களிற் சென்று வழிபட்டுவந்தனர். அக்கோவில் களுக்கு அப்பால் அறச்சாலைகளும் வேள்விச் சாலைகளும் கலைக்கழகங்களும் பிறவும் அமைந்து விளங்கின. வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் நின்ற மன்றம், பூத சதுக்கம், பாவை மன்றம் என்னும் பலவகை மன்றங்களும் உய்யானவனம், சம்பாபதிவனம், கவேரவனம், உவவனம் என்ற மலர்ச் சோலைகளும் திகழ்ந் திருந்தன.

### வெள்ளிடை மன்றம்

இஃது அகநகரில் இருந்த பரந்த இடமாகும். அங்கு அந்நகருக்குப் புதியராய் வருபவர், தாம் கொணர்ந்த பெட்டி, மூட்டை முதலிய பொருள் களை எண்ணிச் சேர்த்து, அவற்றில் தம் பெயரை எழுதிவைத்துச் செல்வர். அப்பொருள்கள் அங்கு எடுப்பாரின்றி வைத்தபடியே இருக்கும். அவற்றைத் தொடும் புதியவர் அறிவு மயங்கி அங்கேயே நிலைத்து நின்று விடுவர்.

### இலஞ்சி மன்றம்

இலஞ்சி மன்றத்துக்கு அருகில் ஒரு குளம் உண்டு. அக்குளத்தில் கூனர், குறளர், ஊமர், செவிடர், தொழுநோயாளர் முதலியோர் மூழ்கி அம்மன்றத்தை வலம் வருவாராயின், குறை நீங்கி அழகிய உடலைப் பெறுவர்.

**நெடுங்கல் மன்றம்**

இது நெடிய ஏணிக்கல் ஒன்று நிற்கப்பெற்ற வெளியிடம். அவ்வொளிக்கல் பேரொளி வீசும் தன்மையுடையது. அவ்வொளி நோயாளர் உடலிற் பட்டவுடன், நோய் மாயமாய் மறையும். மருந்திடப்பட்டோர், பாம்பு கடிக்கப்பட்டோர், பேய் பிடிக்கப்பட்டோர் முதலியோர் அக்கல்லை வலம் வந்து வணங்கினால் தீங்கின்றித் திரும்புவர்.

**பூத சதுக்கம்**

இது நான்கு பெரிய தெருக்கள் கூடும் இடத்தில் அமைந்து விளங்கியதொரு மன்றம் ஆகும். இதனில் ஒரு பூதம் இருந்தது. அது, 'போலித் துறவிகள், ஒழுக்கம் கெட்ட பெண்கள், அரசனைக் கவிழ்க்கக் கருதும் அமைச்சர், பிறர் மனை விரும்பும் பேதையர், பொய்க்கரி புகல்வோர், புறங் கூறுவோர் ஆகியவர்கள் என் கைப் பாசத்து அகப்படுவர்' என்று பெருங்குரல் எடுத்துப் பேசும். அதன் எச்சரிக்கையை மீறித் தீச்செயல் புரிபவர் அதனால் கொல்லப்படுவர். அதனால், அம் மாநகரில் தீச்செயல் நடைபெறவில்லை. இத்தகைய பூதம் நின்றிருந்ததால் அச்சதுக்கம் **பூத சதுக்கம்** எனப்பட்டது; அச் சதுக்கத்தில் இருந்ததால் அப்பூதம் **சதுக்கப் பூதம்** எனப் பெயர் பெற்றது.

**பாவை மன்றம்**

இம்மன்றத்தில் ஒரு பாவை நிறுத்தப்பட்டிருந்ததால் இஃது இப்பெயர் பெற்றது. அர

சனே நெறிதவறி நடப்பினும், அறங்கூர் அவை யத்தார் தவருன தீர்ப்புக் கூறினும் அப்பாவை வாய்பேசாது கண்ணீர்விட்டு அழும்.

**மருவூர்ப் பாக்கம்**

மருவூர்ப் பாக்கம் என்பது கடற்கரை ஓரத் தில் இருந்த பிரிவாகும். அங்கு மான்கள் போன்ற சாளரங்களையுடைய மாளிகைகள் பல நிறைந்து விளங்கின; திசை மயங்கிச் செல்லும் கப்பல்களுக்குத் திசை அறிவித்து நின்ற கலங் கரை விளக்கம் வானளாவிக் காட்சி அளித்தது. பருத்தி நூலாலும் பட்டு நூலாலும் எலி மயிர், ஆட்டு மயிர்களாலும் ஆடைகள் நெய் யும் சாலியர் வீதிகள் இருந்தன. வெண்கலம் - இரும்பு - செம்பு - வெள்ளி முதலிய உலோ கங்களைக் கொண்டு பலவகைப் பொருள்களைச் செய்யும் தொழிலாளர் தெருக்கள் இருந்தன. தையற்காரர், இல்லம் அமைப்பவர், பாய் மிடை பவர், ஓவியம் தீட்டுவோர், சிற்ப வல்லுநர், பொற்பணி செய்பவர் இவர்தம் தெருக்கள் ஒரு பக்கம் இருந்தன. மற்றொரு பக்கம் பூ வாணிகர், இலை வாணிகர், பிட்டு வாணிகர், அப்ப வாணிகர், சந்தனம் விற்பவர், முத்து - பவளம் முதலிய வற்றை விற்பவர், பலவகைக் கூலங்களை விற் பவர், மீன் வாணிகர் முதலியோர் வீதிகள் இருந் தன. கடல் வாணிகத்தைக் கருதிக் காவிரிப்பூம் பட்டினத்திற் குடி புகுந்திருந்த பலநாட்டு வணி கர் வாழ்ந்த தெருக்கள் பலவாகும்.

## நாள் அங்காடி*

மருவூர்ப் பாக்கம், பட்டினப் பாக்கம் என்ற இரண்டிற்கும் இடையே சோலை ஒன்றுண்டு. அதனில், அம்மரங்களையே கால்களாகக் கொண்டு கட்டப்பட்ட கடைகளையுடைய சந்தை ஒன்றுண்டு. அது **நாளங்காடி** எனப் பெயர் பெறும். அதனில் தோரணவாயிலும் முத்துப் பந்தரும் மற்றும் காட்சிக்கு இனிய பல நிலையங்களும் சிறந்து தோன்றின. அங்கு மக்கட்குத் தேவையான பலவகைப் பண்டங்களும் விற்கப்பட்டு வந்தன. அவ்விடத்தில் நாள் அங்காடிப் பூதத்தின் பீடிகை அமைந்து இருந்தது. அப்பூதம் இந்திரனால் முசுகுந்த சோழனுக்கு அளிக்கப்பட்டது. அச் சோழன் அதனை நாளங்காடியில் நிறுத்தி வழிபட்டு வந்தான். அதனால் அது 'நாளங்காடிப் பூதம்' எனப் பெயர் பெற்றது. வீரரும் மறக்குடி மகளிரும் அப்பூதத்திற்குப் பலியிட்டு வணங்கி வந்தனர்.

## இந்திர விழா

பூம்புகாரில் ஆண்டுதோறும் தேவர் கோனாகிய இந்திரனுக்கு விழாச் செய்யப்பட்டு வந்தது. அஃது **இந்திர விழா** எனப்பட்டது. அஃது ஆண்டு தோறும் சித்திரை மாதத்தில் சித்திரை நாளில் தொடங்கி இருபத்தெட்டு நாட்கள் நடைபெற்று வந்தது. அந்நகரத்து ஆடவரும் பெண்டிரும் அவ் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்

---

* இது தெலுங்கில் 'அங்கடி' என வழங்குகிறது.

வர். தேவரும் மாறு வேடத்தில் வந்து அவ்விழாவினைக் கண்டு போவது வழக்கமாம். விழா முடிந்த மறுநாள் மாநகரத்தார் யாவரும் கடலாடிக் களிப்பது மரபு. இந்த விழாவின்போது தமிழ் நாட்டில் இருந்த பல சமய வாதிகளும் புலவர்களும் அறிஞர்களும் பூம்புகாரிற் கூடுவது மரபு. பொது இடங்களில் உள்ள பழைய மணலை மாற்றிப் புது மணல் பரப்பப்படும். பல சமய வாதங்களையும் கேட்டு மக்கள் நல்லறிவு பெறுதல் வழக்கம். இக் காரியங்களால் இந்திர விழா அக்கால மக்கட்கு அறிவுச் செல்வத்தை அளித்து வந்தது என்னலாம். இந்த விழாவினைச் சோழர் பெருமானை நெடுமுடிக்கிள்ளி ஆண்டுதோறும் நடத்தி வந்தான்.

## 3. மணிமேகலையும் உதயகுமரனும்

### மணிமேகலை

**மணிமேகலை** என்பவள் மாதவிக்கும் கோவலனுக்கும் பிறந்த மகள் என்பது பலமுறை கூறப்பட்டதன்றோ? கோவலன் கொலையுண்ட பிறகு அவளும் அவளது தாயும் பௌத்த சமயச் சார்புடையவராகிப் பல நல்லறங்களைச் செய்து வந்தனர். மணிமேகலை இளமை முதலே தமிழ் இலக்கண - இலக்கியங்களைப் படித்துத் தன் மரபுக்கேற்ற ஆடல் - பாடல்களில் புலமை பெற்றிருந்தாள். அவளது தாயைப் பெற்ற பாட்டியான **சித்திராபதி** என்பவள் அவளை நடனத்துறையில் ஈடுபடுத்தி மாதவியைப் போல நாடகக் கணி

கையாக்க முயன்ருள். நல்லொழுக்கமும் சமய வுணர்ச்சியும் கொண்ட மணிமேகலை அதற்கு உடன்படவில்லை. அவள் பொதுநலத் தொண்டு செய்து மன அமைதிபெற வழி தேடிக்கொண் டிருந்தாள்.

**உதயகுமரன்**

**உதயகுமரன்** நெடுமுடிக் கிள்ளிக்கு மகன் - இளவரசன் என்பது முன்பே மொழியப்பட்ட தன்றே? அவன் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்ற இடங்களில் மணிமேகலையைக்கண்டு அவள்மீது அன்பு கொண்டான்; கோவலன் மாதவியைப் பெற்றிருந்தாற்போலத் தான் மணி மேகலையைப் பெற்று வாழ விரும்பினன்; தன் கருத்தை மணிமேகலையின் பாட்டியான சித்திரா பதி என்பாளுக்குத் தெரிவித்தான். சித்திராபதி தன்னுல் இயன்றமட்டும் மணிமேகலைக்கு உதய குமரனைப் பற்றி வருணித்தாள். மணிமேகலை அவள் பேச்சிற்கு இணங்கவில்லை. அதனுல் அவள் வெறுப்புற்று நீங்கினாள். எனினும், உதய குமரன் மணிமேகலையை மறவாமல் அவளைப் பல இடங்களிலும் பின் தொடரலானுன்.

**உவவனம் - பளிக்கறை***

ஒரு நாள் மணிமேகலை தன் உயிர்த்தோழி யான **சுதமதி** என்பவளுடன் உவவனம் சென் ருள். அவள் அங்குச் சென்றதை அறிந்த உதய குமரன் தன் தேரிற் சென்று உவவனத்து மதில்

* பளிங்கினுல் செய்யப்பட்ட அறை.

வாயிலை அடைந்தான். உதயகுமரனது தேர் ஒலி கேட்ட மணிமேகலை தன் தோழியைப் பார்த்து, "உதயகுமரன் என்மேல் மிக்க விருப் பம் உடையவன் என்று கேள்வியுற்றேன். அவன் எனக்காக இங்கு வந்துவிட்டான் போலும்! என் செய்வேன்!" என்று கையைப் பிசைந் தாள். உடனே சுதமதி அவளை அங்கிருந்த பளிக்கறையிற் புகுத்தித் தாழ்க்கோலிட்டுக் கொண்டு உள்ளிருக்கச் செய்தாள்; தான் அவ் வறைக்கு அருகில் நின்றிருந்தாள். அவ்வமயம் உதயகுமரன் அங்கு வந்து, "மணிமேகலை எங் கிருக்கிருள்? அவள் பௌத்த சங்கத்தார் இருப் பிடத்தை விட்டு இங்கு ஏன் வந்தாள்?" என்று கேட்டுக்கொண்டே சுற்றிலும் பார்த்தான். அவன் கண்கள் மணிமேகலையைத் தேடின.

**சுதமதி அறவுரை**

அப்பொழுது சுதமதி, "அறநெறி தவருத சோழர் மரபில் வந்த அரசிளங்குமரனே, ஒழுக் கம் தவருத உத்தமர் மரபில் வந்துள்ள இள வரசே, நீ வயதிற் சிறியவன் ஆயினும், அறிவிற் பெரியவன். யான் உனக்கு என்ன சொல்வேன்! ஆயினும், ஒன்று உரைப்பேன், கேட்டருள்க. இந்த உடல் வினையின் பயனுக வந்திருப்பது; பல வினைகட்குக் காரணமாக இருப்பது; வாசனைப் பொருள்களை அணியாவிடில் தீ நாற்றத்தை வெளிப்படுத்துவது; தளர்ச்சியும் அழிவும் உடை யது; கொடிய நோய்கட்கு இருப்பிடமாக இருப் பது; குற்றங்கட்கு இருப்பிடமாகும்; கவலை,

துன்பம், முதலியவற்றிற்கு இருப்பிடம். ஆதலின், அறிவுடைப் பெருமக்கள் இவ்வுடல்மீது நாட்டத்தைச் செலுத்தார்,'' என்று நயமுற நவின்றாள். உதயகுமரன் மனமுடைந்து அவ்விடம் விட்டு அகன்றான்.

## அம்பலத்தில் மணிமேகலையும் உதயகுமரனும்

பின்னர் மாதங்கள் பல சென்றன. அவள் மணிமேகலா தெய்வத்தின் அருளினால் விண்ணிற் பறந்து செல்லவும் உருமாறவும் வன்மை பெற்றாள்; உணவு எடுக்க எடுக்கக் குறையாத அக்ஷய பாத்திரம் ஒன்றைப் பெற்றாள்; அது கொண்டு, பூம்புகாரில் தங்கி, எல்லா உயிர்கட்கும் அன்ன தானம் செய்து வந்தாள். அவளது உயர்ந்த வாழ்க்கை நிலைமையைக் கண்ட உதயகுமரன் மனம் மாறி அவள்பால் மிக்க மதிப்புக் கொண்டான். இதனை யறிந்த சித்திராபதி அவனது உள்ளத்தைப் பழையபடி மாற்றி, அவளைச் சென்று காணுமாறு தூண்டினாள். அவளால் அறிவு வேறுபட்ட அரசிளங்குமரன், மணிமேகலை இருந்து அறம் செய்துவந்த அம்பலத்தை அடைந்தான்.

பழம் பிறப்பை உணரும் ஆற்றல் பெற்ற மணிமேகலை, உதயகுமரன் பழைய பிறப்பில் தனக்குக் கணவனாக இருந்தவன் என்பதை உணர்ந்தாள். அதனால் அவனைக் கண்டதும் வணங்கினாள்; உடனே சம்பாபதித் தெய்வத்தின் கோவிலுக்குட் சென்று, 'காய சண்டிகை' என்ற வித்யாதர மகளைப்போல உரு மாறினாள்; அதனால்

உதயகுமரனது தொல்லை ஒழியும் என்று நம்பி ஞள். மணிமேகலை இங்ஙனம் உருமாறியதை அறியாத உதயகுமரன், அவளைத் தேடிக் களைத்துத் தன் இருப்பிடம் சென்ருன். மணிமேகலை காயசண்டிகை வடிவத்தில் இருந்துகொண்டே அன்னதானம் செய்து வந்தாள்.

## 4. மணிமேகலையும் நெடுங்கிள்ளியும்

### காவலர் வியப்பு

மணிமேகலை அக்ஷய பாத்திரம் ஒன்றைக் கொண்டு ஆயிரக் கணக்கானவர்க்கு அன்னம் அளிப்பதை அம்பலத்தைக் காத்து நின்ற காவலர் கண்டு வியப்படைந்தனர்; "இப்பாத்திரத்தின் சிறப்பையும் இப் பெண்மணியின் செய்தியையும் நமது சோழர் பெருமானுக்குத் தெரிவிப்போம்," என்று நினைத்தனர்; நினைத்து சோழன் அரண்மனையை நோக்கி நடந்தனர்.

### அரசனும் அரசியும்-சோலைக் காட்சி

அன்று சோழர் பெருமான் அரண்மனைப் பூஞ்சோலையில் நுழைந்தான். அவனைப் பின் பற்றி அவனது கோப்பெருந்தேவியான சீர்த்தி என்பவள் சென்ருள். இருவரும் பொழிலின் எழிலை நுகரலாயினர். அங்கு ஒரு பக்கம் தும்பி என்ற ஒருவகை வண்டுகள் குழல் இசை காட்டின; ஒருவகை வண்டினம் நல்லியாழ் ஒலியை எழுப்பின; வரிக்குயில்கள் பாடின; மாமயில்கள் தோகை விரித்து ஆடின; இந்நிலையில் பூம்பந்தர் அழகிய காட்சி நல்கியது. பெண் அன்னத்துடன்

பெண் மயிலும் ஆண் மயிலும் கூடிச் சிறகுகளை விரித்து ஆடின. அவ்வாட்டத்தில் 'நீல மயில், நீல மேக வர்ணனுன கண்ணனை ஒத்திருந்தது; பெண் அன்னம், வெண்ணிறத்தவனுன பலராமனை ஒத்திருந்தது; பெண் மயில், நப்பின்னைப் பிராட்டியை ஒத்திருந்தது', என்று சொல்லி அரசனும் அரசியும் உள்ளம் களித்தனர். ஒருபால், இளமங்கை ஒருத்தி, பொன் தட்டிலே பாலை வார்த்துக் கிளிக்கு ஊட்டுதல் போல மயில் ஒன்று கோங்கம்பூவின் அருகில் இருந்த மாங்கனியை அசைத்துக்கொண்டு இருந்தது. வேருெரு பக்கம் அரசமகளிர் ஆடுதற்கென்று அமைக்கப்பட்டு இருந்த ஊஞ்சலில் பெண் குரங்கு வீற்றிருந்தது; ஆண் குரங்கு அவ்வூஞ்சலை ஆட்டிக்கொண்டு இருந்தது. அக்காட்சியைக் கண்ட அரசனும் அரசியும் தம்முள் நகைத்தனர். வேருெரு பக்கம்-பசிய இலைகளையுடைய நெடிய மரமும் வெண்கடம்ப மரமும் எதிரெதிர் ஓங்கி வளர்ந்திருந்தன. அவற்றைக் கண்ட பெருமானும் பெருமாட்டியும், 'இவை நீலவண்ணத்து நெடியோனையும் பால் நிற வண்ணனுன பலராமனையும் நினைப்பூட்டுகின்றன' என்று பேசிக்கொண்டனர்.

**பின்பற்றிச் சென்றவர்**

இவ்வாறு சோலைக் காட்சியைக் கண்டு வியந்துநின்ற அரசனையும் அரசியையும் பின்பற்றிச் சென்றவர் யாவர்? அவர் பலராவர்; அவருள் ஆடல் மகளிர், பாடல் மகளிர், நாடகக் காப்பியத்தை நன்கறிந்து நடிக்கவல்லவர், யாழ் வாசிப்

பவர், மத்தளம் ஒலிப்பவர், குழல் ஊதுவோர், குழல்ஓசைக்கு ஏற்பப்பாடுவோர், இசைப்பாடலை அநுபவித்துப் பாடுவோர், முத்துகளைக் கோப்ப வர், குங்குமக் குழம்பை எழுதுவோர், அழகிய இதழ்களை மாலையாகத் தொடுப்பவர், கண்ணாடி காட்டி நிற்பவர், கூந்தலுக்கு வாசனை ஊட்டு வோர் என்பவர் குறிக்கத்தக்கவர் ஆவர்.

**சோலைச் சிறப்பு**

மேற் சொன்ன சோலையில் குருந்த மரங்கள், செம்முல்லைச் செடிகள், செருந்தி மரங்கள் முதலி யனவும், முல்லைச் செடிகளும் கருவிளை மரங் களும் இருந்தன. அங்குக் குட்டைக் கால்களை யுடைய கீரிப்பிள்ளைகளும் நீண்ட செவிகளை யுடைய முயல்களும் கண்கள் அடிக்கடி பிறழப் பெற்ற மான்களும் இருந்தன. அச்சோலையில் நீரை நிறைக்க வேண்டுமாயின் நிறைத்தற்கும், போக்க வேண்டுமாயின் போக்குதற்கும் ஏற்ற வசதியமைந்த எந்திரக் கிணறு ஒன்று இருந்தது; கற்களை ஒழுங்காக அடுக்கிக் குன்றுபோல அமைக் கப்பட்ட செய் குன்றுகள் சில இருந்தன; பூப்பந் தர்கள் இருந்து மணம் செய்தன; பொய்கைகள் இருந்தன; நீரை மறைத்துக் காட்டும் கேணி இருந்தது; ஒளிந்து வசிக்கத்தக்க இடங்கள் இருந்தன; பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட பள்ளி ஒன்றிருந்தது. அரசனும் அரசியும் அச் சோலையில் விளையாடிப் பொழுது போக்கினர்.

**பசும்பொன் மண்டபம்**

அச்சோலையில் மண்டபம் ஒன்று இருந்தது.

அது மகத நாட்டிற் பிறந்த இரத்தின வேலைக்காரர், மஹாராஷ்டிர தேசத்துக் கம்மாளர், அவந்தி நாட்டுக் கொல்லர், யவன தேசத்துத் தச்சர், தமிழ் நாட்டுக் கட்டடத் தொழிலாளர் ஆகியவர் ஒன்று கூடிச் செய்தமைத்ததாகும். அதன் தூண்கள் பவளத்தால் ஆகியன. முத்து மாலைகளால் கூரை அலங்கரிக்கப்பட்டு இருந்தது. விதானம் கோணமாகப் பொன்னால் அமைக்கப்பட்டிருந்தது. சாணம் கொண்டு மெழுகப்படாத அம் மண்டபத் தரை பசும்பொன்னால் இயன்றதாகும்.

## பொழுது போக்கு

இத்தகைய வியத்தகு வேலைப்பாடு கொண்ட பசும்பொன் மண்டபத்தில் இருந்த ஆசனத்தில் நெடுமுடிக்கிள்ளியும் கோப்பெருந்தேவியும் கொலு வீற்றிருந்தனர். உடன் சென்ற இசைவாணர் இசைக் கருவிகளை மீட்டுத் தமிழ்ப் பண்களில் இனிய பாடல்களைப் பாடத் தொடங்கினர். ஆடல் மகளிர் ஆடத் தொடங்கினர். அரசனும் அரசியும் ஆடல் - பாடல்களிற் கருத்தைச் செலுத்தி யிருந்தனர்.

## காவலர் வாழ்த்தும் செய்தி செப்பலும்

அரசனைக் காணவேண்டும் என்று அம்பலத்திலிருந்து புறப்பட்ட காவலர், ஆடல் பாடல்களில் கருத்தைச் செலுத்தியிருந்த காவலன் முன் தோன்றினர்; தோன்றி, “நாடு கவரவேண்டும் என்ற வேட்கை தள்ளியதால் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படைகளு

டன் வந்த சேர-பாண்டியரைக் 'காரியாறு'[1] என்னும் இடத்தில் கலங்க அடித்துத் துரத்திய இளங்கோனுக்கு முன் பிறந்த பெருமானே, நீ நீடு வாழ்க!'' என்று வாழ்த்திப் பணிந்தனர். இங்ஙனம் பணிந்து எழுந்த காவலர், "இந்நகரத்திற்குப் புதிய மங்கை ஒருத்தி வந்திருக்கின்றாள். அவள் 'யானைத் தீ' என்னும் கொடிய வயிற்று நோயினால் துன்பப்பட்டவள். அவள் கையில் அக்ஷய பாத்திரம் ஒன்று இருக்கின்றது. அஃது அள்ள அள்ளக் குறையாத அன்னத்தைக் கொண்டுள்ள தெய்விகப் பாத்திரமாகும். அந்நங்கை அதனைக் கொண்டு எளியவர் பலர்க்கு அன்னதானம் செய்து வருகின்றாள். அவள் நினது சிறைக் கோட்டத்திற் புகுந்து, உனது பெயரை வாழ்த்திக்கொண்டு, சிறைப்பட்டார்க்குத் தாராளமாக உணவளித்து வருகின்றாள்'' என்று கூறினர். அது கேட்ட அரசன், "யான் இது கேட்க மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். நீங்கள், அவ்வற மகளை இங்கு அழைத்து வாருங்கள்,'' என்றான்.

## மன்னனும் மணிமேகலையும்

காவலர் மணிமேகலையை அழைத்துவந்து மன்னன் முன் விட்டனர். மன்னன், இளமை

---

1. **காரியாறு** - இது 'காலேரு' (கறுப்பாறு) என்று தெலுங்கில் வழங்குகிறது. இங்குப் பாடல்பெற்ற சிவஸ்தலம் இருக்கிறது. அஃது இப்பொழுது இராமகிரி எனப் பெயர் பெறும். சென்னையிலிருந்து இராமகிரிக்குப் 'பஸ்' போகின்றது. 'காரிக்கரை' என்பதே இராமகிரி என்று வழங்குகின்றது.

பொருந்திய அப்பேரழகியைக் கண்டு, "மடக் கொடீ, வருக! வருக!!" என்றான். காயசண்டிகை வடிவத்தில் இருந்த மணிமேகலை, "அரசே, நின் அருள் வாழ்வதாக" என்று வாழ்த்தினாள். மன்னவன், "தாங்கருந் தன்மையுடைய தவத்தை மேற்கொண்ட மங்கையே, நீ யார்? இப்பாத்திரம் ஏது?" என்று கேட்டான். உடனே மணிமேகலை, "அரசே, நீ நீடு வாழ்க. நான் காய சண்டிகை என்னும் வித்யாதர மகள். பெருந்தகையே, நீ வாழ்க! நினது வளநாடு செழிப்புறுக. நினக்குத் தீங்கின்றாகுக. இப்பாத்திரம் அக்ஷயப் பாத்திரம்; அள்ள அள்ளக் குறையாத உணவுடையது; ஒரு தெய்வம் இதனை எனக்குக் கொடுத்தது. இதனால் எனக்கிருந்த 'யானைத் தீ' என்னும் கொடிய நோய் ஒழிந்தது; ஏழைகட்கு உயிர் தழைக்கச் செய்யும் உணவினைத் தருவது," என்றாள். அது கேட்ட காவலன் மகிழ்ந்து, "நங்காய், நின் தொண்டைப் பாராட்டுகின்றேன். நான் செய்யத் தகுவது ஏதேனும் இருப்பின், சொல்லுக; உடனே செய்வேன்" என்றான். உடனே மணிமேகலை, "பெருமானே, நினது வளமிக்க பூம்புகார் நகரத்தில் நினது செங்கோலுக்குக் களங்கத்தைக் கொணரத்தக்க முறையில் உள்ள சிறைக்கோட்டத்தை அறவோர் உறையும் அறக்கோட்டமாக மாற்றவேண்டும்" என்று வேண்டினாள். அரசன் அவளது பிறர்நலம் கருதும் பெருங்குணத்தைப் பாராட்டி, அவள் விரும்பியவாறே சிறைக்கோட்டத்தை அழித்துத் தூய்மை செய்து, அவ்விடத்தைப் பல

வகையான நற்காரியங்கள் நடத்தற்குரிய அறச் சாலையாகச் செய்வித்தான்.

## 5. உதய குமரன் கொல்லப்படல்

### காஞ்சனன்

மணிமேகலை இந்த நற்காரியத்தைச் செய்தனள் என்பதை அறிந்த உதயகுமரன் அவளைக் காண அம்பலம் சென்றான்; அங்குக் காயசண்டிகை வடிவில் இருந்த மணிமேகலையைக் கண்டான். அப்பொழுது உண்மையான காயசண்டிகை என்ற வித்யாதரப் பெண்மணியின் கணவனான **காஞ்சனன்** என்ற வித்யாதரன் அங்குத் தோன்றினான். அவன் மணிமேகலையைத் தன் மனைவி என்றே நம்பி, அவளை நெருங்கி, "நீ ஏந்தியுள்ள இப்பாத்திரம் ஒன்று; ஆனால் இதனைக்கொண்டு உணவு கொள்வோர் பலர். இஃது எனக்கு மிக்க வியப்பைத் தருகின்றது. உன்னை வருத்திய 'யானைத் தீ' நோயைப் போக்கத் தேவர்கள் இதனைக் கொடுத்தார்களோ?" என்று சொல்லி, அவளிடம் நெருங்கினான்.

### மணிமேகலை அறிவுறுத்தல்

மணிமேகலை அவளது செயலைக் கண்டு வெறுத்து அவனிடம் வார்த்தையாடாது அகன்று, உதயகுமரனை நெருங்கி நின்று, இளமையின் நிலையாமையை அவனுக்கு அறிவுறுத்த நினைந்து, அங்கே இயல்பாக வந்த முதுமைப் பருவத்தாள் ஒருத்தியைக் காட்டி, "மன்னவன் மகனே, முன்னர் அழகும் இளமையும் கட்ட

மைந்த உடலும் பெற்றிருந்த இவள், இன்று அனைத்தையும் இழந்து, காண்போர் அருவருக்கத் தக்க நிலையில் இருத்தலைக் காண்க," என்று கூறினள்.

**காஞ்சனன் கோபம்**

இவ்வாறு மணிமேகலை உதயகுமரனிடம் பேசியதைக் காஞ்சனன் தவருகக் கருதி, "என் மனைவியாகிய இவள், என்னிடம் பேச விரும்பவில்லை; என்னை மதிக்கவில்லை; அயலான் பின்னே செல்லுகின்ருள்; என்னை அயலாணுகக் கருதுகின்ருள்; காதற் குறிப்பைப் புலப்படுத்திக் கொண்டே அறிவுரை கூறுகின்ருள். இவன்மீது கொண்ட பற்றிஞற்போலும் இவள் இங்கேயே தங்கிவிட்டாள்," என்று எண்ணிக் கடுங்கோபம் கொண்டான்; "மேலும் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்" என்று நினைந்து, புற்றில் அடங்கும் பாம்பைப் போல அந்த உலக அறவியிலேயே ஒளிந்திருந்தான்.

**உதயகுமரன் யோசனை**

உதயகுமரன், "மணிமேகலையே காயசண்டிகை வேடத்தில் இருக்கின்ருள். இவளிடம் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டிருந்த அயலான் யாவன் என்பது தெரியவில்லை. இவள் அவனுடன் இன்றிரவு இங்குத்தான் இருத்தல்கூடும். ஆதலின் நான் இரவின் நடுயாமத்தே இங்கு வந்து தெரிந்துகொள்வேன்" என்று தன்னுள் எண்ணிக்கொண்டே சென்று அரண்மனையை அடைந்தான்.

**உதயகுமரன் கொல்லப்படுதல்**

அன்றிரவில் மணிமேகலை சம்பாபதியம்மன் கோவிலில் தங்கினள். பேயும் கண்ணுறங்கும் நடுயாமத்தில் உதயகுமரன் எழுந்தான்; அரண்மனையை விட்டுப் புறப்பட்டான்; உலக அறவியை அடைந்தான்; கோபத்தால் வெந்துகொண்டிருந்த நாகம் இருக்கும் புற்றிற்குள் போகும் ஒருவனைப்போல—அதனுள் புகுந்தான். அவன் வருகையைக் கோபத்துடன எதிர்பார்த்துக் கொண்டிருந்த காஞ்சனன் விரைந்து சென்று, அவனை வாளால் வெட்டி வீழ்த்தினன்.

**காஞ்சனனின் ஏமாற்றம்**

பின்னர் அவன் நேரே மணிமேகலையினிடம் சென்று அவளைப் பற்றிக்கொண்டு விண்வழிப் போய்விடலாம் என்று எண்ணி, அவள் இருந்த இடம் நோக்கிச் சென்றான். அப்பொழுது சம்பாபதியம்மன் கோவிலில் இருந்த **கந்திற்பாவை**, “காஞ்சன, செல்லாதே; செல்லாதே; இவள் உன் மனைவியாகிய காயசண்டிகை அல்லள். இவள் மணிமேகலை. இவள் உதயகுமரனுக்குப் பயந்து இந்த வேடத்தில் இருக்கின்றாள். உன் மனைவி விண்வழிப் போனபொழுது துர்க்கை எழுந்தருளியுள்ள விந்தமலைக்கு நேராகச் சென்றாள்; அதனால் ‘விந்தா கடிகை’ என்ற தெய்வம் அவளைத் தன் சாயையினால் இழுத்துத் தன்வயிற்றில் அடக்கிக்கொண்டது. நீ, இவ்வுதயகுமரனைத் தவறாக எண்ணிக் கொன்றதால், இவ்வினை உன்னைத் துன்புறுத்தும்.” என்றது. அது கேட்ட

காஞ்சனன் இடியோசை கேட்ட நாகம்போல நடுங்கி, மன வருத்தத்துடன் தன் நகரத்திற்குச் சென்றான்.

**மணிமேகலை புலம்பல்**

சம்பாபதி கோவிலில் இருந்த மணிமேகலை நடந்தன எல்லாம் அறிந்தாள்; உடனே தன் வேற்று வடிவை ஒழித்து, உதயகுமரன் இறந்து கிடந்த இடத்தை அடைந்தாள்; அவனது ஆவி யற்ற யாக்கையைக் கண்டு கண்ணீர் விட்டு, "நீ சென்ற பிறப்பில் என் கணவனாக இருந்தனை; இப்பிறப்பில் என்னை உண்மையாகக் காதலித் தனை. உன் ஊழ்வலியால் வீழ்நிலை உற்றனை; உனக்கு நன்மொழிகளைக் கூறி நல்வழிப்படுத்த விரும்பியே, நான் காயசண்டிகை வடிவத்தில் தோன்றினேன். அவ்வடிவமே உனக்கு யமனாக முடிந்ததே!" என்று புலம்பினாள்.

## 6. நெடுங்கிள்ளியின் மானவுணர்ச்சி

**முனிவரும் மன்னனும்**

உதயகுமரன் வெட்டுண்ட செய்தியை, மறு நாட் காலை சக்கரவாளக் கோட்டத்தில் இருந்த முனிவர் கேள்வியுற்றனர்; பின்னர் மணிமேகலை யைக் கேட்டு நடந்தவற்றை அறிந்தனர்; பிறகு அவளையும் உதயகுமரனது உடலையும் வேற்றிடத் தில் ஒளித்து வைத்து, அரண்மனைக்குச் சென் றனர்; அங்கு அரசனைக் கண்டு வாழ்த்தினர்; அவருள் ஒருவர், கற்புடைய மடந்தையரைக் கெடுக்க எண்ணிய அரச குமரர் பலர் பட்ட பாட்

டினை எடுத்து முன்னுரையாகக் கூறி, "வேந்தே, நீ வாழ்க!" என்றனர். உடனே அரசன், "நீவிர் இச் செய்திகளைத் திடீரென்று இங்குக் கூறவந்த காரணம் யாது? உள்ளவாறு உரைமின்" என்றான். உடனே அந்த முனிவர், "பெருமானே, நினது கொற்றம் வாழ்க! அறிஞர் வெறுத்து ஒதுக்கிய கள், பொய், களவு, கொலை, காமம் என்னும் ஐந்தனுள் காமத்தால் கோவலன் அழிந்தான். அவன் பெற்ற மகளாகிய மணிமேகலை என்பவள் துறவு பூண்டாள்" என்று தொடங்கி, உதயகுமரன் வெட்டுண்ட செய்தி முடிய விளக்கமாகத் தெரிவித்தனர்.

## கிள்ளியின் நேர்மை

உடனே அரசன் சிறிதும் மனம் வருந்தாது **சோழிய ஏனாதி**[1]யைப் பார்த்து, "யான் உதயகுமரனுக்குச் செய்ய வேண்டிய தண்டனையைக் காஞ்சனன் செய்தது தவறு. மாதவர் நோன்பும் மடவார் கற்பும் காவலன் செங்கோல் இன்றெனில் என்ன பாடுபடும்! தன் மகனைத் தரையிற் கிடத்தி அவன்மீது தேர்க்காலைச் செலுத்தி முறைசெய்த அரசர் பெருமகனது பரம்பரையில் ஒரு தீவினையாளன் பிறந்தான் என்பது மற்ற அரசர் அறிவதன் முன்னரே, அவனைப் புறங்காட்டிற் கிடத்தி எரித்து விடுக; கணிகை மகளாகிய மணிமேகலையையும் சிறைப்படுத்துக," என்றான். சோழிய ஏனாதி அவ்வாறே செய்தான்.

1. சேனைத் தலைவன்.

## 7. அரசியும் மணிமேகலையும்

தன் தனிமகன் இறக்கக் காரணமாக இருந்த மணிமேகலையைத் தன்னிடமே வைத்துத் தக்க வாறு தண்டிக்கவேண்டும் என்று அரசமாதேவி ஆலோசித்தாள். அதனால் அவள் தன் கருத்தை அரசனிடம் கூறுது, "தவ ஒழுக்கமுடைய அவளைச் சிறையிலிருந்து விடுதலே தக்கது" என்றாள். அரசன் அவள் சொற்படி மணிமேகலையை விடுதலை செய்தான். அரசி மணிமேகலையினிடம் அன்!புள்ளவள் போல நடித்து, அவளைத் தன்னிடமே இருக்கச் செய்தாள்; அவளைக் கெடுக்கப் பல சூழ்ச்சிகள் செய்தாள்; ஒன்றும் பலிக்கவில்லை. அரசி, 'இவள் தெய்வத்தன்மை பொருந்திய 'மங்கை' என்பதை உணர்ந்து, தன் பிழையைப் பொறுக்குமாறு வேண்டினாள். பின்னர் மணிமேகலை அவளிடம் விடை பெற்றுச் சாவகத் தீவு முதலிய இடங்கட்குச் சென்றாள்.

## 8. பூம்புகார் அழிவு

**காவலன் காதல்**

மேற்சொன்ன நிகழ்ச்சிகட்குப் பல மாதங்களுக்கு முன்னர் ஒருநாள் நெடுமுடிக்கிள்ளி கடற்கரையைச் சார்ந்த புன்னை மரச் சோலையில் உலவிக்கொண்டிருந்தான்; அப்பொழுது அங்கு வந்த நாகக் கன்னிகையினிடம் அன்பு கொண்டு அவளை மனைவியாக ஏற்றுக்கொண்டான். அவள் நாகநாட்டரசன் மகளாவள். அவள், "அரசே,

எனக்குப் பிறக்கும் மகனைக் கடல் வழியாக உன்னிடம் அனுப்புவேன்,'' என்று கூறி மறைந்தாள். அரசன் ஒருவாறு ஆறுதல் அடைந்திருந்தான்.

**காவலன் கவலை**

காவலன், உதயகுமரனது இறப்புக்குப் பிறகு, நாகர் மகள் பெற்றனுப்பும் மகனைப் பேராவலுடன் எதிர்பார்த்திருந்தான். ஒருநாள் வணிகர் சிலர் வந்து, "அரசே, நாகநாட்டரசன் மகள் தந்த ஆண் மகவு, நாங்கள் வந்த கப்பல் உடைந்து விட்டதால், என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை," என்று வருத்தத்துடன் கூறி அகன்றனர். உடனே அரசன் அடியற்ற நெடும்பனைபோல் மண்ணில் வீழ்ந்தான்; பிறகு எழுந்து, பல இடங்கட்கும் ஆட்களை ஏவினன்; கடலில் கப்பல்களைச் செலுத்தி அம்மகவைத் தேடச் செய்தான்.

**பூம்புகார் அழிவு**

அரசன் இந்தக் குழப்பத்தில் ஈடுபட்டிருந்ததால், சித்திரைத் திங்களில் செய்ய வேண்டிய இந்திர விழாவை மறந்தான். அதனல் மணிமேகலா தெய்வத்தின் சாபப்படி பூம்புகாரைக் கடல் கொண்டுவிட்டது. அரசன் என்ன கதியானன் என்பது தெரியவில்லை. காஞ்சி நகரில் சோழப் பிரதிநிதியாக இருந்த **இளங்கிள்ளி** சோழப் பேரரசன் ஆயினன்.

---

The B. N. Press, Madras.
Q. H. M. S. No. 20. January 1946.—1000.